வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ஈළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 03 | 18.08.2022 வியாழக்கிழமை | இதழ் : 254 | பக்கங்கள் : 16

## புலம்பெயர் தமிழர் அமைப்புக்கள் எல்லை மீறினால் மீண்டும் தடை!

### பொதுஜன பெரமுன எச்சரிக்கை



கொழும்பு, ஓக. 18

தடை நீக்கம் செய்யப்பட்டுள்ள புலம்பெயர் தமிழ் அமைப்புகள் தவறான நடவடிக்கைகளில் ஈடுபட்டால் அவை மீண்டும் தடைப் பட்டியலில் சேர்க்கப்படும் என்று ஆளுங் கூட்டணியின் பிரதான கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி அறிவித்துள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி யின் ஊடகவியலாளர் சந்திப்பு, அக்கட்சி

15

## தமிழ்த் தேசத்தை அங்கீகரிக்கும் தீர்வின் மூலமே இலங்கை தன்னை பாதுகாத்துக் கொள்ளமுடியும்!

### தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 18

இலங்கையில் போர் முடிவுக்கு வந்து 13 வருடங்கள் தாண்டியும் போர்க்காலத் தில் இருந்த பொருளாதார நிலையை விட இலங்கையின் பொருளாதார நிலை மிக மோசமாகி உள்ளது. இந்தக் கடன் பொறிக்குள் விழுந்திருக்கக்கூடிய இலங்கை தன்னை பாதுகாத்துக் கொள் வதற்கு ஒரு வழி இருக்கின்றது. தமிழ் மக்களுடன் தமிழ் தேசத்தை அங்கீகரிக் கின்ற ஒரு தீர்வை எட்டவேண்டுமென பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலை வருமான கஜேந்திரகுமார் பொன்னம் பலம் தெரிவித்தார்.

கொக்குவிலில் அமைந்துள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி யின் தலைமை அலுவலகத்தில்

15

# நெருக்கடியில் இலங்கைக்கு உதவியது இந்தியா மட்டுமே!

## அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் சுட்டிக்காட்டு



பாங்கொக், ஓகஸ்ட் 18

இந்தியப் பெருங்கடலில் தங்கள் செல் வாக்கை விரிவுபடுத்த பல நாடுகள் தீவிர மாக முயன்று வருகின்றன என இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங் கர் தெரிவித்துள்ளார்.

தற்போதைய பொருளாதார நெருக்கடியில் சர்வதேச நாணய நிதியத்தை சமாளிப்பதற்கு இலங்கைக்கு உதவிய ஒரே அண்டை நாடு இந்தியா மட்டுமே என்றும் அவர் கூறினார்.

தாய்லாந்து தலைநகர் பாங் கொக்கில் நடைபெற்ற ஊடகவி யலாளர் சந்திப்பில் அவர் இதனை கூறினார்.

அம்பாந்தோட்டை துறை முகத்தில் நங்கூரமிட அனுமதி வழங்கப்பட்ட சீனாவின் பொலிஸ் டிக் ஏவுகணை மற்றும் செயற் கைக்கோள் கண்காணிப்பு கப்ப லான யுவான்வாங் 5 பற்றிய கேள்வி ஒன்றுக்கே அவர் இந்தப் பதிலை வழங்கினார்.

15

## டிசெம்பர் வரை விடுமுறையின்றி பாடசாலைகள் நடத்த தீர்மானம்!

கொழும்பு, ஓக. 18

டிசெம்பர் மாத ஆரம் பம் வரையில் விடுமுறை யின்றி வாராந்தம் 5 நாட் களும் பாடசாலையை நடத்துவதற்கு எதிர் பார்க்கப்படுகிறது.

கல்வி அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த இதனைக் கொழும்பில் ஊடகவியலாளர் களிடம் தெரிவித்

15

## வடக்கு மாகாண அதிகாரிகள் சிலருக்கு உடன் இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஓக. 18

வடக்கு மாகாண சபைக்கு உட்பட்ட நிர்வாக அதி காரிகள் சிலருக்கு இடமாற்ற உத்தரவு ஆளுநர் ஜீவன் தியாகராஜாவினால் வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையின் கீழ் உள்ள திணைக்களங்கள், அமைச்சுக்களில் பணியாற்றிய

15

### சீனக் கப்பல் விவகாரம்

## தமிழக கடலோர பகுதிகளில் இந்தியா தீவிர கண்காணிப்பு!



சென்னை, ஓக. 18

தமிழகத்தின் இரா மேஸ்வரம் கடல் பகுதி யில் இந்திய கடற்படை யினர் ஹெலிகொப்டர் மூலம் கண்காணிப்பு நடவடிக்கையை தீவிர படுத்தப்படுள்ளதாக இந்தியத் தகவல் தெரி விக்கின்றன.

இந்தியாவின் எதிர்ப் பையும் மீறி சர்ச் சைக்குரிய சீன தொழில்நுட்ப

15

## ஊசி மூலம் ஹெரோயின் ஏற்றிய பூசகர் உயிரிழப்பு

### யாழ்ப்பாணத்தில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஓக. 18

ஊசி மூலம் ஹெரோயின் போதைப்பொருள் எடுத் துக் கொண்ட பூசகர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கல்வியங்காடு பகுதியைச் சேர்ந்த 34 வயதுடைய பூசகரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நேற்று முன் தினம் மாலை திருநெல்வேலியில் உள்ள உறவினர் வீடொன்றுக்குச் சென்ற அவர் திடீரென உயிரிழந்தார் என்று பொலிஸ் விசார

15

## சர்வகட்சி வேலைத்திட்டத்துக்கு ஐக்கிய மக்கள் சக்தி முழு ஆதரவு

### சஜித் பிரேமதாஸ மீண்டும் அறிவிப்பு

கொழும்பு, ஓக. 18

“சர்வகட்சி கூட்டு வேலைத்திட்டத்துக்கு முழு ஆதரவு வழங்கப் படும்.” - என்று எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று மீண் டும் அறிவித்தார்.

“சர்வக்கட்சி அரசில் இணைந்து அமைச்சு பதவிகளை பெறுவதற்கு தயாரில்லை என்றுதான் அறிவித்துள்ளோம். எனினும், மக்கள் நலன் சார்ந்த திட் டங்களுக்கு சர்வக்

15

## மிகவிரைவில் உள்ளூராட்சி தேர்தல் செப். 20 இற்கு பின் திகதி நிர்ணயம்

கொழும்பு, ஓக. 18

உள்ளூராட்சிச் சபை களுக்கான தேர்தலை விரைவில் நடத்துவதற்கு தேர்தல் ஆணைக்குழு தயாராகி வருகின்றது.

இதற்கமைய எதிர் வரும் 20 ஆம் திகதிக்கு பின்னர் தேர்தல் திகதி நிர்ணயிக்கப்படும் என தெரியவருகின்றது.

உள்ளூராட்சிச் சபை களின் பதவி காலம் முடி வடைந்திருந்தாலும், துறைசார் அமைச்சருக்கு உள்ள அதிகாரத்தின் அடிப்படையில் அவற் றின் பதவிகாலம் ஓராண் டுக்கு நீடிக்கப்பட் டது.

இந்நிலையில்

15

## தாய்லாந்திலிருந்து 24 ஆம் திகதி நாடு திரும்புகிறார் கோட்டாபய!

கொழும்பு, ஓக. 18

தாய்லாந்தில் தங்கியுள்ள இலங்கை யின் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எதிர்வரும் 24 ஆம் திகதி நாடு திரும்பவுள்ளார் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

ராஜபக்ஷ குடும்பத்தின் நெருங்கிய உறவினரும் மிக் விமானக் கொள்வனவு மோசடியில் குற்றச்சாட்டுக்குள்ளாகி யுள்ளவரும் ரஷ்யாவுக்கான முன்னாள் தூதுவருமான உதயங்க வீரதுங்க இத னைத் தெரிவித்துள்ளார்.

தென்னிலங்கை ஊடகங் களுக்கு கருத்துத் தெரிவிக்கும்

15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

வடக்கில் இப்போது அரசியல் வட்டாரங்களில் இரகசியமாக - ஆனால் மிகத் தீவிரமாக இரண்டு விடயங்கள் குறித்து பேசப்படுவதாக இந்த ஊர்க்குருவிக்கு தகவல் கிடைத்தது.

இருக்கின்ற தமிழ்த் தேசியக் கட்சிகள் எல்லாவற்றின் மீதும் நம்பிக்கை இழந்துவிட்ட புலம்பெயர் தரப்பு ஒன்று, புதிய அரசியல் இயக்கம் ஒன்றை - அல்லது கட்சியை ஆரம்பிப்பதற்காக தீவிரமாக முயன்று கொண்டிருக்கின்றது.

அதற்காக பல்வேறு தரப்புக்களுடன் தனிப்பட்ட வகையில் பேச்சுக்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இது எந்த அளவிற்கு சாத்தியமாகும் என்பது தெரியவில்லை. ஆனால் இன்றைய கட்சிகளிடையே நம்பிக்கை இழந்துவிட்டதும், அதற்காக புதிய அமைப்பு ஒன்றை ஆரம்பிக்கவேண்டும் என்றும் யோசிப்பதும், ஆகக்குறைந்தது நமது புலம்பெயர் தமிழர்கள் தாயக விடயங்களை மிக அவதானமாக பார்த்துக்கொண்டிருப்பதை புலப்படுத்தியிருக்கின்றது. அது நல்ல சகுனம்தான்.

இன்னுமொரு தரப்பு, அதிலும் விடுதலைப் புலிகள் இயக்கம் உயிர்ப்புடன் இருந்தபோது அவர்களுக்காகவே இயங்கிய ஒரு தரப்பு, புலிகளின் தலைவரின் விருப்பத்தின்பேரில் (அதற்காக யார் முயற்சி எடுத்திருந்தாலும். புலிகளின் தலைவரின் ஒப்புதலுடன் ஆரம்பிக்கப்பட்டது என்பதால்) ஆரம்பிக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை சிதைந்து விடாமல் பார்க்கவேண்டும் என்பதற்காக முதலில் தமிழரசுக்கட்சியை தூக்கி நிமிர்த்தவேண்டும் என்றும் அதற்காக பொருத்தமான தலைவர் யார் என்றும் ஆராய்ந்துகொண்டிருக்கிறார்களாம்.

மாவை சேனாதிராசா மீது அவர்களுக்கு நல்ல மதிப்பும் மரியாதையும் இருக்கின்றபோதிலும், அவரால் கடந்த பல வருடங்களாக சிறப்பான தலைமையை கொடுக்கமுடியவில்லை என்பது இரகசியமானதல்ல. அவரைப் பொறுத்தவரை கொள்கை மீது பிடிப்புள்ளவர், கொள்கையை விட்டுக்கொடுக்காதவர் என்கின்ற அடையாளம் இருக்கின்றபோதிலும் அவர் தலைவராக தோற்றுப்போய்விட்டார் என்றே நம்புகின்ற அந்தத் தரப்பு, கட்சி தவறானவர்களின் கைகளில் சென்று விடக்கூடாது என்பதற்காக இப்போதே தற்காலிகமாகவேனும் ஒரு பொருத்தமான நபரிடம் கட்சித் தலைமை செல்லவேண்டும் என்று விரும்புவதாகவும் அதற்காக அவர்கள் பலரிடமும் அபிப்பிராயங்களைக் கேட்டு வருவதாகவும் நம்பத்தகுந்த வட்டாரங்களிலிருந்து தெரிய வந்தது.

புதிய இயக்கம் - கட்சி தொடங்குவது, தமிழரசுக்கு பொருத்தமான தலைவரை தேர்வு செய்வது எல்லாம் நல்ல சங்கதிதான்.

ஆனால் இப்படியே போனால் எண்பதுகளில் ஆயுத இயக்கங்கள் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் ஒரு கட்டத்தில் முப்பதுக்கும் மேற்பட்ட இயக்கங்கள் தோற்றம் பெற்றது போல, கட்சிகளின் இலக்கங்கள் அதிகரிக்குமே தவிர தமிழ் மக்களுக்கு உருப்படியான எந்த தீர்வும் கிடைக்கப்போவதில்லை.

கூட்டமைப்பு தொடர்ச்சியாக தவறிழைத்துக் கொண்டிருந்தபோது, அதில் விரக்தியடைந்த சிலர் தமிழ் மக்கள் பேரவையை ஆரம்பித்தார்கள். அது விக்னேஸ்வரன் என்ற தனி நபரை தலைவராக்கி எம்.பி. ஆக்கியதோடு காணாமல் போய்விட்டது.

கடைசியில் கட்சி ஒன்று அதிகரித்ததுதான் கிடைத்த ஒரே விடயம்.

தொடர்ந்து கூட்டமைப்பு செய்வதுபோல நாமும் தவறுகளையே செய்து கொண்டிருக்கப் போகின்றோமா?

இருக்கின்ற கட்சிகளை எல்லாமே ஓரணியில் திரட்சியாக மாறவைக்க முயற்சி செய்யவேண்டியதே முக்கியமானது.

வெறுமனே, புதிதாக ஒரு கூட்டணி என்றில்லாமல் ஒரு பரந்த அமைப்பாக, அந்த அமைப்பிற்கென்று தெளிவான கொள்கை, அமைப்பை வழிநடத்த ஒரு தனியான குழு, அதற்கென ஒரு வெளியுறவுக் கொள்கை, அதற்கான சட்டபூர்வ விதிமுறைகள் இப்படி ஒன்றை அமைக்கவும் அதில் தற்போதுள்ள கட்சிகள் எல்லாவற்றையும் இணைக்கவும் முயற்சி செய்ய வேண்டியதே இப்போதைய அவசர தேவை.

தேர்தல் அரசியலுக்காக, போட்டிபோட்டுக்கொண்டு செயல்படுவது எந்த வகையிலும் இனத்திற்கு நன்மை தரப்போவதில்லை. அவ்வாறு பரந்த ஒரு கூட்டணியை ஆரம்பிக்கின்றபோது, அதில் இடம்பெற மறுக்கின்றவர்களை அம்பலப்படுத்தி, அவர்களை தமிழ் அரசியலில் இருந்தே ஓரம்கட்ட முயற்சிக்கவேண்டும். அதைவிடுத்து புதிது புதிதாக கட்சிகளை - இயக்கங்களை ஆரம்பிப்பது எந்த பயனையும் தரப்போவதில்லை.

அந்த அமைப்பு, தமிழ் தேசியக் கூட்டமைப்பாகவே இருக்கலாம்.!

அப்படியொரு அமைப்பு இல்லையெனில், கருணாநிதியை விட தானே ஈழத்தமிழர் விடயத்தில் அதி தீவிரமானவர் என்று காட்டுவதற்காக தமிழக முன்னாள் முதல்வர், தமிழக சட்ட சபையில் தமிழீழத்திற்கு ஆதரவாக தீர்மானம் கொண்டு வந்ததுபோல, நமது கட்சிகள் ஒருவரையொருவர் போட்டி போட்டுக்கொண்டு ஐ.நாவுக்கு கடிதம் எழுதுவது தான் தொடரும். இப்படியொரு அமைப்பு இருந்தால், தமிழ் மக்கள் தரப்பிலிருந்து ஒரு கோரிக்கை மட்டும்தான் போகும்.!

- ஊர்க்குருவி.

## செல்வச்சந்நிதி ஆலயத்தின் மஹோற்சவம் 27 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஓக. 18

வரலாற்றுப் புகழ்பெற்ற தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 27ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

செப்ரெம்பர் 5ஆம் திகதி காலை 9 மணிக்கு பூங்காவனமும், செப்ரெம்பர் 6ஆம் திகதி கைலாச வாகனமும், செப்ரெம்பர் 8ஆம் திகதி சப்பறத் திருவிழாவும், செப்ரெம்பர் 9ஆம் காலை 9 மணிக்கு தேர் திருவிழாவும் இடம்பெறவுள்ளது.

செப்ரெம்பர் 10ஆம் திகதி காலை தீர்த்தத் திருவிழாவும் அன்று மாலை 6 மணிக்கு மௌனத் திருவிழாவும் செப்ரெம்பர் 11ஆம் திகதி பூக்காரர் பூசையும் நடைபெறவுள்ளது.

செல்வச்சந்நிதி ஆலய மகோற்சவ ஏற்பாட்டு கூட்டம், பருத்தித்துறை வடமராட்சி வடக்கு பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி தலைமையில் பின்வரும் தீர்மானங்கள் எட்டப்பட்டது.

அவையாவன,

1.மகோற்சவ காலத்தில் ஆலயச்சூழலில் ஒருவழிப் பாதை நடைமுறைப்படுத்தப்படும் என்பதுடன் போக்குவரத்து நெருக்கடி ஏற்படுவதனை தடுப்பதற்காக ஆலய பிரதான ஆற்றங்கரை பக்கத்தில் இருக்கின்ற பாதையின் ஊடாக முச்சக்கர வண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் என்பன வாகன தரிப்பிடத்திற்கு செல்ல முடியும்.

2. இவ்வருடம் நீர்பாசனத் திணைக்கள பாலத்துடனான நடை பாதை போக்குவரத்து இறுதி ஐந்து நாட்களும் இடம்பெறும்.

3. ஆலய பூசைகளின்போது ஆலய சுற்றாடலில் சுகாதார நடைமுறைகளை முறையாக பின்பற்றத் தவறும் பட்சத்தில் அல்லது மீறுபவர்கள் மீது சுகாதார நடைமுறைகளின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

4. போக்குவரத்துப் பாதைகள் பிரயாணிகள் மாற்றுவழி தடைப்படுத்தப்படும்போது பாதையினை பாவிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

5. ஆலய தேரோடும் வீதிகளில் நடைபாதை வியாபாரிகளுக்கு மற்றும் தற்காலிக கடைகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளதுடன் மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

6. தனியார் காணிகள் கடைகள் ஆலய வீதியில் பக்தி தொடர்பான விடயங்களிற்கே அனுமதிக்கப்படும் என்பதுடன் புதிய கடைகள் மற்றும் வீதீயோர கடைகள் வீதியில் அமைக்கப்படுவதற்கு தடைசெய்யப்படும்.

7. ஆலய மகோற்சவ காலத்தில் உணவு நிலையங்கள் அமைக்கப்பட வேண்டி இருப்பின் அவ் உரிமையாளர் நாட்டின் எப்பாகத்திலாவது உணவு நிலையம் நடாத்திய அனுபவம் இருத்தல் வேண்டும்.

8. உணவு நிலையங்களில் உணவினை கையாள்பவர்கள் மற்றும் அன்னதான மடங்களில் பணிபுரிபவர்கள் அனைவரும் மருத்துவச்சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.

9.உணவு நிலையங்களிற்கான குடிநீர் பொது சுகாதார பரிசோதகரினால் அனுமதிக்கப்பட்ட இடத்தில் இருந்து பெறப்பட வேண்டும்.

10. கடை உரிமையாளர்கள் ஒவ்வொரு நாளும் முறையாக கழிவகற்றல் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

11. பொருட்களின் விலைநிர்ணயம் மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

12. அடியவர்கள் ஆசாரசீலர்களாக ஆலயத்திற்கு வருகைதருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

13 .பக்தர்கள் சுகாதார நடைமுறையை பின்பற்றுவது கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது.

தற்போதைய சூழ்நிலையில் வழங்கப்பட்டுள்ள சுகாதார நடைமுறைகளை கடைப்பிடிக்காமை, மீறுகின்றமை போன்றவற்றால் ஏற்படக்கூடிய அசௌகரியங்களை கருத்திற்கொண்டு அனைவரும் முழுமையான ஒத்துழைப்பை வழங்குமாறு பருத்தித்துறை வடமராட்சி வடக்கு பிரதேச செயலாளர் ஆழ்வாப்பிள்ளை சிறி கேட்டுக் கொண்டார். (அ)

## அரசுக்கு எதிராக இன்று கொழும்பில் போராட்டம்!

கொழும்பு, ஓக. 18

தற்போதைய அரசாங்கத்திற்கு எதிராக இன்று கொழும்பில் பாரிய கவனயீர்ப்பு போராட்டம் நடத்தப்படவுள்ளதாக அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

தடுத்து வைக்கப்பட்டுள்ள செயற்பாட்டாளர்களை விடுவித்தல், பொதுமக்களுக்கு நிவாரணம் வழங்கப்படவேண்டும், பல்கலைக்கழக கல்வியை மீள ஆரம்பிக்கவேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இந்த போராட்டத்தை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. (அ)

## லாப்ஸ் எரிவாயு கொள்கலனின் விலை 1050 ரூபாவால் குறைப்பு!

கொழும்பு, ஓக. 18

லாப்ஸ் எரிவாயு அடங்கிய 12.5 கிலோ கிராம் கொள்கலன் விலை 1050 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது.

நேற்று முதல் இது நடைமுறைக்கு வருவதாக லாஃப்ஸ் நிறுவனம் அறிவித்துள்ளது.

இதனையடுத்து புதிய லாப்ஸ் கொள்கலனின் விலை 5800 ரூபாவாக விற்பனை செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை 5 கிலோ கிராம் கொள்கலன் 2320 ரூபாவாகவும், 2 கிலோ கிராம் கொள்கலன் 928 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படவுள்ளது. (அ)

## ஹெரோய்னுடன் ஒருவர் சிக்கினார்

அம்பாறை, ஓக. 18

போலி நாணயத்தாள்கள் மற்றும் ஹெரோய்ன் போதைப் பொருளை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் நபரொருவரை, கல்முனை விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

அம்பாறை - கல்முனை விசேட அதிரடிப்படை முகாமிற்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து, விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட தேடுதலில் கல்முனை காஸீம் வீதியில் வைத்து சந்தேகநபர் கைதானார்.

இவ்வாறு கைதான நபர் 39 வயது மதிக்கத்தக்கவர் என்பதுடன், சந்தேகநபர் வசம் இருந்து போலி 5,000 ரூபாய் தாள்கள் 03 மற்றும் 3 கிராம் 100 மில்லி கிராம் ஹெரோய்ன் போதைப் பொருள் என்பன விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரை, நீதிமன்ற நடவடிக்கைக்காக சான்று பொருட்களுடன் கல்முனை பொலிஸாரிடம் விசேட அதிரடிப் படையினர் ஒப்படைத்துள்ளனர். (அ)

## நூல்கள் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஓக. 18

நகுலேஸ்வரி பண்பாட்டு மேம்பாட்டு நிறுவனம். பிரம்மஸ்ரீ மகாதேவ ஐயர் ஜெயராம சர்மா எழுதிய "பண்பாட்டுப் பொட்டகம்" கற்பகதரு நூல்கள் வெளியீட்டு விழா எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு நாவலர் கலாசார மண்பத்தில் முன்னைநாட் துணைவேந்தர் பேரிசிரியர் கலாநிதி என். சண்முகலிங்கன் தலமையில் இடம்பெறவுள்ளது.

வரவேற்புரையினை பாணான் குளம் நாச்சியம்மன் தேவஸ்தான பிரதம குருக்கள் சிவஸ்ரீ சோம. கேதீஸ்வரக்களும் , ஆசியுரையினை யாழ் பல்கலைக்கழக முன்னாள் கலைப்பீடாதிபதி பேராசிரியர் இலக்கிய கலாநிதி ப.கோபாலகிருஷ்ண ஐயரும் , வாழ்த்துரையினை பண்டிதர் கலாநிதி ஸ்ரீமதி கலாவதி பிரகதீஸ்வர சர்மா மற்றும் , கனடா தமிழ் எழுத்தாளர் இணைய நிறுவுநர் வீணை மைந்தன் கே.ரி.சண்முகராஜாவும் , யாழ் மாநகர சபை ஆணையாளர் கவிஞர் த.ஜெயசீலனும், வெளியீட்டுரையினை யாழ் பல்கலைக் கழக மானிடவியல் சிரேஸ்ட விரிவுரையாளர் கலாநிதி ச. சிறிகாந்தாவும் , யாழ் பல்கலைக்கழக சைவசித்தாந்த துறை சிரேஸ்ட விரிவுரையாளர் தி.செல்வமனோகரனும் நிகழ்த்துவர்.

முதற்பிரதியினை பிரம்மஸ்ரீ த.சந்திரசேகர சர்மா தம்பதிகளும் பெற்றுக்கொள்வார்கள். (அ)

ஈழநாடு
Eelanadu
18.08.2022 வியாழக்கிழமை
பிலவ வருடம், ஆவணி 02

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
**தொலைபேசி : 021 730 1370**

# கூட்டமைப்பின் மறுசீரமைப்பின் அவசியம்?

2009 இற்கு பின்னரான தமிழ் தேசிய அரசியல் கட்டமைப்பானது, படிப்படியாக பலவீனமடைந்து செல்கின்றது. கடந்த பாராளுமன்ற தேர்தலில், 14 ஆசனங்களுடன் இருந்த, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது, 10 ஆசனங்களுக்கு கீழறங்கியது. கூட்டமைப்பின் வீழ்ச்சியால், தமிழ் தேசிய மக்கள் முன்னணி, தமிழ் தேசிய மக்கள் கூட்டணி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள், பொதுஜன பெரமுன ஆகிய கட்சிகள் பயனடைந்தன. கூட்டமைப்புக்கு யார் தலைவராக இருக்கின்றார்கள் – இருக்கப் போகின்றார்கள், எந்தக் கட்சிக்கு எத்தனை ஆசனங்கள் போன்ற பிரச்னைகள் அனைத்தும், மக்களின் பிரச்னையில்லை. மாறாக, கூட்டமைப்பு பலமாகவும் வலுவான கட்டமைப்புடன் இருக்க வேண்டும் என்பதுதான் நமது இனத்தின் தேவையாகும்.

உதாரணமாக அடுத்த தேர்தலில் ஒருவேளை கூட்டமைப்பு உடைவுற்று, ஒவ்வொரு கட்சிகளும் தனித் தனியாக போட்டியிடுமானால், தமிழ் மக்களின் அரசியல் பிரதிநிதித்துவம் மோசமான வீழ்ச்சியை சந்திக்கும். அத்துடன் தமிழ் மக்கள் ஒரு தனியான அரசியல் தரப்பு என்னும் நிலைப்பாடும் முடிவுக்கு வரும். இந்த இடத்தில் கூட்டமைப்பின் சரி பிழைகள் என்பது விடயமல்ல. கூட்டமைப்பின் அரசியல் நகர்விலிலுள்ள தவறுகளை நாம் தொடர்ந்தும் சுட்டிக்காட்டி வந்திருக்கின்றோம். இனியும் சுட்டிக்காட்டுவோம். ஒரு மக்கள் ஊடகமென்னும் வகையில், மக்களின் நலனை முன்னிறுத்தியே நாம் கருத்துக்களை முன்வைத்து வருகின்றோம்.

இதில் எந்தக் கட்சிகள் மீதும் பிரத்தியேக நிலைப்பாடுகள் எமக்கில்லை. ஆனால் கூட்டமைப்பை மறுசீரமைக்கும் விடயமானது, வெறுமனே கட்சிகள் தொடர்பான விடயமல்ல. தமிழ்த் தேசிய அரசியலை முடிந்தவரை ஒரு மக்கள் திரட்சியாக பாதுகாப்பது தொடர்பான பிரச்னையாகும். கூட்டமைப்பு உடைவுற்றால் அல்லது மோசமாக பலவீனப்பட்டால், தமிழர் தாயத்தில், தமிழ் மக்கள் ஒரு அரசியல் திரளாக இருக்கின்றார்கள் என்னும் விம்பம் உடைவுறும். பிரதிநிதிகள் துண்டு துண்டுகளாக சிதறி, பலவீனப்பட்டால், தற்போது இருக்கின்ற ஓரளவு பேரம் பேசும் பலத்தையும் தமிழ் மக்கள் இழந்து போவர்.

ஒரு மக்கள் கூட்டமானது, தாம் மக்களாக இருக்கின்றோம் என்பதை ஒரு அரசியல் ஸ்தாபனத்தின் ஊடாகத்தான் வெளிப்படுத்த முடியும். இன்றைய நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒன்றுதான், அவ்வாறான நிலையில் இருக்கின்றது. பிறிதொரு பலமான அரசியல் கட்சியால் தமிழ் மக்களை ஒரு அரசியல் திரட்சியாக பேணிப்பாதுகாக்க முடியுமென்றால், அதில் எங்களுக்கு ஆட்சேபனைகள் இல்லை. ஆனால் தற்போதுள்ள நிலையில் வடக்கு–கிழக்கு இணைந்த நிலையில், அவ்வாறான பலத்துடன் எந்தவொரு தமிழ்த் தேசிய கட்சியும் இல்லை. கூட்டமைப்புக்கு எதிரான தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்தும் யாழ். குடாநாட்டுக்குள் முடங்கியிருக்கும் கட்சிகளாகவே இருக்கின்றன. இந்த அரசியல் சூழலை கருத்தில் கொண்டுதான், கூட்டமைப்பினது, மறுசீரமைப்பின் அவசியத்தை நாம் சுட்டிக்காட்டுகின்றோம்.

கேள்வி - கூட்டமைப்பை எவ்வாறு மறுசீரமைப்பது? முதலில், கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத் தலைவர் பொறுப்பை, பங்காளிக் கட்சிகளின் தலைவர் ஒருவருக்கு கைமாற்றவேண்டும். அது யார் என்பதை, கட்சிகளின் தலைவர் கூடி, உடன்பட்டு மேற்கொள்ளலாம். ஆனால் காலதாமதம் கூடாது. அடுத்ததாக, கூட்டமைப்பை ஒரு அரசியல் ஸ்தாபனமாக பதிவு செய்யவேண்டும். இதனைத் தொடர்ந்து, கூட்டமைப்பிலிருந்து வெளியேறியவர்கள் மீளவும் இணைந்து கொள்வதற்கான பகிரங்க அழைப்பு விடுக்கப்பட வேண்டும் - அதேவேளை, புதியவர்கள் கூட்டமைப் பில இணைந்து கொள்வதற்கான வாய்ப்புக்கள் வழங்கப்பட வேண்டும்.

அடுத்த தேர்தலின்போது, கூட்டமைப்பு ஒன்றே தமிழ் தேசிய அரசியலை பிரதிநிதித்துவம் செய்யும் ஒரேயொரு தமிழ்த் தேசிய அரசியல் ஸ்தாபனம் என்னும் நிலைமையை உருவாக்க வேண்டும். இதன் மூலம், தவறிய ஆசனங்களை மீளவும் கைப்பற்ற முடியும். அத்தோடு மக்கள் மத்தியில் புதிய அரசியல் இரத்தத்தையும் பாய்ச்ச முடியும். கூட்டமைப்பின் அனைத்து நகர்வுகளிலும் அதிகம், ஆற்றல் மிக்க, மக்களை கவரக் கூடிய, புதிய முகங்கள் தெரிய வேண்டும்.

தமிழ்த் தேசிய இனத்திற்கான அரசியலை அடுத்த தலைமுறையிடம் ஒப்படைக்க விரும்பின், தற்போதுள்ள ஒரேயொரு வழி இதுவே. இதனைவிடவும் சிறந்த வழிகள் வெளித்தெரிந்தால் அதனையும் நாம் வரவேற்க பின்நிற்கமாட்டோம்.

# புலம்பெயர்ந்தோருடனான தொடர்பை நிறுவனமயப்படுத்தும் ரணிலின் முயற்சி!

**அலசுவது இராஜதந்திரி**

*ஏற்கனவே ஆறு புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகள் மீதான தடையை நீக்கியதோடு 318 புலம் பெயர்ந்த தனிநபர்கள் மீதான தடைகளையும் நீக்கியுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தற்போது புலம் பெயர்ந்தோருக்கென ஒரு பணிமனையொன்றையும் நிறுவ முன்வந்துள்ளார்.*

*இந்த நடவடிக்கை புலம்பெயர்ந்தோருடனான தொடர்புகளை நிறுவன மயப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளதையே அறிய முடிகின்றது.*

*ஏற்கனவே புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகளுடனான உறவைப்பேணும் விதத்தில் தடைகளை அகற்றியுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அவர்களுடனான தொடர்பாடலுக்காக ஒரு நிறுவன ரீதியாக செயற்பட முன்வந்திருப்பதும் வரவேற்புக்குரியதே. ஏனெனில் வெறுமனே பேச்சளவில் மாத்திரம் தொடர்புகளை பேணாது செயலளவிலும் நடவடிக்கைகளை மேற்கொள்வதே அரசதரப்புக்கும் புலம் பெயர்ந்தோர் அமைப்புகளுக்குமிடையிலான நம்பிக்கையை கட்டி எழுப்பக்கூடியதாக இருக்கும்.*

*ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகள் மீதான தடையை நீக்கியுள்ளமை குறித்து கருத்து வெளியிட்டுள்ள சில தென்னிலங்கை அரசியல் தரப்புகள், இலங்கை தற்போது பொருளாதார ரீதியாக மிகவும் பாதிப்புற்றிருக்கின்ற காரணத்தினால் புலம் பெயர்ந்த தமிழ் அமைப்புகள் மீதான தடையை நீக்குவதன் மூலம் புதிய முதலீடுகளை இலங்கையில் மேற்கொள்ளச்செய்வதும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நோக்கமாக இருப்பதாக தெரிவித்துள்ளன.*

*எனவே அத்தகைய ஒரு முயற்சியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கொள்ள முன்வரும் பட்சத்தில் அம்முயற்சி கூட வரவேற்புக்குரியதாகும் என்றே குறிப்பிடமுடியும். ஏனெனில் இலங்கையைப் பொறுத்தவரை வடக்கு -கிழக்கு அரசியல் பிரச்னையே முக்கிய பிரச்னையாகவும் ஒரு நிரந்தர தீர்வைக்காண வேண்டிய பிரச்னையாகவும் இருக்கின்றது.*

*வெளிநாடுகளில் இயங்கி வருகின்ற புலம்பெயர்ந்த தமிழர்கள், அமைப்புகள் ரீதியாக இயங்குவது ஒரு புறமிருக்க மறுபுறத்தே பொருளாதார ரீதியாக தனிப்பட்ட முறையில் மிகவும் செயல்திறனுள்ளவர்களாகவும் கல்வி, மற்றும் தொழில்சார் முயற்சிகளில் மிகவும் மேம்பட்டவர்களாகவும் இருக்கின்றனர்.*

*இந்நிலையில் அவர்கள் தமது தாயகத்தில் முதலீடுகளை மேற்கொள்வதில் தயக்கம் காட்டுவார்கள் என்று கூறுவதற்கில்லை. புலம்பெயர்ந்த தமிழர்கள் வாழுகின்ற நாடுகளின் நாணயங்கள் மிகப்பெறுமதியானவையாகும். எனவே அவர்கள் முதலீடுகளை மேற்கொள்ள வரும் போது பொருளாதார ரீதியான பிரச்னைகளுக்கு தீர்வுகளை எட்டுவதோடு அதனடிப்படையில் அரசியல் தீர்வுக்கான முயற்சிகளையும் ஆக்கபூர்வமான முறையில் பரஸ்பர நம்பிக்கையோடு நகர்த்திச் செல்ல முடியுமென்றே கருதலாம்.*

*மறுபுறத்தே இலங்கை அரசு தனக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள அடிப்படை மனித உரிமை மீறல்கள் சார்ந்த குற்றச்சாட்டுகளிலிருந்து விடுபட ஒரு கேடயமாக ஆறு புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகள் மீதான தடையை நீக்க முன்வந்துள்ளதோ என்பது குறித்தும் தடை நீக்கம் செய்யப்பட்ட புலம் பெயர்ந்த தமிழ் அமைப்புகள் விழிப்பாக இருக்கவேண்டும். ஏனெனில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது கூட்டத் தொடர் இடம்பெறவுள்ளது.*

*இக்கூட்டத்தொடரில் இலங்கையில் மனித உரிமைகளை மேம்படுத்துவது தொடர்பான நடவடிக்கைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்து விவாதிக்கப்படுமெனவும் எதிர்பார்க்க முடியும். அத்துடன் ஏற்கனவே ஜெனிவா ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை குறித்து கொண்டுவரப்பட்ட தீர்மானங்கள் பற்றியும் ஆராயப்படக்கூடிய சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன.*


*இலங்கை தொடர்பாக ஏற்கனவே கொண்டுவரப்பட்ட தீர்மானங்களில் தமிழ் சிறைக்கைதிகளின் விடுதலை, காணாமல் போனோர் விவகாரம் மற்றும் இறுதிக்கட்ட யுத்த நடவடிக்கைகளின் போது நிகழ்ந்த அத்துமீறல்கள் குறித்த பொறுப்புக்கூறல் என்பவை பற்றி தெரிவிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.*

*ஏற்கனவே இலங்கை தொடர்பாக ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் கொண்டுவரப்பட்ட தீர்மானங்களில் காணாமல்போனோர் குறித்து ஆராயவென அமைக்கப்பட்ட அலுவலகமும் முக்கியமானது. ஆனால் அந்த அலுவலகம் செயல் திறனற்றதாகவும் அதனால் தமக்கு எவ்வித பிரயோசனமும் இல்லை என்பதே காணாமல் போனோரது உறவினர்களை உள்ளடக்கிய அமைப்பைச்சேர்ந்தோர் தெரிவித்துள்ளனர்.*

*இத்தகைய பின்னணியிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆறு தமிழ் புலம்பெயர் அமைப்புகளினதும் 318 புலம்பெயர்ந்த தமிழ் தனிநபர்களினதும் தடைகளை நீக்கியுள்ள அதேசமயம் புலம்பெயர்ந்தோருடனான தொடர்பாடலைக்கொண்டிருக்க தனியான அலுவலகம் ஒன்றையும் அமைக்கப்போவதாக அறிவித்துள்ளார்.*

*அத்தகையதொரு பணிமனையை உருவாக்கி வெறுமனே புலம்பெயர்ந்தோரது உதவிகளை மட்டும் நாடி நிற்பதை நோக்கமாக கொண்டிராது, வடக்கு - கிழக்கின் அரசியல் பிரச்னை தீர்வுக்கும் மனிதாபிமான பிரச்னைகளுக்கும் புலம்பெயர்ந்தோருடனான நிறுவன ரீதியான தொடர்பாடலை கொண்டிருக்க வழிவகுப்பதே செயல்திறனுள்ள நடவடிக்கையாக அமைய முடியும்.*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
நண்பர்கள் வழியே பிரச்னை உருவாக வாய்ப்பிருப்பதால் எச்சரிக்கை அவசியம். மனதில் குழப்பம் ஏற்பட்டு விலகும். பிறரிடம் விழிப்புணர்வுடன் இருப்பது நல்லது. எதிர்பார்த்த ஒரு செயல் நிறைவேறும்.

**இடபம்**
ஆடம்பர செலவால் தடுமாற்றம் அடைவீர்கள். குடும்பத்தில் நெருக்கடி ஏற்படும். அலுவலகத்தில் செல்வாக்கு உயரும். நீங்கள் விரும்பிய ஒன்றை இன்று அடைவீர்கள்.

**மிதுனம்**
மற்றவர்களால் செய்ய முடியாத ஒரு செயலை நீங்கள் செய்து முடிப்பீர்கள். நீண்ட நாள் முயற்சி ஒன்று நிறைவேறும். அரசு வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். பொருளாதார நெருக்கடி விலகும்.

**கடகம்**
உங்களுடைய செயலில் இன்று வெற்றி பெறுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். பணியில் இருப்பவர்களுக்கு மேலதிகாரிகளின் ஆதரவு உண்டாகும். வேலை தேடுவோருக்கு நல்ல தகவல் வரும்.

**சிம்மம்**
வழக்கமான செயல் இழுபறியாகும். அரசு வழியிலான எதிர்பார்ப்பு ஒன்று நிறைவேறும். உடல் நிலைக் குறித்த பயம் நீங்கும். வேலையில் துணிச்சலுடன் செயல்பட்டு வெற்றி அடைவீர்கள்.

**கன்னி**
உங்களுடைய முயற்சி தடைபடும். மனதில் இனம் புரியாத குழப்பம் உண்டாகும். எதிர்பாராத பிரச்னையை நீங்கள் சந்திப்பீர்கள். பணம், நகை விஷயங்களில் கவனம் தேவை.

**துலாம்**
செயல்களில் இருந்து வந்த தடை விலகும். பெரியவர்களின் ஆதரவால் விருப்பம் நிறைவேறும். உங்களுடைய முயற்சியில் வெற்றி காண்பீர்கள். அரசு வழியில் இழுபறி ஏற்படும்.

**விருட்சிகம்**
மனதில் புதிய நம்பிக்கை உருவாகும். பிள்ளைகளின் எதிர்காலத்திற்குரிய முயற்சியில் ஈடுபடுவீர்கள். குடும்பத்தில் மங்கல நிகழ்ச்சி நடத்துவதற்குரிய முன்னேற்பாடு செய்வீர்கள்

**தனுசு**
இன்று உங்களுடைய கவனம் சிதறினால் சில இழப்புகளை சந்திப்பீர்கள். பணி புரியும் இடத்தில் பிரச்னைகளை சந்திக்க வேண்டியதாக இருக்கும். அரசு வேலை இழுபறியாகும்.

**மகரம்**
வழக்குகளில் இன்று எதிர்பார்த்த நன்மையைக் காண முடியாமல் போகும். எதிர்பார்த்த ஒன்றை அடைவதில் போராட்டத்தை சந்திப்பீர்கள். உடல் நிலையில் கவனம் தேவை.

**கும்பம்**
நம்பிக்கையுடன் உங்கள் புதிய செயலை ஆரம்பிப்பீர்கள். நிதிநிலை சீராகும். யோசித்து செயல்பட்டு ஒரு முக்கியமான செயலில் வெற்றி அடைவீர்கள். நெருக்கடி விலகும்.

**மீனம்**
தேவையற்ற செலவுகளால் நெருக்கடி சந்திப்பீர். பணம் பல வழிகளிலும் செலவாகும். உங்களுடைய பேச்சுக்களால் நெருக்கடிக்கு ஆளாவீர்கள். விழிப்புணர்வு தேவை. குடும்பத்திற்குள் நெருக்கடி சூழும். எதிர்பார்த்தவற்றில் லாபம் காண முடியாது.

### நிதியமைச்சர் கார் மீது காலணி வீச்சு:

# பா.ஜ.க. மகளிர் அணியினர் 3 பேர் சிறையில் அடைப்பு

சென்னை, ஓக. 18

தமிழக நிதியமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் கார் மீது காலணியை வீசிய சம்பவம் தொடர்பாக, தமிழக பா.ஜ.க மகளிரணியைச் சேர்ந்த 3 பேர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

காஷ்மீரில் தீவிரவாதிகள் தாக்குதலில் உயிரிழந்த மதுரை மாவட்டம், புதுப்பட்டி ராணுவ வீரர் லட்சுமணன் உடல் கடந்த சனிக்கிழமை நண்பகல் 11.30 மணிக்கு மதுரை விமான நிலையத்திற்கு வந்தது. அப்போது, அரசின் விதிமுறைப்படி, ராணுவ வீரரின் உடலுக்கு அஞ்சலி செலுத்த தமிழக நிதியமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாகராஜன் விமான நிலைய வளாகத்திற்கு சென்றபோது, சலசலப்பு ஏற்பட்டது.

இதைத் தொடர்ந்து விமான நிலையத்தை விட்டு அமைச்சர் வெளியே காரில் வந்தபோது, அவரது வாகனத்தை திடீரென வழிமறித்த பா.ஜ.கவினர் அவருக்கு எதிராக கோஷமிட்டனர். மேலும், கூட்டத்தில் இருந்த பா.ஜ.க பெண் நிர்வாகி ஒருவர் தனது காலணி எடுத்து அமைச்சர் கார் மீது வீசினார்.

இச்சம்பவம் அங்கு பரபரப்பை ஏற்படுத்தியது. ஒரு வழியாக பாதுகாப்புப் பணியில் இருந்த பொலிஸார் அங்கிருந்தவர்களை அப்புறபடுத்தி, அமைச்சரின் காரை பத்திரமாக அனுப்பி வைத்தனர். இது தொடர்பாக மதுரை அவனியாபுரம் காவல் ஆய்வாளர் சந்திரன் பா.ஜ.க பெண் நிர்வாகி உட்பட 40 க்கும் மேற்பட்டோர் மீது சட்டவிரோதமாக கூடுதல் உட்பட 4 பிரிவுகளின்கீழ் வழக்கு பதிவு செய்தார்.

இவர்களில் பாஜகவைச் சேர்ந்த மதுரை மாநகர் மாவட்ட துணைத் தலைவர் குமார் என்ற மார்க்கெட் குமார், பிரசார பிரிவு செயலர் பாலா, பாலசுப்பிரமணியன், திருச்சியைச் சேர்ந்த பாஜக கட்சி நிர்வாகி ஜெயகருணா, கோபிநாத், முகமது யாகூப் , முன்னாள் மாநகராட்சி மண்டலத் தலைவரும், தற்போது மதுரை மாவட்ட பா.ஜ.க துணை தலைவர் ஜெயவேல் ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

மேலும், அமைச்சரின் கார் மீது காலணியை வீசி பெண் நிர்வாகி உள்ளிட்டோர் குறித்து சம்பவம் தொடர்பான வீடியோ ஆதாரங்களை வைத்து துணை காவல் ஆணையர் சீனிவாச பெருமாள் தலைமையில் காவல் ஆய்வாளர் சந்திரன் உள்ளிட்ட காவல்துறையினர் அடங்கிய தனிப்படையினர் விசாரித்தனர்.

அமைச்சரின் கார் மீது காலணியை வீசியவர்கள் மதுரை மாநகர மாவட்ட மகளிர் அணி செயலரான விளாங்குடி அன்னை தெரசா தெருவைச் சேர்ந்த சரண்யா மற்றும் தெய்வானை, அவர்களுக்கு உடந்தையாக பாஜக மகளிரணியைச் சேர்ந்த மதுரை முடக்குச்சாலை நேதாஜி நகரைச் சேர்ந்த தனலட்சுமி இருந்ததும் தெரிய வந்தது.

தலைமறைவான அவர்களை தனிப்படையினர் தொடர்ந்து தேடினர். அவர்களின் செல்போன்ரவர்கள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டது.

மதுரை மாவட்டம், பேரையூர் பகுதியில் கட்சிக்காரர் ஒருவரின் வீட்டில் அவர்கள் பதுங்கி இருப்பது தெரிந்து, தனிப்படையினர் அங்கு விரைந்தனர். பதுங்கியிருந்த வீட்டை சுற்றி வளைத்தனர். காவல் நிலையத்திற்கு அழைத்து வந்து விசாரணை செய்தனர். இதன்பிற்கு சரண்யா உட்பட 3 பேரும் கைது செய்யப்பட்டனர்.

(அ)

# வீரமணியின் எடைக்கு பணக்கட்டு!

சென்னை, ஓக. 18

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணியின் எடைக்கு நிகராக பணக்கட்டு வழங்கப்பட்டது.

திருப்பத்தூர் நகரில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் திராவிடர் கழகம் சார்பில் கலந்துரையாடல், விடுதலை நாளேடு சந்தா வாங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த நிகழ்வில் திராவிடர் கழக தலைவர் கி.வீர மணி கலந்துகொண்ட நிலையில், அவரின் எடைக்கு எடையாக பணக்கட்டுகள் வழங்கப்பட்டன.

இவ்வாறாக ரூ.2.15 இலட்சம் பணம் முதல் சந்தாவாக வழங்கப்பட்டன. (அ)



# அ.தி.மு.க. பிரச்னையில் தலையிட்டு குளிர் காய்வதற்கு விரும்பவில்லை!

## சபாநாயகர் அப்பாவு

சென்னை, ஓக. 18

அ.தி.மு.க. பிரச்சனையில் தலையிட்டு குளிர்காய விரும்பவில்லை என்று சபாநாயகர் அப்பாவு தெரிவித்தார்.

16 ஆவது சட்டப் பேரவை நடவடிக்கை குறிப்புகள் மற்றும் சட்டமன்ற நூற்றாண்டு விழா மற்றும் முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் திருவுருவப் படத் திறப்பு விழாவின் சிறப்பு வெளியீடு ஆகியவற்றை பொது மக்களின் பார்வைக்கு சட்டப் பேரவையின் இணையத்தளத்தில் பதிவேற்றம் செய்யும் நிகழ்வை சட்டப் பேரவைத் தலைவர் அப்பாவு தலைமைச் செயலகத்தில் நேற்று தொடங்கி வைத்தார்.

இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய அவர்,” அதிமுக உட்கட்சி பிரச்னை, ஒன்றும் அவசர பொதுமுக்கியத்துவம் வாய்ந்த பிரச்னை அல்ல. சட்டமன்ற அதிமுக துணைத்தலைவர் என்ற விவகாரம் நீதிமன்றத்தில் உள்ளது என எதிர்க்கட்சித் தலைவரே கூறியுள்ளார். சட்டப்பேரவை வேறு, நீதிமன்றம் வேறு.ஓ.பன்னீர் செல்வம், எடப்பாடி பழனிசாமி கடிதங்கள் குறித்து, யார் மீதும் விருப்பு, வெறுப்பில்லாமல் ஜனநாயக முறையில் நடவடிக்கை இருக்கும். 4 பிரிவாக அ.தி.மு.க.வினர் உள்ளனர். அவர்கள் பிரச்னையில் தலையிட்டு குளிர்காய விரும்பவில்லை” என்று கூறினார். (அ)

# துணை ஜனாதிபதி ஜெகதீப் தன்கருடன் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் சந்திப்பு

புதுடில்லி, ஓக. 18

துணை ஜனாதிபதி ஜெகதீப் தன்கரை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் சந்தித்து பேசினார்.

நாட்டின் 14-ஆவது துணை ஜனாதிபதியாக ஜெகதீப் தன்கர் பதவியேற்றுள்ளார். புதிய துணை ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஜெக தீப் தன்கருக்கு தலைவர்கள் வாழ்த்துக்கள் தெரிவித்துவருகின்றனர்.

இந்தநிலையில், துணை ஜனாதிபதி ஜெகதீப் தன்கரை முதல் - அமைச்சர் மு.க.ஸ்டாலின் சந்தித்து பேசினார். புதிய துணை ஜனாதிபதியாக பெறுப்பேற்றுள்ளதற்கு நேரில் வாழ்த்து தெரிவித்தார்.

இந்த சந்திப்பு டில்லியில் உள்ள துணை ஜனாதிபதி இல்லத்தில் நடைபெற்றது. (அ)



# டலஸை ஆதரித்துவிட்டு ரணிலிடம் அமைச்சு பதவிகள் பெறுவது எப்படி?

## மனோ, திகாவிடம் ராதா அணி கேள்வி

கொழும்பு, ஓக. 18

**தமிழ் முற்போக்கு கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சு பதவிகளை ஏற்காது, வெளியில் இருந்து சர்வகட்சி ஆட்சிக்கு ஒத்துழைக்க முன்வர வேண்டும் என மலையக மக்கள் முன்னணி தீர்மானித்துள்ளது.**

இது தொடர்பான கடிதம் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. மலையக மக்கள் முன்னணியின் ஊடகப் பிரிவு இந்த தகவலை உறுதிப்படுத்தியுள்ளது.

சர்வகட்சி அரசாங்கம் தொடர்பான கலந்துரையாடல்கள் தற்போது தொடர்ந்து நடைபெற்று வருகின்ற நிலையில் இது தொடர்பான கலந்துரையாடல் கூட்டம் ஒன்று அண்மையில் மலையக மக்கள் முன்னணி ஏற்பாடு செய்துள்ளது.

இதில் கலந்து கொண்டவர்கள்,

“நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார பின்னடைவு காரணமாக அனைத்து மக்களும் பாரிய அளவில் பொருளாதார ரீதியாக பாதிப்படைந்துள்ளார்கள். தற்போது இருக்கின்ற பொருளாதார நிலையில் எந்தவிதமான அபிவிருத்தியையும் முன்னெடுக்க முடியாத ஒரு நிலைமையே காணப்படுகின்றது.

மேலும் சர்வகட்சி அரசாங்கத்தில் குறைந்த அளவிலான அமைச்சர்களே நியமிக்கப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே நாட்டு மக்களும் போராட்டக்காரர்களும் விரும்புகின்றார்கள். சர்வதேசமும் அதனையே விரும்புகின்றது. எனவே அதற்கு வழிவிட்டு நாம் விட்டுக் கொடுப்புடன் ஏனையவர்களுக்கு எடுத்துக்காட்டாக நடந்து கொள்ளவேண்டும். ” - என குறிப்பிட்டுள்ளனர்.

அத்துடன், சர்வகட்சி அரசாங்கத்தை மேலும் சிக்கலில் கொண்டு செல்லாமல் நாம் வெளியில் இருந்து கொண்டு முழுமையான ஆதரவை வழங்கி மக்களுக்கு நல்லது நடப்பதை உறுதி செய்யவேண்டிய தேவையே இருக்கின்றது.

தமிழ் முற்போக்குக் கூட்டணி அமைக்கப்பட்டதன் காரணமே கொள்கையுடன் நாம் செயற்படவேண்டும் என்பதே. இந்த கூட்டணி எந்த காரணம் கொண்டும் சிதைந்துவிடாமல் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அனைத்து கட்சிகளுக்கும் இருக்கின்றது. நாம் எமது மக்களின் நன்மை கருதி இந்த கூட்டணியை பாதுகாக்க வேண்டிய தேவை எம் அனைவருக்கும் இருக்கின்றது. அந்த கூட்டு பொறுப்பை நாம் மதித்து நடக்க வேண்டும்.” - எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும் நாம் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக தெரிவு செய்யக்கூடாது என்ற காரணத்தினாலேயே டலஸ் அழகப்பெருமவிற்கு வாக்களித்தோம். எனவே அன்று ஒரு கொள்கையும் இன்று ஒரு கொள்கையுடனும் செயற்பட முடியுமா? எனவும் கேள்வி எழுப்பியுள்ளனர். (அ)

# இலுப்பைக்கடவையில் கவனயீர்ப்பு போராட்டம்!

மன்னார், ஓக. 18

“கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வுக்கான மக்கள் குரல்“ எனும் தொனிப் பொருளில் வடக்கு கிழக்கில் உள்ள 8 மாவட்டங்களில் நூறு (100) நாட்கள் நடைபெற உள்ள செயல் திட்டத்தின் 17ஆவது நாள் கவனயீர்ப்பு போராட்டம் நேற்று புதன்கிழமை காலை 10 மணியளவில் மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள இலுப்பைக்கடவை பகுதியில் இடம்பெற்றது.

வடக்கு- கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் யாட்சன் பிகிராடோ, மன்னார் மாவட்ட பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இணையத்தின் இணைப்பாளர் எஸ். திலீபன் மற்றும் கிராம மட்ட அமைப்புகள் ,விவசாய, மீனவர் சங்கங்கள், பெண்கள் அமைப்புகள், மாணவர் அமைப்புகள், சிவில் சமூக அமைப்புகள் மனித உரிமை ஆர்வலர்கள், மன்னார் மெசிடோ மற்றும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இணையத்தின் பணியாளர்கள் கலந்துகொண்டனர்.

இந்த போராட்டம் வடக்கு- கிழக்கு பகுதிகளில் தொடர்ச்சியாக சுழற்சி முறையில் 100 நாட்கள் வரை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மல்லாவியில் 4 கடைகள் மீது வழக்கு தாக்கல் செய்ய முடிவு

முல்லைத்தீவு, ஓக. 18

முல்லைத்தீவு, மல்லாவி பகுதியில் மல்லாவி மற்றும் மாந்தை கிழக்கு பொதுச்சுகாதார பரிசோதகர்களினால் உணவகங்கள் மற்றும் வியாபார நிலையங்களில் நேற்று திடீர்ப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

பொதுமக்களின் தொடர் முறைப்பாடுகளுக்கமைவாக மல்லாவி மற்றும் மாந்தை கிழக்கு பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் இணைந்து மல்லாவி நகரில் அமைந்துள்ள பல்பொருள் வாணிபங்கள் மற்றும் பல்பொருள் அங்காடிகள் மீது திடீர் பரிசோதனையை மேற்கொண்டனர்.

இதன்போது வியாபார நிலையங்களில் காலாவதி கடந்த உணவுப்பொருட்கள் மற்றும் வண்டு மொய்த்த உணவுப்பொருட்கள் மற்றும் சுட்டுத்துண்டு உருவழிக்கப்பட்ட உணவுப்பொருட்கள் மற்றும் சுட்டுத்துண்டு இடப்படாத மற்றும் வெளிநாடுகளில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்டு விற்பனைக்கென வெளிக்காட்டி வைக்கப்பட்ட உணவுப் பொருட்கள் கைப்பற்றப் பட்டன.

அவை முல்லைத்தீவு நீதிமன்றத்தில் பாரப்படுத்துவதற்கு என சான்றுப்பொருட்களாக மல்லாவி சுகாதார வைத்திய அதிகாரி பணிமணைக்கு எடுத்து செல்லப்பட்டதுடன் பொதுச்சுகாதார பரிசோதகர்களால் சுகாதார நடைமுறையின்றி உணவு பொருட்களை விற்பனை செய்த 4 வர்த்தக நிலையங்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் ஒன்றும் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். (அ)

# வெலிக்கடைச் சிறைச்சாலையில் பெண் பாதுகாப்பு அலுவலர் கைது!

கொழும்பு, ஓக. 18

வெலிக்கடை சிறைச்சாலையின் காவலரான பெண்ணொருவர், பாதுகாப்புக்காக நியமிக்கப்பட்டிருந்த பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பெண் சிறைச்சாலை அதிகாரிகள் மற்றும் கைதிகள் சோதனையிடப்பட்டும் இடத்திலேயே நேற்று முன்தினம் அவர் கைது செய்யப்பட்டதாக அதிரடிப்படை தெரிவித்துள்ளது. குறித்த சோதனை இடம் பெறும் வேளையில், 52 வயதுடைய சந்தேக நபர் தம்மிடம் இருந்த மாத்திரையொன்றை, வாயில் மறைத்து வைக்க முற் பட்டவேளையில் இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று அவர்கள் தெரிவித்துள் ளனர். (அ)

# கம்பளை மாணவனின் உயிரை பறித்தது கணினி விளையாட்டு!

கொழும்பு, ஓக. 18

கணினி விளையாட்டுக்கு அடிமையாகி அதனால் மனோரீதியாக பாதிப்புற்ற 16 வயது பள்ளி மாணவன் ஒருவர் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்ட சம்பவமொன்று நேற்று கம்பளை பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

கம்பளை, எரகொல்ல லெண்டன்ஹில் பிரதேசத்தைச் சேர்ந்த நவீன் மாலிங்க விஜேரட்ண என்ற மாணவனே தனது வீட்டுக்குள் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார்.

மகன் இரவு முழுவதும் தனது அறைக்குள் இருந்து தூங்காமல் கணினி விளையாட்டில் ஈடுபடுவதை வழக்கமாக கொண்டிருந்தார் என உயிரிழந்த மாணவனின் பெற்றோர் தமது சாட்சியத்தில் தெரிவித்துள்ளனர்.

குறித்த மாணவனின் இளைய சகோதரர் தனது சாட்சியத்தில் அண்ணன் தினமும் கணினி விளையாட்டில் ஈடுபடும்போது அந்தப்பக்கம் போ, இந்தப்பக்கம் போவென அறைக்குள் தனியாக இருந்து சத்தமாக பேசி சண்டையிட்டுக் கொள்வதாகவும் குடும்பத்தாருடன் பேசுவதனை விரும்புவதில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

உயிரிழந்த மாணவனால் எழுதப்பட்ட கடிதம் ஒன்றும் விசாரணையின்போது சமர்ப்பிக்கப்பட்டது. அதில் அம்மா, அப்பா என்னை மன்னித்து விடுங்கள். நான் நீண்டதூரம் போகிறேன். நான் எந்த ஒரு பெண் பிள்ளையினாலும் இந்த முடிவை எடுக்கவில்லை. தம்பி, தங்கையை நன்றாக பார்த்துக் கொள்ளுங்கள் என எழுதி வைத்துள்ளார். கம்பளை வைத்திய சாலையின் சட்டவைத்திய அதிகாரி சுசந்த ஹேரத்தினால் மேற்கொள்ளப் பட்ட மரண பரிசோதனையின்போது கழுத்து இறுகி ஏற்பட்ட மூச்சுத் திணறலால் ஏற்பட்ட மரணமென குறிப்பிடப்பட்டுள்ளது.

மரண விசாரனைகளின் போது வெளிபட்ட விடயங்களை ஆராய்ந்து பார்த்ததில் கணனி தொடர் விளையாட்டினால் ஏற்பட்ட மன உளைச்சலுக்கு ஆளாகியே தற்கொலை செய்து கொண்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# பண மோசடி வழக்கில் ஜாக்குலின் குற்றவாளி

கொழும்பு, ஓக. 18

மருந்து கம்பனி உரிமையாளரின் மனைவியை மிரட்டி 200 கோடி ரூபா பணம் பறித்த வழக்கில் சிறையில் உள்ள சுகேஷ் சந்திரசேகருக்கு எதிரான பண மோசடி வழக்கில் நடிகை ஜாக்குலின் பெர்னாண் டஸ் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட் டுள்ளன.

இலங்கை நடிகை ஜாக்குலின் பெர்னான்டஸ் சொத்துகளை இந்திய அமலாக்கத்துறை ஏற்கனவே முடக்கியிருந்தது.

சுகேஷ் சந்திரசேகர் மோசடியான முறையில் பெற்ற பணத்தில் கோடிக்கணக்கான ரூபாவை பொலிவூட் நடிகைகளுக்கு செலவு செய்துள்ளதாகவும் சுகேஷ் சந்திரசேகருடன் நெருக்கமான தொடர்பில் இருந்த இலங்கை பின்னணியை கொண்ட நடிகை ஜாக்குலின் பெர்னாண்டஸ் சில பரிசுப் பொருள்களைப் பெற்றமையும் விசாரணைகளில் தெரியவந்தது.

ஜாக்குலினுக்கு 7 கோடி ரூபாய் மதிப்பான தங்க ஆபரணங்கள், குதிரை, 15 ஜோடி தோடுகள், 5 ஆடம்பர கைப்பைகள், பெறுமதியான 4 பூனைக் குட்டிகள் போன்ற பல பரிசுப்பொருட்களை சுகேஷ் சந்திரசேகர் வழங்கியுள்ளமை தெரியவந்துள்ளது. இந் நிலையில் வழக்கில் புதிய திருப்பமாக ஜாக்குலின் பெர்னாண் டஸ் குற்றவாளியாக தற்போது அறிவிக்கப்பட்டுள்ளார். (அ)

ஈழநாடு



# முட்டை மாபியாக்களை கட்டுப்படுத்தவேண்டும்!

*சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் கோரிக்கை*

கொழும்பு, ஓக. 18

உள்நாட்டில் முட்டை விலையை குறைக்க உடனடியாக முட்டைகளை இறக்குமதி செய்ய வேண்டும் என அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

சமீப காலமாக சில வியாபாரிகள் முட்டையை ரூ.70க்கு விற்பனை செய்வதாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் அசேல சம்பத், உள்ளூர் மாபியா காரண மாக பொதுமக்கள் பெரும் சுமைக்கு ஆளாகியுள்ளனர்.

மாபியாவை சமாளிக்க முட்டைகளை இறக்குமதி செய்ய ஜனாதிபதி உத்தரவு பிறப்பிக்கவேண்டும்.

நுகர்வோர் விவகார அதிகாரசபை அதிகாரிகள் சட்டத்தை வலுப்படுத்த விரும்பாத காரணத்தினால் உணவுப் பொருட்களின் விலைகளைக் கட்டுப்படுத்துவதற்கான பொறிமுறைமை எதுவும் இல்லை.

எந்தச் சட்டம் கொண்டு வந்தாலும், கோழிக்குஞ்சு தங்கம் கொடுக்கப்படுவதில்லை. எனவே முட்டை விலையை குறைக்கவேண்டும்.

முட்டையின் விலை காரணமாக, முதியவர்கள், குழந்தைகள் மற்றும் ஏழைகள் அத்தியாவசியப் புரதங்களைப் பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

தற்போதைய போக்கு தொடர்ந்தால் அரசுக்கு எதிராக மக்கள் புரட்சியில் ஈடுபடுவார்கள். எனவே முட்டையை இறக் குமதி செய்து விலையை குறைக்க ஜனாதிபதி நடவ டிக்கை எடுக்கவேண்டும்-என் றார். (அ)

# வெளியே வருகிறார் ரஞ்சன்! சகல ஏற்பாடுகளும் தயார்!!

கொழும்பு, ஓக. 18

சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ள முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க , ஜனாதிபதி பொது மன்னிப்பின் கீழ் இவ்வாரம் விடுதலை செய்யப்படவுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினராக செயற்பட்ட ரஞ்சன் ராமநாயக்கவுக்கு நான்கு வருட கால கடுமியச் சிறை தண்டனை 2021 ஜனவரி மாதம் விதிக்கப்பட்டது. நீதிமன்ற அவமதிப்பு குற்றத்திற்காகவே குறித்த தண்டனையை உயர்நீதிமன்றம் வழங்கியது. அதன்பின்னர் ரஞ்சன் ராமநாயக்க பாராளுமன்ற உறுப்புரிமையையும் இழந்தார்.

இதனையடுத்து ரஞ்சன் ராமநாயக்கவுக்கு பொதுமன்னிப்பு வழங்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு கடிதம் அனுப்பியிருந்தார். மேலும் பல தரப்புகளும் இந்த கோரிக்கையை விடுத்திருந்தன.

இந்நிலையில், ரஞ்சனுக்கு பொது மன்னிப்பு வழங்குவதற்கான பரிந்துரையை நீதி அமைச்சர் ஜனாதிபதிக்கு கடந்த வாரம் அனுப்பியிருந்தார்.

"ரஞ்சன் ராமநாயக்கவுக்கான தண்டனை, அரசியல் பழிவாங்கல் அல்ல, நீதிமன்றத்தை அவமதித்தமைக்காகவே அவருக்கு தண்டனை விதிக்கப்பட்டது. எனவே, நீதிமன்றம் தொடர்பில் தெரிவித்த கருத்துக்காக ரஞ்சன் ராமநாயக்க மன்னிப்பு கோரி, நீதிமன்றத்துக்கு சத்தியக்கடதாசியொன்றை வழங்க வேண்டும்." - என நீதி அமைச்சர் குறிப்பிட்டிருந்தார்.

இதன்படி நீதிமன்றத்தின் மன்னிப்பு கோரும் ஆவணத்தையும் ரஞ்சன், தனது சட்டத்தரணி ஊடாக தயார்ப்படுத்தியுள்ளார். இதற்கமையவே இவ்வாரம் அவர் விடுவிக்கப்படவுள்ளார். (அ)

# மக்களின் பிரச்னைகளை தீர்க்க கட்சிகள் ஒன்றிணையவேண்டும்

## மைத்திரிபால சிறிசேன அழைப்பு

கொழும்பு, ஓக. 18

**"நாட்டின் தற்போதைய நிலைமையில் அரசியல் கட்சிகள் ஒவ்வொன்றும் தங்களது கட்சிகள் தொடர்பான நிலைப்பாட்டை ஒதுக்கி வைத்துவிட்டு மக்களின் பிரச்னைகளை உடனடியாகத் தீர்ப்பதற்காக ஒன்றிணைந்து பணியாற்ற வேண்டியது அவசியமாகும்."**

-இவ்வாறு முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

ஊடகங்களிடம் அவர் கருத்துரைக்கும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டின் பொருளாதார நெருக்கடி நகர சபைக்கு உட்பட்ட பகுதிகளிலேயே அதிகளவு தாக்கம் செலுத்தியுள்ளது.

பொருளாதார நெருக்கடி கிராமப்புர பிரதேசங்களில் தாக்கம் செலுத்தாமல் இல்லை.

கிராமங்களை எடுத்துக் கொண்டால் விவசாயக் காணிகளில் இருப்பவற்றைப் பறித்து சமைத்து உண்ணும் வாய்ப்பு கிராம மக்களுக்கு இருக்கின்றது. நகரப்புறங்களில் அவ்வாறு இல்லை.

எனவே, நாட்டின் பொருளாதாரம் பாரியளவு வீழ்ச்சியடைந்துள்ளது. கல்வித்துறையும் வீழ்ச்சியடைந்துவிட்டது. சுகாதாரத்துறையை எடுத்துக்கொண்டால் போதிய மருந்துகள் இல்லை.

வெளிநாடுகளிடமிருந்து மருந்துகளை விலைக்கேனும் கொள்வனவு செய்ய முடியும். ஆனால், விசேட வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள் குடும்பத்துடன் நாட்டைவிட்டு வெளியேறுவது என்பது தீவிரமான நிலைமையாகும்.

நாட்டில் அத்தியாவசிய



சேவையை ஆற்றிவந்தவர்களே இவ்வாறு நாட்டிலிருந்து வெளியேறிவருகின்றனர். கடந்த இரண்டரை வருடங்களில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் தங்களது குடும்பத்தாருடன் வெளியேறி வருகின்றனர்.

நாட்டில் மகிழ்ச்சியடைக்கூடிய விடயங்கள் என்று கூறிக் கொள்வதற்கு ஒன்றும் இல்லை. அரசு முன்னெடுக்கும் சிறந்த விடயங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதாகவே நாட்டின் தற்போதைய ஜனாதிபதிக்கு நாங்கள் தெரிவித்துள்ளோம்.

நாட்டு மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்னைகள், உணவுத் தட்டுப்பாடு, வாழ்வாதார செலவீனம், எரிபொருள் பிரச்னை, எரிவாயு பிரச்னை, பொருட்களின் விலை அதிகரிப்பு, விவசாயிகள் எதிர்கொண்டுள்ள உரப்பற்றாக் குறை, அதேபோன்று ஏனைய தொழிற்றுறை சார்ந்தோர் எதிர்கொண்டுள்ள பிரச்னை இவற்றுக்கு எதிராக முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படுமாயின் நாம் அவற்றுக்கு எமது பூரண ஒத்துழைப்பை வழங்குவோம் என்று கூறியுள்ளோம்.

நாங்கள் உடன்படாத விடயங்கள் அரசால் முன்னெடுக்கப்பட்டால் அதற்கு எதிர்ப்பை தெரிவிப்போம் என்றும் நாம் கூறியுள்ளோம். புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் நானும் ஐந்து வருடங்கள் ஒன்றாகப் பணியாற்றியுள்ளோம். எனவே, அவரைப் பற்றி எனக்கு நன்கு தெரியும். என்னைப் பற்றி அவருக்கு நன்கு தெரியும். நாடு தற்போது எதிர்கொண்டு இருக்கும் நெருக்கடி நிலைமைக்கு மத்தியில் அரசியல்வாதிகளின் கடந்த காலங்களை விமர்சிப்பது அவசியமற்ற ஒரு விடயமாகும். அரசியல் கட்சிகள் பற்றி ஆராய்ந்து பார்த்துக் கொண்டு இருக்க முடியாது-என்றார். (அ)

# இலங்கைக்கான விமான சேவைகள் எண்ணிக்கை வெகுவாகக் குறைப்பு

கொழும்பு, ஓக. 18

7 வெளிநாட்டு விமான சேவை நிறுவனங்கள் இலங்கைக்கான விமான சேவைகளின் எண்ணிக்கையை ஒரு வாரத்தில் 108 இல் இருந்து 52 ஆக குறைத்துள்ளன.

எரிபொருள் நிரப்பும் வசதிகள் இல்லாமை மற்றும் வருமானம் ஈட்டுவதில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் காரணமாகவே இவ்வாறு விமான சேவைகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக 5 விமான சேவை நிறுவனங்கள் விமானங்களின் எண்ணிக்கையை குறைத்துள்ளதாகவும், 02 விமான நிறுவனங்கள் இலங்கைக்கு வருவதைக் கூட நிறுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கமைய எமிரேட்ஸ், கட்டார் எயார்வேஸ், எதிஹாட், ஓமான் எயார்லைன்ஸ் , எயார் இந்தியா ஆகிய நிறுவனங்கள் இலங்கைக்கான விமான சேவை எண்ணிக்கையை குறைத்துள்ளதுடன், சவூதி எயார் மற்றும் குவைத் எயார் வேஸ் ஆகியவை இலங்கைக்கான விமான சேவைகளை இடைநிறுத்தியுள்ளன.

எமிரேட்ஸ் விமான நிறுவனங்கள் வாரத்திற்கு 26 விமானங்களை இயக்கி வந்த நிலையில் தற்போது 14 ஆகக் குறைத்துள்ளது.

அத்துடன், கட்டார் எயார் வேஸ் முன்பு வாரத்திற்கு 35 விமானங்களை இயக்கியிருந்த நிலையில், தற்போது அது 31 ஆக குறைக்கப்பட்டுள்ளது.

எதிஹாட் முன்பு வாரத்திற்கு 14 விமானங்களை இயக்கி வந்த நிலையில், தற்போது அதை 06 ஆகக் குறைத்துள்ளது.

ஓமான் எயார்லைன்ஸ் முன்பு வாரத்திற்கு 11 விமானங்களை இயக்கி வந்த நிலையில் தற்போது அதை 07 ஆகக் குறைத்துள்ளது.

மேலும், எயார் இந்தியா முன்பு வாரத்திற்கு 09 விமானங்களை இயக்கிய நிலையில், தேவை பலவீனமானதால் அதை 04 ஆக குறைத்துள்ளது.

மேலும், வாரத்திற்கு 07 விமானங்களை இயக்கிய சவுதி எயார் நிறுவனமும், வாரத்திற்கு 04 விமானங்களை இயக்கிய குவைத் எயார்வேஸ் நிறுவனமும் இலங்கைக்கான விமான சேவையை இடைநிறுத்தியுள்ளன.

மாலைதீவு, சலாம் எயார் வேஸ், தாய் ஸ்மைல், விஸ்தாரா, சைனா சதர்ன் மற்றும் சுவிஸ் இன்டர்நஷனல் ஆகிய நிறுவனங்கள் நாட்டின் நிலைமை சீராகும் வரை இலங்கையுடனான தங்கள் நடவடிக்கைகளை மட்டுப்படுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)



# முருகானந்தா ஆரம்ப வித்தியாலயத்தின் மாணவ தலைவர்களுக்கு சின்னம் சூட்டல்

கிளிநொச்சி, ஓக. 18

கிளிநொச்சி முரசுமோட்டை முருகானந்தா ஆரம்ப வித்தியாலயத்தின் மாணவத் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வும் மாணவர்களின் சத்தியப்பிரமாண நிகழ்வும் நேற்று நடைபெற்றது.

நேற்று முற்பகல் 10 மணிக்கு பாடசாலை முதல்வர் க.கருணானந்தன் தலைமையில் நடைபெற்றது

இதில் முருகானந்தா வித்தியலயத்தின் பழைய மாணவனும் பிரான்ஸ் ஒன்றியத்தைச் சேர்ந்த கிருபானந்தன் முதன்மை அதிதியாகக் கலந்து கொண்டு மாணவர்களுக்கான சின்னத்தை சூட்டி வைத்த நிகழ்வில் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் என பலர் கலந்து கொண்டிருந்தனர். (அ)

# தேர்தலுக்கு செல்லவேண்டும்

*ஹரிணி அமரசூரிய எம்.பி. கோரிக்கை*

கொழும்பு, ஓக. 18

ஒரு தனி நபரின் கொள்கைகளை அமுல்படுத்துவதற்கு அல்லது நியாயப்படுத்துவதற்காக சர்வகட்சி அரசாங்கத்திற்கு ஆதரவளிக்க முடியாது என தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

களுத்துறையில் இடம்பெற்ற நிகழ்ச்சியொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை கூறினார்.

மேலும்,சிதைக்கப்பட்ட பாராளுமன்றத்தை திருத்துவதற்கு பொதுத்தேர்தல் தேவை எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)

# எமது கப்பலின் செயற்பாடுகளுக்கு மூன்றாம் தரப்பு தடையாகக்கூடாது

## சீன வெளிவிவகார அமைச்சு தெரிவிப்பு

**கொழும்பு, ஓக. 18**

**தமது கப்பலின் செயற்பாடுகள் எந்தவொரு நாட்டின் பாதுகாப்பையும் பாதிக்காது என்றும், எந்தவொரு மூன்றாம் தரப்பினரும் தடையாக இருக்கக் கூடாது எனவும் சீனா தெரிவித்துள்ளது.**

சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் வெங் வென்பின் இதனை தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் கருத்து வெளியிட்ட அவர், “யுவான் வாங் 5 கப்பல், இலங்கையின் தீவிர ஒத்துழைப்புடன், இந்தியா - அமெரிக்காவின் கவலைகளுக்கு மத்தியில் அம்பாந்தோட்டை துறைமுகத்தில் வெற்றிகரமாக நிறுத்தப்பட்டுள்ளது.

யுவான் வாங்-5 கப்பலின் கடல் அறிவியல் ஆராய்ச்சி நடவடிக்கைகள் சர்வதேச சட்டத்திற்கு இசைவானவை என்பதை மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன். இது வழக்கமான சர்வதேச நடைமுறையாகும்.

சில நாடுகள் கொழும்பிற்கு அழுத்தம் கொடுப்பதும், அதன் உள் விவகாரங்களில் மொத்தமாக தலையிடுவதும், பாதுகாப்புக் கவலைகள் என்று கூறுவதும் முற்றிலும் நியாயமற்றது.

அவை எந்த நாட்டின் பாதுகாப்பு மற்றும் பொருளாதார நலன்களை பாதிக்காது என்றும் இது எந்தவொரு மூன்றாம் தரப்பினராலும் தடுக்கப்படக் கூடாது என்று கூறினார். (அ)

# வெளிநாட்டு தொழிலாளர்களுக்கு விமான நிலையத்தில் தனி வாயில்

கொழும்பு, ஓக. 18

வெளிநாடுகளுக்குச் செல்லும் இலங்கைப் பணியாளர்கள் விமான நிலையத்துக்குள் நுழைவதற்கும் வெளியேறுவதற்கும் விசேட நுழைவாயில் திறக்கப்படவுள்ளது. எதிர்வரும் செப்ரெம்பர் முதலாம் திகதி இந்த விசேட நுழைவாயில் திறக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளுக்குச் செல்லும் இலங்கைப் பணியாளர்கள் எதிர்நோக்கும் சிரமங்களை தவிர்ப்பதே இதன் நோக்கம் என அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

மேலும், இதன் மூலம் சுற்றுலா விசா மூலம் வெளிநாடுகளுக்கு தொழில் நிமித்தம் செல்பவர்களை அடையாளம் காண முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# கப்புட்டாவை தேசியப் பறவை ஆக்குமாறு டிலான் பரிந்துரை

கொழும்பு, ஓக. 18

“கப்புட்டாவின் ஆலோசனையின் பிரகாரமே நாட்டில் ஆட்சி நடக்கின்றது. எனவே, ‘கப்புடா’வை (காகம்) தேசிய பறவையாக அறிவித்தால்கூட பரவாயில்லை.” - என்று பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

“விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர், உரப்பிரச்னையால் தான் இந்நிலைமை ஏற்பட்டது. இவற்றுக்கு தீர்வை தேடாமல், தேசிய விலங்கான மர அணிலை மாற்ற வேண்டும் என யோசனை முன்வைக்கப்படுகின்றது.

நமது நாட்டை கப்புடா தான் ஆள்கின்றது. எனவே, தேசிய பறவையாக கப்புட்டாவை அறிவித்தால்கூட பரவாயில்லை.

சர்வகட்சி அரசு என்ற போர்வையில் அமைச்சரவை எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு முயற்சி எடுக்கப்படுகின்றது. மக்கள் இதனை எதிர்பார்க்கவில்லை.” - எனவும் டிலான் பெரேரா குறிப்பிட்டார். (அ)

# நெல் விற்பனை செய்யமுடியாமல் தவிக்கும் வவுனியா விவசாயிகள்!

வவுனியா, ஓக. 18

சிறந்த விலை இன்மை மற்றும் நெல்லை கொள்வனவு செய்ய எவரும் ஆர்வம் செலுத்தாமையினால் நெல்லை விற்பனை செய்ய முடியாத நிலை காணப்படுவதாக வவுனியா கொக்குவெளி மற்றும் பேயாடிகூழாங்குளம், ஓயார்சின்னக்குளம் விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் கருத்து தெரிவிக்கையில்-

தற்போது சிறுபோக அறுவடை இடம்பெற்று வரும் நிலையில் ஒரு ஏக்கருக்கு 30 மூடை என்ற ரீதியில் விளைச்சல் கிடைக்கின்றது. எனினும் நெல் ஆலை உரிமையாளர்களோ வெளி மாட்டங்களில் இருந்தோ நெல்லை கொள்வனவு செய்வதற்கு எவரும் வராத நிலை காணப்படுகின்றது.

இதற்கு டீசல் பிரச்னை காரணமாக உள்ளது. இதனால் நிர்ணய விலை வவுனியாவில் காணப்படவில்லை.

கடந்த முறை சேதனப் பசளையை பயன்படுத்தி செய்த போதிலும் விளைச்சல் குறைவாக காணப்பட்டாலும் 10 ஆயிரம் ரூபா வீதம் ஒரு மூடை நெல்லை விற்பனை செய்திருந்தோம். இம்முறை 40ஆயிரம் ரூபாவுக்கு இரசாயனப் பசளை போட்டு செய்கையில் ஈடுபட்ட போதிலும் கொள்வனவாளர்கள் இன்மையால் நல்ல விலை கிடைக்கவில்லை. நெல்லையும் விற்பனை செய்ய முடியாமல் இருக்கின்றது.

5900 ரூபா மற்றும் 6900 ரூபா என்ற ரீதியில் நெல்லை சிலர் கொள்வனவு செய்தாலும் 15 முதல் 20 நாட்கள் கழித்தே பணத்தை தருகின்றனர்.

இதனால் நாம் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்கின்றோம். அத்துடன் நெல்லை கட்டுவதற்கு பைகள் இல்லை. ஒரு பை 160 ரூபா வரையில் விற்கப்படுகின்றது. அதனால் பழைய பைகளையே பயன்படுத்தவேண்டிய நிலை உள்ளது. சணல் ஒரு கிலோ 2000 ரூபா வரையில் விற்பனை செய்யப்படுகின்றது. அதே வேளை நெல்லை விற்பனை செய்ய நெல் ஆலைகளுக்கு கொண்டு சென்றாலும் அவர்கள் நெல் வேண்டாம் என்கின்றார்கள் அதனால் திருப்பி கொண்ட வரவேண்டிய நிலை உள்ளது-என்றனர். (அ)

# போலந்து நாட்டவர் கைது

கொழும்பு, ஓக. 18

5 கிலோகிராம் கொக்கெய்ன் போதைப்பொருளுடன் போலந்து நாட்டவர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அறிக்கை ஒன்றை வெளியிட்டு பொலிஸ் ஊடகப்பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

அதற்கமைய, கைப்பற்றப்பட்ட போதைப்பொருளின் மொத்த பெறுமதி 245 மில்லியன் ரூபா என பொலிஸார் குறிப்பிட்டனர். (அ)

# உயர்தர பரீட்சை பெறுபேறு தாமதமாக பரீட்சைகள் திணைக்களமே காரணம்?

கொழும்பு, ஓக. 18

உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் வெளியாவதில் ஏற்பட்ட காலதாமதமானது செயன்முறைப் பரீட்சைக்குத் தவறிய மாணவர்களின் பிரச்னையல்ல, பரீட்சை திணைக்களத்தில் ஏற்பட்ட உள்ளக தாமதங்களே காரணம் என நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் இம்மாதம் 15ஆம் திகதி வெளியிடப்படும் என கடந்த மாதம் பாராளுமன்றத்தில் அறிவித்த கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, செயன்முறை பரீட்சைக்கு தோற்ற தவறிய மாணவர்களால் பெறுபேறுகள் செப்ரெம்பர் மாத முற்பகுதியில் வெளியிடப்படும் என மீண்டும் கடந்த வாரம் பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

செயன்முறைப் பரீட்சைகளைத் தவறவிட்ட சுமார் 400 மாணவர்கள் உள்ளனர், இந்த மாணவர்களின் பெறுபேறுகள் வெளியாகும் வரை, எஞ்சிய பெறுபேறுகளை வெளியிடுவதில் பிரச்னை இல்லை என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும் திணைக்களத்திடம் விருப்பத்தை முன்வைத்துள்ளது. அனைத்து முடிவுகளும் வெளியாகி சுமார் ஒரு மாதம் கழித்து இந்த மாணவர்களின் தேர்வு முடிவுகள் வெளியானாலும், இசட் புள்ளிகளை தயாரிப்பதில் சிக்கல் இருக்காது என ஒதுக்கீடு ஆணையம் கூறுகிறது. செயன் முறைப் பரீட்சைக்குத் தவறிய மாணவர்கள் குழுவினால் அனைத்து மாணவர்களின் பெறுபேறுகளையும் தாமதப்படுத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது என கல்வி அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (அ)

# பொது மக்களுக்கு நிவாரணப் பொதி!

## வழங்குவதற்கு அரசாங்கம் உறுதி

கொழும்பு, ஓக. 18

நிவாரண பொதியொன்று எதிர்வரும் திருத்தி அமைக்கப்பட்ட வரவு செலவுத் திட்ட முன்மொழிவு மூலம் பொது மக்களுக்கு வழங்கப்படும் என அரசாங்கம் உறுதியளித்துள்ளது.

அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் பந்துல குணவர்தன, அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாட்டின் போது இது தொடர்பாக அறிவித்தார்.

உருளைக்கிழங்கு, வெங்காயம் மற்றும் பருப்பு போன்ற இறக்குமதி செய்யப்படும் உணவுப் பொருட்களின் விலைகள் அதிகரிப்புக்கு, ரூபாவுக்கு ஈடாக டொலரின் மதிப்பு அதிகரிப்புடன் வாழ்க்கைச் செலவும் கணிசமாக அதிகரித்துள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

203 ரூபாவாக இருந்த டொலரின் பெறுமதி நேற்று 365 ரூபாவாக அதிகரித்துள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அந்நியச் செலாவணி அதிகரித்ததன் காரணமாக பொருட்களின் விலைகள் உயர்வடைந்துள்ளதாகவும், இதன் மூலம் பணவீக்கம் அதிகரித்து அத்தியாவசியப் பொருட்களின் விலைவாசியும் உயர்வடைந்துள்ளதாகவும் தெரிவித்த அமைச்சர், விலைவாசி உயர்வைத் தடுக்க முடியாத நிலை இருப்பதாகவும் கூறினார்.

திருத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் மூலம் பொது மக்களுக்கு நிவாரணம் அளிக்கும் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்டுள்ள பொதுமக்களுக்கு வெளிநாட்டு உதவிகளின் ஊடாக உதவ திட்டமிட்டுள்ளதாகவும் அமைச்சர் பந்துல குணவர்தன மேலும் குறிப்பிட்டார். (அ)

# கோட்டாவுக்கான செலவு தொடர்பில் அமைச்சரின் கூற்றை மறுக்கும் அரசு

கொழும்பு, ஓக. 18

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, சிங்கப்பூரில் இருந்து தாய்லாந்துக்கு வாடகை விமானம் மூலம் கடந்த வாரம் செல்வதற்கான செலவை இலங்கை அரசாங்கம் செலுத்தியதாக அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்தன தெரிவித்த நிலையில், அந்த செலவில் இலங்கை அரசாங்கம் எவ்வித பங்களிப்பும் செய்யவில்லை என அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி தனது வெளிநாட்டு பயணங்களுக்காக தனது சொந்த நிதியை செலவிட்டுள்ளதாக திணைக்களம் தெரிவித்துள்ளது.

அமைச்சரவையின் நேற்று முன்தினம் ஊடக சந்திப்பில் ஊடகவியலாளர் ஒருவருக்கு பதிலளித்த அமைச்சர் குணவர்தன, இலங்கை அரசாங்கத்தின் பொறுப்பு என்பதாலேயே அதற்கான கட்டணத்தை செலுத்தியதாக தெரிவித்தார்.

ஒவ்வொரு நிறைவேற்று முன்னாள் ஜனாதிபதியும் அவர்களது துணைவியார்களும் நன்மைகள், சலுகைகள் மற்றும் சிறப்பு வசதிகளை அனுபவிக்கின்றனர்.

எனவே முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கட்டணத்தை செலுத்த அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது என்று அவர் மேலும் கூறினார்.

இந்த சட்டத்தின் விதிகளின் கீழ் முன்னாள் ஜனாதிபதிகளான மைத்திரிபால சிறிசேன, சந்திரிகா குமாரதுங்க மற்றும் ஹேமா பிரேமதாஸ ஆகியோருக்கு குடியிருப்பு, கொடுப்பனவு மற்றும் ஏனைய வசதிகள் வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சர் குணவர்தன வலியுறுத்தினார்.

எதிர்காலத்தில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய நாடு திரும்பினால், ஓய்வு பெற்ற ஜனாதிபதிக்கு உரிய அனைத்து வசதிகளையும் சலுகைகளையும் அரசாங்கம் அவருக்கு வழங்கவேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ)

ஈழநாடு



# மக்களுக்கு மேலாக அரசாங்கத்தின் பாதுகாப்புக்கு முன்னுரிமை கொடுக்கும் போக்கு



கலாநிதி ஜெகான் பெரேரா

“மனிதகுலத்தின் இயற்கையான வாழ்வுச்சூழல் ஒரு போர்நிலையில் இருந்தது. அதில் வாழ்வு தனிமையானதாக, தரம் தாழ்ந்ததாக, வெறுக்கத்தக்கதாக, கொடுமையானதாக, குறுகிய காலமுடையதாக இருந்தது. ஏனென்றால் தனிமனிதர்கள் “எல்லோரும் எல்லோருக்கும் “ எதிரான ஒரு போர் நிலையில் இருந்தார்கள் ” என்று தத்துவஞானி தோமஸ் ஹொப்ஸ் கூறினார். அதனால் ஒரு உடன்பாட்டுக்கு வரவேண்டிய அவசியம் அவர்களுக்கு ஏற்பட்டது.

இதை தத்துவஞானி ஜோன் லொக் சமூக ஒப்பந்தம் ஏன்று அழைத்தார். தனிமனிதர்கள் தங்களது சுதந்திரங்களில் சிலவற்றை விடடுக்கொடுத்து ஆட்சியாளரின் அதிகாரத்துக்கு அல்லது பெரும்பான்மை ஒன்றின் தீர்மானத்துக்கு பணிந்துபோவதற்கு வெளிப்படையாக அல்லது குறிப்பால் உணர்த்தி ஒத்துக்கொண்டார்கள் என்பதே சமூக ஒப்பந்தத்தின் வாதமாகும். சமூகங்கள் எவ்வாறு ஆளப்படவேண்டும் என்பதற்கான விதிகளை அரசியலமைப்புகள் வகுத்தன.

ஹொப்ஸூம் லொக்கும் வாழ்ந்த 17 ஆம் நூற்றாண்டில் இருந்து அரசியலமைப்புச் சிந்தனையின் பரிணாம வளர்ச்சி ஆட்சியாளர்களின் அதிகாரங்களை ஒழுங்கமைப்பதற்கும் ஆட்சியாளர்களிடமிருந்து மக்களைப் பாதுகாப்பதற்கும் வழிவகைகளை கண்டறிவதாகவே இருந்துவந்திருக்கிறது. அதிகாரத்தைக் கொண்டிருப்பவர்கள் மீது மட்டுப்பாடுகள் விதிக்கப்படவேண்டிய தேவை இருக்கிறது. அவர்கள் பொறுப்புக்கூற வேண்டியவர்களாக இருப்பது அவசியம். ஆட்சியாளர்களுக்கு மட்டுப்பாடுகள் விதிக்கப்படாவிட்டால், பொறுப்புக்கூற வைக்கப்படா விட்டால் அவர்கள் பெரும்பாலும் அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்வார்கள். அதிகாரம் ஊழலுக்கு வழிவகுக்கும். முற்றுமுழுதான அதிகாரம் முற்றுமுழு தான ஊழலுக்கு வழிவகுக்கும் என்பது உண்மை நிலையாக இருந்து வந்திருக்கிறது.

ஆட்சியாளர்கள் தங்களது அதிகாரங்களை வகைதொகையின்றி பயன்படுத்திவந்திருப்பதை நாம் 74 வருடங்களாக பார்த்திருக்கிறோம். சில ஆட்சியாளர்கள் மற்றைய ஆட்சியாளர்களை விட கூடுதலாக அதிகாரங்களைப் பயன்படுத்தியிருக்கிறார்கள். 40 வருடங்களுக்கும் அதிகமான காலத்துக்கு முன்னதாக தமிழ்ப் பிரிவினைவாத கிளர்ச்சியை கையாளுவதற்காக கொண்டுவரப்பட்ட பயங்கரவாத தடைச்சட்டம் ஆட்சியாளர்களின் அதிகாரத்தைப் பாதுகாப்பதற்கு இன்னமும் கூட நடைமுறையில் நிலைத்திருக்கிறது. அரசியலமைப்புக்கு கொண்டுவரப்பட்ட 20 வது திருத்தத்தின் வாயிலாக இலங்கையின் ஆட்சியாளர்கள் முற்றுமுழுதான அதிகாரத்தைச் செலுத்திய கடந்த மூன்று வருடங்களில் நாட்டு நிலைவரம் மோசமடைந்ததைக் கண்டோம். முதற்தடவையாக நாடு வங்குரோத்து நிலையை அடைந்திருக்கிறது.

அரசியலமைப்புக்கான 22 திருத்தம் தொடர்பான தற்போதைய விவாதத்தின் நோக்கம் ஆட்சியாளர்களாக இருக்கும் அரசியல்வாதிகளின் அதிகாரங்களைக் குறைப்பதற்கு சிவில் சமூகத்தின் பாத்திரத்தை விரிவுபடுத்தி உறுதிப்படுத்துவதாகும். அரசியலமைப்பு பேரவையில் சிவில் சமூகத்தின் பிரதிநிதிகளாக இருக்கப்போகும் மூவர் பற்றியதே இப்போது முக்கியமான கேள்வி. சிவில் சமூகத்தின் பிரதிநிதிகள் பாராளுமன்றத்தின் பெரும்பான்மைக்கு ஏற்புடையவர்களாக இருக்கவேண்டும் ( இதன் மூலமாக இறுதி தீர்மானம் அரசாங்கத்தினுடையதாக இருப்பதற்கே வழிவகுக்கப்படுகிறது) என்று திருத்தத்தின் தற்போதைய வரைவு கூறுகிறது.

துரதிர்ஷ்டவசமாக, அரசியலமைப்பு சீர்திருத்தம் தொடர்பிலான இலங்கையின் அனுபவம் மக்களுக்கு எதிராக ஆட்சியாளர்களின் அதிகாரங்களை வலுப்படுத்தும் திசையிலேயே அமைந்துவந்திருக்கிறது. சீர்திருத்தங்கள் என்று கூறப்படுபவை பெரும்பாலும் மக்களுக்கு எதிராக ஆட்சியாளர்களின் கரங்களை வலுப்டுத்தியிருக்கின்ற போதிலும் மக்களுக்காகவே அவ்வாறு செய்யப்பட்டதாக நியாயப்படுத்தப்படுகிறது.

### தேய்வுறும் கட்டுப்பாடுகள்

1972 அரசியலமைப்பு பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சியாளர்களிடம் இருந்து நாடு பெற்றுக்கொண்ட அரசியலமைப்பை பதிலீடு செய்தது. நீதித்துறையினதும் சிவில் சேவையினதும் சுதந்திரத்தை உறுதிப்படுத்திய முந்தைய அரசியலமைப்பு மனித உரிமைகளுக்கும் சமூகங்களுக்கிடையில் பாரபட்சமின்மைக்குமான விசேட பாதுகாப்புக்களையும் கொண்டிருந்தது. ஆனால், அந்த பாதுகாப்புகள் 1972 அரசியலமைப்பில் இருந்து நீக்கப்பட்டன. ஆளும் அரசியல்வாதிகள் இறைமையுடைய மக்களின் விருப்புக்களை உருவகப்படுத்துகிறார்கள் என்று நியாயம் கற்பிக்கப்பட்டு அந்த புதிய அரசியலமைப்பு அவர்களுக்கு அதிகாரமளிப்பதில் நாட்டம் காட்டியது.

தெரிவுசெய்யப்பட்ட அரசியல்வாதிகள் தெரிவுசெய்யப்படாத நீதிபதிகளையும் சிவில் சேவையாளர்களையும் விட மக்களுக்கு கூடுதல் நெருக்கமானவர்களாக இருக்கிறார்கள் என்று வாதிடப்பட்டது.

சிவில் சேவையாளர்கள் மக்களிடமிருந்து விலகியிருப்பதால் பக்கச்சார்பற்றவர்களாக இருக்கிறார்கள். இந்த பெறுமதி பெருமளவுக்கு விளங்கிக்கொள்ளப்படவில்லை. புதிய அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்ததும் நீதிபதிகள் பதவி நீக்கப்பட்டு அவமானப்படுத்தப்பட்டார்கள். 1978 அரசியலமைப்பு 1972 அரசியலமைப்பின் நடவடிக்கைகளையே திரும்பவும் செய்தது. நீதிபதிகள் மீண்டும் பதவிநீக்கப்பட்டு அவமதிப்பாக நடத்தப்பட்டார்கள். பின்னர் ஒரு கட்டத்தில் நீதிபதிகள் கல்வீச்சுக்கும் கூட இலக்கானார்கள்.

நாம் வளர்த்தெடுத்த இந்த கலாசாரங்கள்தான் இன்றைய நெருக்கடிக்கு வழிவகுத்து அறகலய மக்கள் போராட்டத்துக்கான தளத்தை அமைத்தன. 1978 அரசியலமைப்பு, 1972 அரசியலமைப்பில் இருந்த மத்தியமய அதிகாரத்தை மேலும் பலபடிகள் உயர்த்திச் சென்று நிறைவேற்று அதிகார ஜனாதிபதி என்ற தனியொரு பதவியிடம் குவித்திருக்கிறது. மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற பாராளுமன்ற முறை நடைமுறைக்கு வருவதற்கு முன்னதாக இருந்த மன்னர்களைப் போன்று நிறைவேற்று அதிகார ஜனாதிபதி சட்டத்துக்கு மேலானவராகக்கூட இருக்க முடியும் என்றாகிறது.

ஆணைப் பெண்ணாகவும் பெண்ணை ஆணாகவும் மாற்றுகின்ற அதிகாரம் ஒன்று மாத்திரமே தன்னிடம் இல்லை என்று இலங்கையின் முதலாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தன கூறினார். தெரிவுசெய்யப்படுகின்ற ஆட்சியாளர்களின் கைகளில் இந்த அதிகாரங்கள் போகும்போது மட்டுப்பாடு இன்றி அதிகார துஷ்பிரயோகமும் ஊழலும் வளரும் என்பதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றும் இல்லை. பிரிட்டிஷ் காலனியாதிக்கவாதிகளிடம் இருந்து சுதந்திரம் அடைந்தபோது ஆசியாவின் உச்சியில் இருந்த நாடு இன்று அடிப்பரப்புக்கு அண்மையாக நிற்கிறது. அதன் மக்களின் வாழ்நாள் சேமிப்புகள் ஒரு அரை வருடத்திற்குள் அரைவாசியாக்கப்பட்டு விட்டது. இதற்காக ஒரு அரசியல்வாதியேனும் சட்டரீதியான பொறுப்புக்கூறலுக்கு உள்ளாக்கப்படவில்லை.

22 வது அரசியலமைப்பு திருத்தம் 2001 ஆம் ஆண்டின் 17 வது அரசியலமைப்பு திருத்தத்துடன் ஆரம்பித்த அரசியலமைப்பு திருத்தங்கள் குழாமைச் சேர்ந்ததாகும். அரசாங்கம் பலவீனமடைந்ததன் காரணமாக முன்னாள் ஜனாதிபதி அந்த திருத்தத்துக்கு இணங்கினார். இப்போது போன்றே அப்போதும் சமுதாயத்தின் வசதிகுறைந்த மக்களின் கட்சியான ஜே.வி.பி. திருத்தத்தை கொண்டுவருந்ததில் முன்னணியில் நின்றது. அந்த திருத்தத்தின் விளைவாக ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டு பாராளுமன்றத்துடனும் அரச நிறுவனங்களுடனும் சிவில் சமூகத்துடனும் அந்த அதிகாரங்கள் பகிர்ந்துகொள்ளப்பட்டன. தடுப்புக்கள் மற்றும் சமப்படுத்தல்கள் முறைமையை பலப்படுத்தி அதன்முலமாக தேசிய நலன்களுக்காக நல்லாட்சியை மேம்படுத்துவதே 17 வது திருத்தத்தின் பின்னால் இருந்த எண்ணமாகும். இதை ஒத்ததாகவே 19 திருத்தமும் அமைந்தது. ஒரு கூட்டணி கட்சிகள் தாங்கள் மக்களின் தேர்தல் ஆணையூடாக பதவி கவிழ்த்த ஆட்சியாளரின் அதிகார துஷ்பிரயோகங்களுக்கு எதிராக இந்த திருத்தத்தை கொண்டுவந்து பாராளுமன்றத்தில் நிறைவேற்றின.

### உயர்மட்ட ஊழல்

ஆனால், ஆட்சியாளர்களின் அதிகாரங்கள் மீதான மட்டுப்பாடுகளை பிறகு ஆட்சியாளர்களாக வரவிருப்பவர்களோ அல்லது அவர்களது கட்சியைச் சார்ந்தவர்களோ மறுப்பின்றி ஒருபோதும் ஏற்றுக்கொண்டதில்லை. 17 வது திருத்தம் 2010 ஆண்டில் கொண்டுவரப்பட்ட 18 வது திருத்தத்தினால் தலைகீழாக மாற்றப்பட்டது. அந்த திருத்தம் ஜனாதிபதி பதவி இழந்த அதிகாரங்களை மீட்டுக்கொடுத்ததுடன் மேலும் சில அதிகாரங்களையும் வழங்கியது. இதனால் ஆட்சியாளர்களின் அதிகார துஷ்பிரயோகம் கடுமையாக அதிகரித்தபோது அடுத்து வந்த அரசாங்கம் 19 வது திருத்தத்தைக் கொண்டுவந்து ஜனாதிபதியின் அதிகாரங்களை மீண்டும் ஒரு தடவை குறைத்தது.

2015 ஜனாதிபதி தேர்தலில் பெறப்பட்ட மக்கள் ஆணையின் பிரகாரமே இவ்வாறு செய்யப்பட்டது. ஆனால் மீண்டும் 2019 ஆம் ஆண்டில் அடுத்த அரசாங்கத்தை அமைத்தவர்கள் 19 வது திருத்தத்தை நிராகரித்து 20 வது திருத்தத்தை கொண்டுவந்தனர். இது ஜனாதிபதி இழந்த அதிகாரங்களை மீண்டும் வழங்கியதுடன் மேலும் சில அதிகாரங்களையும் கொடுத்தது.

ரத்துச் செய்யப்படவிருக்கும் இந்த 20 வது திருத்தத்தின் கீழ் தான் நாட்டில் ஊழலும் அதிகார துஷ்பிரயோகமும் உச்சநிலையை எட்டி மக்களை முன்னென்றும் இல்லாத வகையிலான பொருளாதார இடர்பாடுகள் மற்றும் வறுமைக்குள் மூழ்கடித்தன. இந்த இடர்பாடுகள் தான் அறகலய அல்லது போராட்ட இயக்கம் தோன்றுவதற்கு வழிவகுத்தன. இந்த இயக்கம் ஜனாதிபதி மாளிகையை மக்கள் முற்றுகையிடுவதிலும் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சரவையை பதவிவிலக வைப்பதிலும் முடிந்தது.

வாழ்நாள் பூராவும் கஷ்டப்பட்டு உழைக்கும் நடுத்தர வர்க்கம் மூன்று வருட காலத்திற்குள் சுருங்கிப்போய் வறியவர்களின் அணியில் சேர்ந்திருக்கிறது. ஆனால் ஆட்சியாளர்களோ வாழ்நாள் சேமிப்பை இழந்தவர்களுக்கு நஷ்டஈடு வழங்குவதற்கு முன்னுரிமை கொடுப்பது குறித்து சிந்திப்பதாக தெரியவில்லை. அவர்களது கவனம் எல்லாம் 2015 - 2019 காலகட்டத்தில் ஆட்சியாளர்களில் சிலருக்கும் அவர்களின் அடிவருடிகளுக்கும் நேர்ந்தவற்றிற்கும் அறகலய போராட்டத்தின்போது தீக்கிரையாக்கப்பட்ட ஆட்சியாளர்களின் வீடுகளுக்கும் நஷ்டஈடு வழங்குவதிலேயே இருக்கிறது.

“அறகலய ராஜபக்சாக்கள் போன்ற அரசியல்வாதிகளை மாத்திரமல்ல, பரந்தளவில் ஊழல் அரசியல் சக்திகளையும் இலக்குவைத்தது. கோட்டா வீட்டுக்கு போ, 225 பேரும் வீட்டுக்கு போ என்ற சுலோகங்கள் மூலம் இது வெளிப்பட்டது. அரசியல் அதிகாரத்தில் இருந்து குறிப்பிட்ட சில தனிநபர்களை அகற்றுவதில் மக்களின் சக்தி முற்றுமுழுதாக கவனம் செலுத்தியது. குறிப்பிட்ட சில அரசியல்வாதிகள் பதவிகவிழ்க்கப்பட்ட பின்னரும் ஆளும் அதிகாரவர்க்கம் தொடர்ந்தும் அதிகாரத்தில் இருக்கிறது. கெட்டவர்கள் நீக்கப்பட்ட அதேவேளை மோசமானவர்கள் அந்த இடத்துக்கு வந்திருக்கிறார்கள். இது இஞ்சியைக் கொடுத்து மிளகாயை வாங்குவது என்ற சிங்கள பழமொழியை ஒத்ததாகும். ராஜபக்சாக்கள் பதிலீடு செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆனால் அதே ஆளும் கும்பலும் அரசியல் முறைமையும் அப்படியே தொடர்ந்து - மேலும் கூடுதல் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய மறுபிறப்பாக - இருக்கின்றன” என்று இந்திய அரசியல் ஆய்வாளர் கலாநிதி மாயா ஜோன் எழுதியிருக்கிறார்.

பொருளாதார இடர்பாடுகள், பொருட்கள் தட்டுப்பாடு, அத்தியாவசிய தேவைகளைப் பெற்றுக்கொள்ள நீண்ட வரிசைகள் மற்றும் கடுமையான விலை அதிகரிப்பு மற்றும் சமூக சகிப்புத்தன்மையின் மட்டுப்பாடுகளின் ஒரு பிரதிபலிப்பே போராட்ட இயக்கமாகும். விலை அதிகரிப்புகள் மக்களின் வருமானத்தை உண்மையில் அரைவாசியாக்கிவிட்டது. சமுதாயத்தில் சில பிரிவினர் மற்றைய பிரிவினரையும் விட கூடுதலாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் போராட்ட இயக்கத்துக்கு எதிராக ஆட்சியாளர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள் நுட்பமானவையாகவும் கடுமையானவையாகவும் இருந்தன. போராட்டத்துக்கு தலைமை தாங்கியவர்கள் ஒவ்வொருவராக கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்படுகிறார்கள் அல்லது பிணையில் விடுவிக்கப்படுகிறார்கள். மீண்டும் போராட்டத்தை நடத்த அவர்கள் துணிச்சல் கொள்ளாதிருப்பதை உறுதிசெய்யும் நோக்குடனேயே இவ்வாறு செய்யப்படுகிறது.

சட்டத்தை நிலைநாட்டுவது என்ற வெளித்தோற்றத்தை காட்டிக்கொண்டு போராட்ட இயக்கத்துக்கு எதிராக மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகள் ஐக்கிய நாடுகள் மனிதஉரிமைகள் பேரவையின் அடுத்த மாத கூட்டத்தொடரின் கண்காணிப்பில் இருந்து தங்களை காப்பாற்றும் என்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை பெறுவதில் பாதிப்பை ஏற்படுத்தாது என்றும் அரசாங்கம் நம்பிகிறது போலும்.

2018 பிற்பகுதியில் அரசியலமைப்புச் சதியொன்றை (நீதித்துறை உறுதியாக நின்றதால் அந்த முயற்சி தோல்விகண்டது) அரங்கேற்றுவதற்கு முயற்சித்த பாராளுமன்ற உறுப்பினர்கள் சபாநாயகரை பலவந்தமாக விரட்டிவிட்டு அவரின் ஆசனத்தில் அமர்ந்தார்கள். கதிரைகளைத் தூக்கியெறிந்தார்கள். மைக்ரோபோன்களை பிடுங்கிவீசினார்கள். ஆனால் சதிமுயற்சி தோல்வி கண்டபோதிலும் கூட அவர்களில் எவரும் இதுவரையில் தண்டிக்கப்படவில்லை. (09ஆம் பக்கம் பார்க்க)

# இறையாண்மை மதச்சார்பின்மை ஜனநாயகம்

ப.சிதம்பரம்



இந்திய அரசமைப்புச் சட்டத்தின் முகவுரையில் இடம்பெற்றுள்ள இறையாண்மை, மதச்சார்பின்மை, ஜனநாயகம் ஆகிய மூன்று வார்த்தைகள் வாசகர்களுக்கு நினைவிலிருக்கும். நவீன இந்தியக் குடியரசை வரையறுக்கும் பண்புகளே அந்த வார்த்தைகள். அத்தகைய குடியரசை உருவாக்கத்தான் 1947 ஆகஸ்ட் 15இல் இந்தியா சுதந்திரம் பெற்றது.

இந்திய சுதந்திரத்தின் எழுபத்தைந்தாவது ஆண்டு நிகழ்வை நாடு கொண்டாடிக்கொண்டிருக்கிறது. அப்படியே நூறாவது ஆண்டு சுதந்திர தினத்தையும், அதற்குப் பிறகு வரும் சுதந்திர தினங்களையும் கொண்டாடும் வகையில் இந்தியா தொடர்ந்து ஜனநாயக நாடாகவே திகழும் என்று நிச்சயம் நம்புகிறேன். இருந்தாலும் மிகுந்த மன நடுக்கத்துடனேயே இந்தக் கேள்வியைக் கேட்கிறேன் - இந்தியக் குடியரசு 2047வது ஆண்டில் இறையாண்மை, மதச்சார்பின்மை, ஜனநாயகம் ஆகிய தன்மைகளுடன் இருக்குமா?

### உதிர்கிறதா மக்களின் அதிகாரம்?

பல நூற்றாண்டுகளாக இந்தியா இறையாண்மை மிக்க நாடாகவே இருந்தது - எப்படி என்றால், வெளிநாடுகளைச் சேர்ந்த ராஜாக்களும் ராணிகளும் இந்தியாவை ஆண்டதில்லை. ஆட்சியாளரை மாற்றக்கூடிய அதிகாரம்தான் இறையாண்மை மிக்க மக்களின் தனிச்சிறப்பு. நேர்மையான - சுதந்திரமான தேர்தல் நடைமுறைகள்தான் மக்களுடைய இறையாண்மை மிக்க உரிமை. சமீபத்திய ஆண்டுகளில் தேர்தல்கள் குறித்தே சந்தேகங்கள் வளர்ந்து வருகின்றன. தேர்தல் முடிவுகளைப் பண பலம்தான் தீர்மானிக்கிறது, பாரதிய ஜனதா கட்சிதான் பண பலத்தில் பெரிய கட்சியாக விளங்குகிறது.

அரசியல் கட்சிகளுக்குக் கிடைக்கும் நன்கொடைகளில் 95 வீதத்தை கைப்பற்றும் வகையில், வஞ்சகமாகத் திட்டமிட்டு தேர்தல் நன்கொடைப் பத்திரம் என்கிற புதிய - மூடுமந்திரமான வழிமுறையை பாஜக அரசு அறிமுகப் படுத்தியிருக்கிறது. இதுவல்லாமல் தேர்தலில் வெற்றி பெற வேறு சில உத்திகளையும் சாதனங்களையும் பாஜக கையாள்கிறது. நடுநிலையாகச் செயல் பட வேண்டிய ஊடகங்கள் அடக்கிப் பணியவைக்கப்படுகின்றன. நிறுவனங்கள் கைப்பற்றப்படுகின்றன. சட்டங்களே ஆயுதங்களாக மாற்றப்படுகின்றன. பல்வேறு முகமைகள் சட்ட விரோதமாக நடக்குமாறு நெருக்கப்படுகின்றன.

அப்படியே ஒருவேளை பொதுத் தேர்தல்களில் தோற்றுவிட்டாலும், 'தாமரைச் செயல்திட்டம்' மூலமாக ஆட்சி கைப்பற்றப்படுகிறது. இப்படித்தான் வெட்கமின்றி கோவா, மணிப்பூர், அருணாசல பிரதேசம், மேகாலயம், கர்நாடகம், மத்திய பிரதேசம் ஆகியவற்றில் அது ஆட்சியைப் பிடித்தது. ராஜஸ்தானில் பிடிக்க முயற்சி செய்தது.

தேர்தல்கள் நியாயமாகவும் சுதந்திரமாகவும் நடக்கும் நடைமுறை இனி கிடையாது என்ற நிலைக்கு வெகு விரைவில் வந்துவிடுவோமோ? அப்படி நடக்காது என்று நம்புகிறேன், ஆனால் அப்படியொரு ஆபத்து ஏற்படாது என்றும் கூறிவிட முடியாது. 'காங்கிரஸ் இல்லாத பாரதம்' என்ற கொள்கை முழக்கம் காங்கிரஸை மட்டும் குறி வைப்பதல்ல. "சிறிய கட்சிகள் எல்லாம் மறைந்துபோய்விடும், பாஜக மட்டுமே அரசியல் களத்தில் தேசியக் கட்சியாக நீடிக்கும்" என்று அக்கட்சியின் தேசியத் தலைவர் ஜே.பி. நட்டா சமீபத்தில் பேசியிருக்கிறார். இது வெறும் பேச்சல்ல, பாஜகவின் தோட்டத்தில் கவனமாக வளர்க்கப்படும் அரசியல் லட்சியச் செடி.

மக்கள் தங்களுடைய இறையாண்மையை ஒரே நாளில் இழந்துவிடமாட்டார்கள். மெதுவாகக் கொல்லும் நஞ்சைப் போல அது உட்செலுத்தப்படும். மக்களுடைய தனிப்பட்ட சுதந்திரம், பேச்சுரிமை - எழுத்துரிமை, மாற்றுக் கருத்துகளைத் தெரிவிக்கும் உரிமை, அச்சமற்று இருப்பதற்கான உரிமை ஆகியவை படிப்படியாக மறுக்கப்பட்டு, அந்த அரிமானம் பரவும். இந்தியா இப்போது எந்த திசை நோக்கிச் செல்கிறது என்று உங்களை நீங்களே கேட்டுக்கொள்ளுங்கள்.

### உதிர்கிறதா மதச்சார்பின்மை?

உலகிலேயே அதிக மக்கள்தொகை உள்ள நாடு என்ற நிலையை இந்தியா இன்னும் சில ஆண்டுகளில் எட்டவிருக்கிறது. மக்கள்தொகை அதிகபட்சமாக 160 கோடியை எட்டிவிடும். மகப்பேறு விகிதங்கள் ஒரு புள்ளியை நோக்கிக் குவிவதால், வெவ்வேறு மதங்களுக்குள்ள மக்கள்தொகை சதவீதம் இப்போதிருப்பதிலிருந்து பெருமளவு மாறிவிடப் போவதில்லை. இந்துக்கள் 78.4 வீதம், முஸ்லிம்கள் 14.4 வீதம், கிறிஸ்தவர்கள் 2.2 வீதம், சீக்கியர்கள் 1.7 வீதம், மற்றவர்கள் 3.3 வீதம். முதல் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு இந்தியா பன்மைத்துவ நாடாக இருந்துவிட்டது.

இப்போதும் இந்தியா பன்மைத்துவ நாடாகத்தான் இருக்கிறது. ஆனால், அந்த பன்மைத்துவத்தை மறுக்கும் முனைப்பு இப்போது (ஆட்சியாளர்களிடம்) தெரிகிறது. அதற்கு மாறாக, அமெரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து போன்ற நாடுகளில் பன்மைத்துவ சமூகங்களால் நாட்டுக்கு ஏற்பட்டுவரும் நன்மைகள் பெருமையுடன் அங்கீகரிக்கப்படுகின்றன. அவர்களுடைய நிறுவனங்களான நீதிமன்றங்கள், பல்கலைக்கழகங்கள், ஊடகம் ஆகியவை பன்மைத்துவத்தைத் தேடி, அவற்றைத் தங்களுடைய அமைப்புகளில் இடம்பெற ஊக்குவித்துக்கொண்டிருக்கின்றன.

இந்திய உச்ச நீதிமன்றத்தில் இப்போது இஸ்லாமியர், கிறிஸ்தவர் சமூகங்களைச் சேர்ந்த தலா ஒருவர் நீதிபதிகளாகப் பதவி வகிக்கின்றனர். சீக்கியர் எவருமில்லை. இப்போது பதவி வகிக்கும் இஸ்லாமியரும் கிறிஸ்தவரும் பதவியிலிருந்து ஓய்வுபெறும் வரையில் அதே சமூகத்தைச் சேர்ந்த இன்னொருவர் நியமிக்கப்படமாட்டார் என்ற அச்சம் நிலவுகிறது.

இந்தியாவால் மதச்சார்பற்ற நாடாக அல்லாமல் வேறு எப்படியாகவும் இருக்க முடியுமா என்று உங்களையே கேட்டுக்கொள்ளுங்கள்? இஸ்லாமியர்களையும் கிறிஸ்தவர்களையும் விலக்கினால் நம்முடைய இசை, இலக்கியம், திரைப்படம், விளையாட்டு, அறிவியல், மருத்துவம், சட்டம், ஆசிரியப் பணி, அரசுப் பணி ஆகியவை வளம் குறைந்துவிடும். மதச்சார்பின்மை என்ற கருத்துக்கு இழிவான பொருளைக் கற்பித்தவர்கள் பாஜக, ஆர்எஸ்எஸ் இயக்கத்தவர். அதை சிறுபான்மை மக்களை வாக்கு வங்கிகளாகப் பயன் படுத்தும் 'காக்காய் பிடிக்கும் உத்தி' என்று இகழ்கின்றனர். அந்தத் தவறான கண்ணோட்டம்தான், ஜம்மு - காஷ்மீர் மாநிலத்துக்கு அளித்த அரசியல் சட்டப்படியான தனி அந்தஸ்தை ரத்துசெய்வது என்ற அவர்களுடைய முடிவுக்குக் காரணமாக அமைந்தது.

தேர்தல் பிரதிநிதித்துவம், கல்வி - வேலைவாய்ப்பில் இட ஒதுக்கீடு, மொழிப் பயன்பாடு, உணவுப்பழக்கம், உடையணியும் பாணி, தனிச்சட்டம் என்று அனைத்திலும் இந்தத் தவறான கண்ணோட்டத்தைத்தான் அவர்கள் காட்டுகின்றனர். மதச்சார்பின்மை மரணிக்கும் செய்தியும், இந்து ராஷ்டிரம் என்று இந்தியாவை அறிவிப்பதும் இந்திய ஜனநாயகத்துக்கே சாவு மணி அடிக்கும் செயலாகிவிடும். பெரும்பான்மை இந்தியர்கள் அப்படியொரு நிலைமை ஏற்படுவதை விரும்பவில்லை. ஆனால், பாஜகவின் ஆதரவாளர்களில் பெரும்பாலானவர்கள் இந்தியாவை இந்து ராஷ்டிரமாக அறிவிக்க வேண்டும் என்பதை ஆதரிக்கின்றனர். அடக்க முடியாத பெரும் சக்தி (இந்துத்துவ ஆதரவாளர்கள்), அசைய முடியாத கூட்டத்தை (மிதவாத, சகிப்புத்தன்மையுள்ள இந்தியர்கள்) நேருக்கு நேர் சந்திக்கும்போது யார் வெற்றிபெறுவார்கள் என்று எனக்குத் தெரியவில்லை.

### உதிர்கிறதா ஜனநாயகம்?

ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை பொதுத் தேர்தலில் வாக்களிப்பது மட்டுமே ஜனநாயகமாகிவிடாது. ஜனநாயகம் என்பது ஒவ்வொரு நாளும் பேச்சுவார்த்தை, விவாதம், கருத்து மோதல் - கருத்தொற்றுமை ஆகியவற்றால் வலுப்படுத்தப்படுவது. அதை அடிப்படையாக வைத்துப்பார்த்தால் இந்தியாவில் ஜனநாயகம் மூச்சுவிட முடியாமல் திணறிக்கொண்டிருக்கிறது. ஆண்டின் மிகச் சில நாள்களில் மட்டுமே நாடாளுமன்றமும் சட்டமன்றங்களும் கூடுகின்றன. 'இந்தியாவிலிருப்பது தேர்ந்தெடுக்கப்பட்ட சர்வாதிகாரம்' என்கிறது சுவீடனை மையமாகக் கொண்டு செயல்படும் 'வி-டெம்' என்ற ஆய்வு நிறுவனம். உலக அரங்கில் இந்தியாவின் ஜனநாயகத்தன்மைக்காக 2021இல் அதை 53வது இடத்துக்கு கீழ் இறக்கியது அந்த அமைப்பு.

இந்தியாவின் அனைத்து மாநிலக் கட்சிகளும் தத்தமது மாநிலங்களில் தங்களுக்கு செல்வாக்கு அதிகரிக்க வேண்டும் என்பதில்தான் அதிக கவனம் செலுத்துகின்றன. அதேசமயம், பிற மாநிலக் கட்சிகளுடன் சேர்ந்து பாஜகவுக்கு எதிராகப் போராட முன் வருவதில்லை. பாஜக தேசியத் தலைவர் நட்டா விரும்புவதைப் போல, 'ஒரே கட்சியின் ஆட்சி' என்கிற கொடுங்கனவு நனவாகிவிடுமோ என்ற அச்சம் ஏற்படுகிறது. 'நாங்கள்தான் ஜனநாயகம் - இந்தியர்களுக்குரிய அத்துணை அம்சங்களும் எங்கள் கட்சிக் குள்ளேயே சங்கமித்துக் கிடக்கின்றன' என்றுகூட அவர் உரிமை பாராட்டக்கூடும்!

இந்திய தேசியக் கொடியின் மூவர்ணத்துக்கு வணக்கம் செலுத்தும் போது, அதை வடிவமைத்த பிங்காலி வெங்கையாவை நினைவுகூருங்கள். இப்போதைய அரசியல் பின்னணியில் அந்த மூவர்ணங்கள் பிரதிநிதித்துவப் படுத்துவது இறையாண்மை, மதச்சார் பின்மை, ஜனநாயகம் ஆகிய மூன்றைத் தான். ●

---

## மக்களுக்கு மேலாக அரசாங்கத்தின் ....

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால், போராட்ட இயக்கத்தில் இணைந்து ஜனாதிபதியின் கதிரையில் இருந்தவர்கள் ஒவ்வொருவராக கைதுசெய்யப்பட்டிருக்கிறார்கள். பதவி கவிழ்க்கப்பட்ட ஜனாதிபதியின் பியர் குவளையை எடுத்த ஆர்ப்பாட்டக்காரர் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்.


ஆனால் ஊழல் குற்றஞ்சாட்டப்பட்ட அரசியல்வாதிகள், குற்றவாளிகளாக காணப்பட்ட அமைச்சர்கள் இன்னமும் அரசாங்கத்தில் இருக்கிறார்கள். இத்தகைய பாரபட்சமான நடவடிக்கைகள் விலைவாசி உயர்வினாலும் பொருட்கள் தட்டுப்பாட்டினாலும் கஷ்டங்களை அனுபவிக்கின்ற மக்கள் மத்தியில் அதிருப்தியை அதிகரிக்கக்கூடிய சாத்தியம் இருக்கிறது.

அரசியலமைப்பு பேரவையில் உறுப்பினர்களாக இருக்கக்கூடிய சிவில் சமூகத்தவர்களை தெரிவு செய்வதற்கான அதிகாரத்தை ஆட்சியாளர்களுக்கு வழங்கும் அரசியலமைப்புக்கான 22 வது திருத்தத்தின் தற்போதைய வடிவம் மக்களின் குரலுக்கு அரசாங்கம் செவிமடுக்கும் என்பதற்கான ஒரு சமிக்ஞை அல்ல. பொறுப்புக்கூற வைக்கப்படுவதையும் அதிகாரத்தை நீதியான முறையில் பயன்படுத்தவேண்டிய அவசியத்தையும் ஏற்றுக்கொள்வதில் உள்ள தயக்கம் எதிர்காலத்தில் ஆட்சியாளர்களுக்கும் மக்களுக்கும் இடையில் முரண்பாடு ஏற்படுவதற்கே வழிவகுக்கும். அத்தகைய நிலை உருவாகும்போது மக்களைப் பொருட்படுத்தாமல் அடக்குமுறையை கட்டவிழ்த்துவிடுவதே ஆட்சியாளர்களின் பதிலாக இருக்கும்.

பொருளாதாரம் வீழ்ச்சியடைந்திருக்கின்ற போதிலும், இராணுவ பட்ஜெட்டுக்கு ஏன் முன்னுரிமை கொடுக்கப்படுகிறது என்பதை இதில் இருந்து புரிந்து கொள்ளமுடியும். புதிய தேர்தல்கள் ஊடாக மாத்திரமே வரக்கூடிய பாராளுமன்றத்திலும் அரசியல் செயன்முறைகளிலும் மக்கள் குரல் பிரதிநிதித்துவப்படுத்தப்படாத பட்சத்தில் ஆட்சிமுறைமையில் பொறுப்புக்கூறலை எதிர்பார்ப்பது கஷ்டமேயாகும். இது வரைவில் அனர்த்தத்துக்கே வழிவகுக்கும்.

# புலமைச் சிகரம் தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

18) 

i) இத் திண்ம உருவில் எத்தனை முகங்கள் உள்ளன? ................................

ii) இத் திண்ம உருவில் எத்தனை உச்சிகள் உள்ளன? ................................

19)  நிறந் தீட்டப்பட்ட பகுதியைப் பின்னமாக எழுதுக.

..............................

20) தரப்பட்ட எண் கோலங்களில் அடுத்துவரும் எண்ணை எழுதுக.

i) 122 , 124 , 126 , ............. , ...........    ii) 18 , 15 , 12 , ............. , ...........

21) | 3, 9, 14, 6, 10, 12, |

பெட்டிக்குள் உள்ள எண்களில் மூன்றின் மடங்குகளைத் தெரிவு செய்து ஒழுங்கு முறையில் எழுதுக.

..................................................

22) ஒரு பழக்கூடையில் 620 அப்பிள் பழங்களும் 125 மாம்பழங்களும் உண்டு. கூடையில் உள்ள மொத்தப் பழங்களின் எண்ணிக்கையை எழுதுக.

.............................................................................

23) ஒரு கிளையில் 480 பூக்கள் மலர்ந்திருந்தன. அவற்றில் 25 பூக்களைப் பறித்தெடுத்தால் கிளையில் எஞ்சியிருக்கும் பூக்களின் எண்ணிக்கை யாது?

...........................................................

24) பழப்பாகுப் போத்தல் ஒன்றில் 3l 300ml பானம் அடங்கியுள்ளது. அதனை 3 மாணவர்களிடையே சமமாகப் பகிரப்பட்டதெனின் ஒருவருக்குக் கிடைத்த பான அளவு யாது?

...........................................................

25) 500g சீனியின் விலை ரூபா 48.00 எனின் 1500g சீனியின் விலை யாது? ...............................................

26) **பின்வரும் சிட்டையைப் பூரணப்படுத்துக.**

| பொருள் | வாங்கிய அளவு | ஒரு கிலோகிராமின் விலை | | | பெறுமதி | |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | சதம் | | ரூபா | சதம் |
| பருப்பு | 2kg | 95 | 00 | i) | ............ | ......... |
| தேயிலை | 500g | 200 | 00 | ii) | ............ | ......... |
| | | மொத்தப்பணம் | | | ............ | ......... |

27) கடிகார முகத்தில் பி.ப. 3.30 மணி காட்டுகின்றது. கடிகாரம் காட்டும் நேரத்தை நியம நேரத்தில் எழுதுக.

..................................................

28) 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?

28) 8m 50cm நீளமான துணியில் 3m துணி வெட்டி எடுக்கப்பட்டது எனின் எஞ்சியிருக்கும் துணியின் நீளம் யாது?

..................................................




29) ஒரு பூங்கொத்தில் மூன்று பூக்கள் வீதம் 12 பூங்கொத்துக்களில் எத்தனை பூக்கள் உள்ளன?

..................................................

(30 புள்ளிகள்)

❖ **இலக்கம் 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தெ செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

30) சூரிய நமஸ்காரத்தின் நான்காம் படிநிலை எது?

1)  2)  3) 

31) வடமாகாணத்தில் அமைந்துள்ள குளம்
1) அபயவாவி 2) இரணைமடுக்குளம் 3) பராக்கிரமபாகு சமுத்திரம்

32) உள் மூச்சு வாங்குதல் வெளி மூச்சு விடுதல் என்பது மனதை ஒருநிலைப்படுத்தும் செயற்பாட் எந்த படிமுறை ஆகும்?
1) திடசித்தம் 2) உதிப்பு 3) உடலைத் தளர்த்தல்

33) தேசிய இலச்சினையின் பூவிதழ் வட்டத்தின் மத்தியில் இருப்பது எது?
1) சூரியன் 2) வாளேந்திய சிங்கம் 3) நெற்கதிர்

34) பிரித்தானியர்களால் முழுமையாக இலங்கை கைப்பற்றப்பட்ட ஆண்டு எது?
1) 1976 2) 1851 3) 1815

35) வருடத்தின் முதல் மாதமும் இறுதி மாதமும் பூக்கும் பூக்கள் எவை?
1) இறப்பர், வேம்பு 2) இறப்பர், தாழம்பூ 3) பிறைப்பூ, நாவல்

## விடைகள்

18. 1) 6   2) 8
19. $\frac{3}{10}$
20. 1) 128, 130   2) 9, 6
21. 3, 6, 9, 12
22. 745
23. 455
24. 1l 100ml / 1100ml
25. ரூபாய் 144.00
26. 1) 190   2) 100   3) 290
27. 15 : 30
28. 5m 50cm / 550cm
29. 36 பூக்கள்
30. 1
31. 2
32. 3
33. 2
34. 3
35. 2

**18.08.2022**
**வியாழக்கிழமை**

கல்வி tv CHANNEL-1

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | புவியியல் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | புவியியல் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கணிதம் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மாதிரி வினாத்தாள் |
| | மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு-LIVE கணிதம் |
| | | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| | | மாதிரி வினாத்தாள் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.30 | தரம்-10 | புவியியல் |

**18.08.2022**
**வியாழக்கிழமை**

கல்வி tv CHANNEL - 2

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | தமிழ் |
| 09.00 | தரம்-02 | சமயம் |
| 09.45 | தரம்-03 | தமிழ் |
| 10.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 11.15 | தரம்-04 | தமிழ் |
| 12.30 | தரம்-04 | Computer |
| 01.15 | தரம்-05 | தமிழ் |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சமயம் |
| 06.00 | தரம்-03 | தமிழ் |
| 06.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 07.30 | தரம்-04 | தமிழ் |
| 08.15 | தரம்-04 | Computer |
| 09.00 | தரம்-05 | தமிழ் |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி-paper |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | தமிழ் |
| 12.30 | தரம்-03 | சுற்றாடற்கல்வி - paper |
| 01.15 | தரம்-04 | தமிழ் |
| 02.00 | தரம்-04 | Computer |
| 02.45 | தரம்-05 | தமிழ் |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி - paper |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |



# முதியோர் சங்கங்களுக்கு தளபாடங்கள் வழுங்கல்

அம்பாறை, ஓக. 18

இறக்காமம் பிரதேச செயலக பிரிவில் காணப்படும் 03 முதியோர் சங்கங்களுக்கு தலா ஒரு இலட்சம் பெறுமதியான காரியாலய தளபாடங்கள் வழங்கும் நிகழ்வு இறக்காமம் பிரதேச செயலாளர் எம்.எஸ்.எம். ரஷ்ஷான் (நளீமி) தலைமையில் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் இறக்காமம் உதவி பிரதேச செயலாளர் எம்.ஏ.சி. அஹமட் நஸீல், கிராம சேவக நிருவக உத்தியோகத்தர் எச்.பி. இந்திர ஸ்ரீ யசரட்ன, சமூக சேவைப் பிரிவு பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர் ஏ. யஹ்யால், கிராம உத்தியோகத்தர்களான யூ.எல் அமீர், எஸ்.எல். ஹம்சா எம்.ஜே.எம். அத்தீக் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

(அ)

# மட்டு. தான்தோன்றீஸ்வரர் கோவிலுக்கு புதிய நிர்வாகம்

மட்டக்களப்பு, ஓக. 18

மட்டக்களப்பு - கொக்கட்டிச்சோலை ஸ்ரீதான்தோன்றீஸ்வரர் கோவில் பரிபாலன சபைக்கு புதிய வண்ணக்குமார் உள்ளிட்ட நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தேசமகா சபையின் தீர்மானத்துக்கமைய இந்த நிர்வாகத் தெரிவு இடம்பெற்றுள்ளது.

இதன்படி, புதிய தலைவராக இ.மேகராசா, செயலாளராக சி.கங்காதரன், பொருளாளராக ச.கோகுலகிருஸ்ணன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அதேவேளை, கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் கோவில் வருடாந்த மகோற்சவம், எதிர்வரும் 29ஆம் திகதி திருக்கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

அதனைத் தொடர்ந்து திருவிழாக்கள் இடம்பெற்று எதிர்வரும் செம்ரெம்பர் மாதம் 11ஆம் திகதி தேரோட்டமும், அதனைத் தொடர்ந்து திருவேட்டை திருவிழாவும் இடம்பெற்று, செம்ரெம்பர் 12ஆம் திகதி பெருமானின் தீர்த்தோற்சவத்துடன் இவ்வாண்டுக்கான மகோற்சவம் நிறைவடையவுள்ளது. (அ)

# தமிழ் தேசிய கூட்டமைப்பு இப்போது செல்லாக் காசு!

## அம்பாறை காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கம் குற்றச்சாட்டு



அம்பாறை, ஓக. 18

காணாமல் ஆக்கப்பட்டோரின் போராட்டத்தை மழுங்கடிக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஊக்குவிக்கப்படுகின்றனர். இதில் அவர்களுக்கு இலாபம் உண்டு.காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளிடம் தொடர்ந்தும் ஆதரவு வழங்குவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஏமாற்றி வருகின்றார்கள். செல்லாக் காசான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை இவ்விடயத்தில் தினமும் நம்பி நாம் ஏமாற்றப்பட்டுள்ளோம் என்பதை தற்போது உணர்ந்துள்ளோம் என அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத் தலைவி தம்பிராசா செல்வராணி தெரிவித்தார்.

கல்முனை பகுதியில் நேற்று நடத்திய விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அம்பாறை மாவட்டத்தில் இன்று வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் போராட்டமானது எங்களது உறவுகளுக்கு என்ன நடந்தது என்ற உண்மை நிலை தெரியும் வரை தொடரவுள்ளது.138 பேரை அம்பாறை மாவட்டத்தில் இழந்து இருக்கின்றோம். அது மட்டுமல்ல காணாமல்போனோரின் அலுவலகத்தை நாங்களும் 8 மாவட்டத்தைச் சேர்ந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளும் வேண்டாம் என்று உறுதியாக நிற்கின்றோம்.

இருந்த போதிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான காரியாலம் வேண்டும் என்று கூறுவதற்கு காரணம் என்ன?இன்று உறவுகளை இழந்து தவித்த 8 மாவட்டங்களைச் சேர்ந்த நாங்கள் சிரமங்களை எதிர்கொண்டுள்ளோம்.அவர்கள் (தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர்) இச்செயலில் இறங்குவதானது எமக்கு மனவருத்தத்தை தருவதுடன் ஆத்திரமடைகின்றோம்.

அது மட்டுமல்ல இந்நாட்டில் இறுதி யுத்தத்தின் போது மனித உரிமை மீறல்கள் மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டமையை தொடர்ந்து இலங்கை பொறிமுறையில் நம்பிக்கை இல்லாத காரணத்தினால் தான் நாங்கள் இன்று சர்வதேசத்தை நாடி இருக்கின்றோம்.அதற்கான காரணத்தையும் ஐக்கிய நாடுகள் சபை முன்றலில் கூறி இருக்கின்றோம். இந்த உள்ளக பொறிமுறை விசாரணையை ஏன் விரும்பவில்லை என்ற காரணத்தையும் அங்கு தெளிவாக கூறியுள்ளோம். ஒன்றுமில்லாத காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகம் ஒன்றினை எம்மிடையே திணிக்க இலங்கை அரசு பார்த்தது. ஒன்றுமே இல்லாத அலுவலகம் என்பதனால் நாங்கள் இன்று வெறுத்திருக்கின்றோம்.

இவ்வாறான அலுவலகங்களை எல்லாம் பாராளுமன்ற உறுப்பினர்கள் முன்னின்று ஊக்குவிப்பதற்கான காரணம் என்ன? இன்று அவர்களது கதிரைகளை தக்க வைத்து கொள்ளவா?அடுத்த தேர்தலுக்கு தங்களை தயார்ப்படுத்தி கொள்வதற்கா?என்பது எங்களுக்கு கேள்வி குறியாகவே உள்ளது.

ஆகவே எங்களது விடயத்தில் தயவு செய்து மூக்கை நுழைக்க வேண்டாம். எங்களுக்கு விடுதலையை பெற்றுத்தர விரும்பி இருந்தால் கடந்த 10 வருடங்களுக்கு முன்னர் எங்களது உறவுகளுக்கான நீதி கிடைத்திருக்கும்.ஆனால் நீங்கள் கதிரைகளுக்கு ஆசைப்பட்டு அரசுடன் சேர்ந்து உழைக்கின்றீர்கள்.

எதிர்வரும் 9 ஆம் மாதம் ஜெனிவா கூட்டத் தொடரில் எமக்கான நீதி கிடைக்கும் என நம்புகின்றேன்.இன்று அரசாங்கத்துடன் இணைந்து எங்களது காணாமல் ஆக்கப்பட்டோரின் போராட்டத்தை மழுங்கடிக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஊக்குவிக் கப்படுகின்றனர். இதில் அவர்களுக்கு இலாபம் உண்டு.காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளிடம் தொடர்ந்தும் ஆதரவு வழங்குவதாக தமிழ் தேசிய கூட்டமைப்பினர் ஏமாற்றி வருகின்றார்கள் - என்றார். (அ)

# ஒலுவில் துறைமுகம் மூடப்பட வேண்டும்

## கிழக்கிலங்கை முஸ்லிம் முன்னணி கோரிக்கை

அம்பாறை, ஓக. 18

“ஒலுவில் துறைமுகத்துக்கு எம்.எச்.எம்.அஷ்ரப்பின் பெயர் சூட்டப்பட்டிருப்பதானது ஒரு சூழ்ச்சியாகவே நோக்கப்படுகிறது. கல்முனைப் பிராந்தியத்தில் கடலரிப்பு ஏற்படுவதற்கும் கடற்றொழில் பாதிப்படைவதற்கும் முக்கிய காரணமாக அமைந்திருக்கின்ற இத்துறைமுகம் உடனடியாக இழுத்து மூடப்பட வேண்டும்” என கிழக்கிழங்கை முஸ்லிம் முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது.

இக்கோரிக்கையை வலியுறுத்தி, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, துறைமுக அபிவிருத்தி அமைச்சர் நிமல் சிறிபால டி.சில்வா மற்றும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உள்ளிட்டோருக்கு மகஜர் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக அமைப்பின் செயலாளர் செயிட் ஆஷிப் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மறைந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப், நாட்டினதும் பிராந்தியத்தினதும் பொருளாதார அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு ஒலுவில் துறைமுக நிர்மாணத் திட்டத்தை முன்மொழிந்திருந்தார்.

எனினும், குறித்த கடற்பரப்பு துறைமுக அமைப்புக்கு பொருத்தமற்றது எனவும் இதனால் மீனவர் சமூகத்தினருக்கு பெரும் பாதிப்பு ஏற்படக் கூடிய வாய்ப்புள்ளது எனவும் நிபுணத்துவ ஆய்வறிக்கை வெளிப்படுத்தியிருந்தது.

அவை எதுவும் கருத்தில் கொள்ளப்படாமலேயே துறைமுக நிர்மாண வேலைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. இதற்காக ஒலுவில் கிராமத்தில் நூற்றுக்கணக்கானோரின் குடியிருப்புக் காணிகள் சுவீகரிக்கப்பட்டிருந்தன.

இத்துறைமுக நிர்மாணத்தால் நாட்டுக்கோ பிராந்தியத்துக்கோ இதுவரை எவ்விதப் பயனும் கிடைக்கவில்லை. மாறாக தொடர்ந்தும் இழப்புகளையே சந்திக்க நேரிட்டுள்ளது. இதற்காக ஒரு கிராமம் காவு கொடுக்கப்பட்டிருக்கிறது.

மக்கள் தமது காணிகளையும் வாழ்வாதாரத்தையும் இழந்து, நிர்க்கதியடைந்திருப்பதுடன் பாரிய கடலரிப்புக்கும் வழிவகுத்திருக்கிறது.

கடற்றொழில் அமைச்சரான டக்ளஸ் தேவானந்தா அண்மையில் இங்கு விஜயம் செய்து, இத்துறைமுகத்துக்கு அஷ்ரப் ஞாபகார்த்த மீன்பிடித் துறைமுகம் என்று பெயர் சூட்டி விட்டுச் சென்றுள்ளார்.

இத்துறைமுகத்துக்கு மறைந்த தலைவரான அஷ்ரபின் பெயரை சூட்டி விட்டால் பிரச்னைகள் எல்லாம் தாமாக தீர்ந்து விடுமா? இது மக்களை ஆசுவாசப்படுத்தி, திசை திருப்பும் சூழ்ச்சியாகவே நோக்கப்படுகிறது.

இவ்வாறான மாயைகளை விடுத்து, மக்களின் பிரச்னைகளை உள்வாங்கி தூரநோக்குடன், ஆக்கபூர்வமாக சிந்தித்து, செயற்பட அரசாங்கமும் சம்பந்தப்பட்ட அமைச்சர்களும் அவசரமாக முன்வர வேண்டும் - என்றார்.

(அ)

# பாதிக்கப்பட்ட குடும்பமொன்றுக்கு வாழ்வாதார உதவிகள் கையளிப்பு

மட்டக்களப்பு, ஓக. 18

மட்டக்களப்பு - ஏறாவூர்ப்பற்று செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட களுவன்கேணி கிராமத்தில் மிகவும் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட குடும்பமொன்றுக்கு லண்டனை தளமாக கொண்டு இயங்கும் லண்டன் ஈழபதீஸ்வரர் கோவில் நிர்வாக சபையினரால் வீடு உட்பட 30 இலட்சம் ரூபாய் பெறுமதியான வாழ்வாதாரத் திட்டம் வழங்கப்பட்டுள்ளது.

களுவன்கேணி கிராமத்தில் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட நிலையில் பல குடும்பங்கள் வசிப்பதாக லண்டன் ஈழபதீஸ்வரர் கோவில் நிர்வாக சபையினரிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

அதற்கமைய, லண்டன் ஈழபதீஸ்வரர் கோவிலின் கிராமிய சமூக பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், தெரிவு செய்யப்பட்ட பயனாளியான கிருஸ்ணபிள்ளை நிமிலேஸ்வரி குடும்பத்துக்கு 30 இலட்சம் ரூபாய் பெறுமதியான வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன.

லண்டனை ஈழபதீஸ்வரர் கோவில் நிர்வாக சபையின் உதவித் திட்டத்துக்கான மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் நாகராஜா ஆனந்தராஜா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், ஏறாவூர்ப்பற்று செங்கலடி பிரதேச செயலாளர் கே.தனபாலசுந்தரம் கலந்து கொண்டு, வீட்டை பயனாளியிடம் கையளித்தார்.

ஏறாவூர்ப்பற்று செங்கலடி பிரதேச சபை உறுப்பினர் வேல் பரமதேவா மற்றும் லண்டனை ஈழபதீஸ்வரர் கோவில் நிர்வாக சபையின் உதவித் திட்டத்திற்கான மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர்களான நாகராஜா ஆனந்தராஜா, லோகநாதன் அனோஜன் ஆகியோர் இணைந்து வாழ்வாதார உதவிகளை வழங்கினர்.

வசிப்பதற்கான வீடு, வாழ்வாதாரத்துக்கு ஆடுகள், கோழிகள், தாராக்கள், வளர்ப்பதற்கான நிரந்தரமான கூடு, தொழில் புரிவதற்காக சைக்கிள் என்பன வழங்கப்பட்டன.

வீட்டு உரிமையாளருக்கு கடந்த காலத்தில் மீன்பிடித் தொழிலில் ஏற்பட்ட நட்டம் காரணமாக பெறப்பட்ட கடனைச் செலுத்துவதற்காக 50 ஆயிரம் ரூபாய் பணமும் இந்நிகழ்வில் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ)

ஈழநாடு



# உக்ரைன் போரில் அணு ஆயுதங்கள் பயன்படுத்தும் தேவை எமக்கில்லை

## ரஷ்ய பாதுகாப்பு அமைச்சர் கூறுகிறார்

மொஸ்கோ, ஓக. 18

உக்ரைனுக்கு எதிரான போரில் அணு ஆயுதங்களைப் பயன்படுத்துவதற்கான தேவை ரஷ்யாவுக்கு இல்லை என ரஷ்ய பாதுகாப்பு அமைச்சர் செர்ஜி ஷோய்கு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை தெரிவித்துள்ளார்.

உக்ரைனுக்கு எதிரான போரில் ரஷ்யா அணு ஆயுதங்களைப் பயன்படுத்தக்கூடும் என ஊடகங்களில் வெளியாகும் செய்திகள் வெறும் ஊகங்கள் எனவும் மொஸ்கோவில் நடைபெற்ற சர்வதேச பாதுகாப்பு மாநாட்டில் பேசிய செர்ஜி ஷோய்கு குறிப்பிட்டார்.

உக்ரைனில் நிர்ணயிக்கப்பட்ட இராணுவ இலக்குகளை அடைய அணு ஆயுதங்களைப் பயன்படுத்த வேண்டிய அவசியமில்லை. ரஷ்யா அணு ஆயுதங்களைக் கொண்டுள்ளதன் முக்கிய நோக்கம் நாட்டின் மீதான அணு ஆயுத தாக்குதலைத் தடுப்பதாகும் எனவும் ரஷ்ய பாதுகாப்பு அமைச்சர் குறிப்பிட்டார்.



சிறப்பு இராணுவ நடவடிக்கையின் போது ரஷ்ய தந்திரோபாய அணு ஆயுதங்களைப் பயன்படுத்தலாம் என ஊடகங்களில் வெளியாகும் செய்திகள் முழுப் பொய்களை அடிப்படையாகக் கொண்டவை. இரசாயன ஆயுதங்களை பயன்படுத்துவதற்கான தயார் நிலையில் ரஷ்யா உள்ளதாகவும் ஊடகங்கள் பொய் களைப் பரப்புகின்றன எனவும் செர்ஜி ஷோய்கு தெரிவித்தார்.

உக்ரைனின் இராணுவ நடவடிக்கைகள் அமெரிக்கா மற்றும் பிரிட்டனால் திட்டமிடப்பட்டு ஊக்குவிக்கப்படுகின்றன. கிழக்கு மற்றும் மத்திய ஐரோப்பாவில் நேட்டோ படைகளின் இருப்பை மேலும் அதிகரிப்பதற்கான சதியாகவே இது உள்ளது எனவும் ஷோய்கு குற்றஞ்சாட்டினார்.

அமெரிக்க மற்றும் ரஷ்ய அணு ஆயுத கட்டுப்பாட்டு ஒப்பந்தம் குறித்துக் கருத்து வெளியிட்ட ரஷ்ய பாதுகாப்பு அமைச்சர் ஷோய்கு, இந்த ஒப்பந்தத்தை நீடிப்பதற்கான பேச்சுவார்த்தைகள் இருவழிப் பாதை போன்றவை. ஒருவர் மறுத்தால் மற்றொருவர் அதனைச் செய்வது கடினம் என்று கூறினார். (அ)

# திடீரென கொட்டிய மழையால் பாரிஸ் தெருக்களில் வெள்ளம்!

## ரயில் நிலையங்களில் நீர் புகுந்து சேவைகள் தடங்கல்

பாரிஸ், ஓக. 18



பாரிஸ் நகரின் சில பகுதிகளில் நேற்று முன்தினம் மாலை ஆறு மணியளவில் திடீரெனப் பொழிந்த ஆலங்கட்டி மழைகாரணமாகப் பல தெருக்கள் வெள்ளத்தில் மூழ்கின. நிலத்தடி மெற்றோ நிலையங்கள் சிலவற்றின் வாயில்கள் வழியே உள்ளே வெள்ளம் பாய்ந்ததால் பயணிகள் சிரமங்களை எதிர்கொண்டனர்.

ஓரிரு ரயில் நிலையங்கள் மூடப்பட்டன. பல மெற்றோ நிலையங்களில் ரயில்கள் தரிக்காமல் சென்றதால் பயணிகள் அந்தரப்பட நேர்ந்தது. தூர இடங்களுக்கான ரயில் போக்குவரத்துகளிலும் தாமதங்கள் ஏற்பட்டன. மெற்றோ வழித்தடம் 8 இல் அமைந்துள்ள பலாட் நிலையத்தினுள் பெருமளவில் வெள்ள நீர் புகுந்ததால் அது மூடப்பட்டது.

ஈபிள் கோபுரத்தில் அமைந்துள்ள அவதான நிலையத்தின் தரவுகளின் படி நேற்று முன் தினம் மாலை பெய்த மழையின்போது காற்றின் வேகம் மணிக்கு 104 கிலோ மீற்றர்களாகப் பதிவானது. அதேசமயம் நகரில் சுமார் ஒருமணி நேரத்தில் 46 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது.

பல இடங்களில் மிக மூர்க்கமான மழையுடன் ஆலங்கட்டிகளும் பொழிந்து சேதங்களை ஏற்படுத்தின. எனினும் பாரதூரமான சம்பவங்கள் எதுவும் எந்தப் பகுதியிலும் இடம்பெறவில்லை என்று பாரிஸ் நகர தீயணைப்புச் சேவை தெரிவித்துள்ளது.

பிரான்ஸில் கடந்த பல வாரங்களாக நீடித்த அனல் வெப்பத்தைத் தொடர்ந்து அதன் விளைவாகக் கடும் இடிமின்னலுடன் புயல் மழை பெய்யும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது. (அ)



# சூடானில் கடும் மழை, வெள்ளப்பெருக்கு அனர்த்தங்களில் சிக்கி 75 பேர் உயிரிழப்பு

கார்ட்டூம், ஓக. 18

சூடானில் சமீபத்தில் பெய்த கனமழை மற்றும் வெள்ள பாதிப்புகளில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 75 ஆக உயர்ந்துள்ளதாக அந்நாட்டின் அதிகாரிகள் நேற்று முன் தினம் செவ்வாய்கிழமை தெரிவித்தனர். மேலும், 30 பேர் காயமடைந்துள்ளனர். அத்துடன், 12,551 வீடுகள் இடிந்ததாகவும், 20,751 வீடுகள் மழையின் போது சேதமடைந்ததாகவும் சூடானிய அரசு தெரிவித்துள்ளது.

சூடானின் 18 மாகாணங்களில் 12 மாகாணங்களில் 136,000 பேர் கடும் மழை மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அரசாங்கத்தால் நடத்தப்படும் மனிதாபிமான உதவி ஆணையம் தெரிவித்துள்ளது.

238 சுகாதார நிலையங்களும் வெள்ளத்தில் மூழ்கியதாகவும் மனிதாபிமான விவகாரங்களுக்கான ஐக்கிய நாடுகள் அலுவலகம் கூறியுள்ளது.

மேற்கு டார்பூர் பகுதி மற்றும் நைல் நதி, வைட் நைல், மேற்கு கோர்டோஃபான் மற்றும் தெற்கு கோர்டோஃபான் ஆகிய மாகாணங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

சூடானின் மழைக்காலம் வழக்கமாக ஜூன் மாதத்தில் தொடங்கி செப்டம்பர் இறுதி வரை நீடிக்கும், ஆகஸ்ட் மற்றும் செப்டெம்பர் மாதங்களில் வெள்ளம் உச்சத்தை அடைகிறது.

கடந்த ஆண்டு மழைக் காலத்தில் ஏற்பட்ட வெள்ளம் தொடர்பான சம்பவங்களில் 80க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

2020 ஆம் ஆண்டில், அதிகாரிகள் சூடானை ஒரு இயற்கை பேரழிவு பகுதியாக அறிவித்தனர். வெள்ளம் மற்றும் கனமழையால் சுமார் 100 பேர் கொல்லப்பட்டனர் மற்றும் 100,000-க்கும் மேற்பட்ட வீடுகள் நீரில் மூழ்கின. இதனையடுத்து நாடு முழுவதும் மூன்று மாத அவசரகால நிலையை பிறப்பிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# போர்த்துக்கல், ஸ்பெயினில் வரலாறு காணாத வெப்பம்!

## காட்டுத் தீயால் பேரழிவுகள்!!

மட்ரிட், ஓக. 18

போர்த்துக்கல் மற்றும் ஸ்பெயின் உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகள் பலவற்றில் வரலாறு காணாத வெப்பம் மற்றும் அனல் காற்று நீடிக்கும் நிலையில் இந்நாடுகளில் காட்டுத் தீயால் பேரழிவுகள் ஏற்பட்டுள்ளன.

போர்த்துக்கலில் பற்றியெரிந்துவரும் பெரும் காட்டுத் தீயால் எழுந்த புகை 400 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள மட்ரிட் நகரம் வரை நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை பரவியது.

மட்ரிட்டில் உள்ள நான்கு கோபுரங்கள் என்று அழைக்கப்படும் பெரும் கட்டடங்கள் புகை சூழ்ந்து காணப்பட்டன.

அத்துடன், புகையால் ஸ்பெயின் தலைநகரம் வரை பாதிப்புகள் உணரப்பட்டன. ஸ்பெயின் தலைநகரில் வசிப்பவர்கள் புகையை சுவாசிக்க நேரிட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

போர்த்துக்கல் செர்ரா டா எஸ்ட்ரெலா தேசிய பூங்காவை அழித்த இந்தக் காட்டுத் தீ ஓகஸ்ட் 6 ஆம் திகதி தொடங்கியது. கடந்த ஞாயிற்றுக் கிழமை வரை தீ பெரும்பாலும் கட்டுப்படுத்தப்பட்டது. எனினும் திங்கட்கிழமை மீண்டும் எரிந்ததால் பல கிராமங்களை விட்டு மக்கள் வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

போர்த்துக்கல்லில் பற்றியெரிந்துவரும் தீயால் ஏற்கனவே 17,000 ஹெக்ரேயர்களுக்கு மேற்பட்ட பகுதிகள் எரிந்து அழிந்துவிட்டன. தீயைக் கட்டுப்படுத்தும் பணியில் விமானங்களின் உதவியுடன் 1,100 க்கும் மேற்பட்ட தீயணைப்பு வீரர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

தீ பல முனைகளில் பற்றி எரிந்தது. கடும் காற்று, வறண்ட வானிலைக்கு மத்தியில் தீயைக் அணைக்கும் போராட்டம் மிகக் கடுமையாக உள்ளது என போர்த்துக்கல் சிவில் பாதுகாப்பு படைத் தளபதி ஆண்ட்ரே பெர்னாண்டஸ் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கிழக்கு ஸ்பெயினில், வலென்சியா பகுதியில் இரண்டு பெரும் காட்டுத்தீ தொடர்ந்து எரிந்து வருகிறது. இதனைக் கட்டுப்படுத்த நூற்றுக்கணக்கான தீயணைப்பு வீரர்கள் 24 மணி நேரமும் பணியாற்றி வருகின்றனர்.

வலென்சியாவின் தெற்கே உள்ள வால் டி எபோ பகுதியில், கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் காட்டுத் தீயால் 9,500 ஹெக்ரேயர்களுக்கு மேல் காடுகள் எரிந்தன. இந்தப் பகுதியில் வீதிகள் மூடப்பட்டு சுமார் 2,000 பேர் வெளியேற்றப்பட் டனர்.

ஸ்பெயினில் சில பகுதிகளில் வரலாற்றில் இல்லாத பெரும் வறட்சி நிலவி வருவதாக நேச்சர் ஜியோ சயன்ஸ் இதழில் கடந்த மாதம் வெளியிடப்பட்ட ஆய்வறிக்கை குறிப்பிட்டது.

1961 இல் ஸ்பெயினின் வானிலை சேவை அதன் பதிவைத் தொடங்கியதிலிருந்து ஸ்பெயினில் பதிவுசெய்யப்பட்ட அதிக வெப்பமான மாதமாக ஜூலை இருந்தது.

இந்த ஆண்டில் இதுவரை ஸ்பெயினில் 270,000 ஹெக்டேர்களுக்கு மேல் காட்டுத்தீயால் எரிந்துள்ளன என ஐரோப்பிய வன தீ தகவல் அமைப்பு கூறுகிறது.

போர்த்துக்கல்லில் காட்டுத் தீ சுமார் 85,000 ஹெக்ரேயர் பகுதிகளை அழித்துள்ளது. நாட்டின் மொத்த நிலப்பரப்பில் கிட்டத்தட்ட 1 வீத காட்டுத் தீயால் நாசமாகியுள்ளது. இது ஐரோப்பிய ஒன்றியத்திலேயே மிக உயர்ந்த வீதமாகும் எனவும் இந்தத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)





# யுனைட்டெட் செல்லும் வார்டி?




இங்கிலாந்து பிறீமியர் லீக் உதைபந்தாட்டக் கழகமான லெய்செஸ்டர் சிற்றியின் முன்களவீரரான ஜேமி வார்டியை கைச்சாத்திடுவது குறித்து இன்னொரு பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட் கருத்திற் கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறாயினும், 35 வயதான வார்டியை வெளியேற அனுமதிப்பதில் லெய்செஸ்டர் தயக்கம் காட்டுவதாகக் கூறப்படுகிறது.




# நெதர்லாந்தை வீழ்த்தியது பாகிஸ்தான்

நெதர்லாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணி 3 ஒருநாள் போட்டி கொண்ட தொடரில் விளையாடுகிறது.

ரோட்டர்டாம் நகரில் நேற்று முதல் ஒருநாள் போட்டி நடைபெற்றது. நாணயச் சுழற்சி வென்ற பாகிஸ்தான் அணி துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது. அதன்படி, முதலில் துடுப்பாட்டம் செய்த பாகிஸ்தான் அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 6 விக்கெட் இழப்பிற்கு 314 ஓட்டங்கள் எடுத்தது. தொடக்க ஆட்டக்காரர் பகர் சமான் சதமடித்து அசத்தினார். அவர் 109 ஓட்டங்களில் அவுட்டானார். கப்டன் பாபர் அசாம் 74 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். அதிரடியாக ஆடிய ஷதாப் கான் 28 பந்தில் 48 ஓட்டங்கள் எடுத்தார்.
இதையடுத்து, 315 ஓட்டங்களில் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் நெதர்லாந்து களமிறங்கியது. எளிதில் வெற்றி பெறலாம் என நினைத்த பாகிஸ்தான் அணிக்கு நெதர்லாந்து வீரர்கள் சவாலாக ஆடினர்.
கப்டன் ஸ்காட் எட்வர்ட்ஸ் 71 ஓட்டங்களும், தொடக்க ஆட்டக்காரர் விக்ரம்ஜித் சிங் மற்றும் டாம் கூப்பர் தலா 65 ஓட்டங்கள் எடுத்து அவுட்டாகினர்.
இறுதியில், நெதர்லாந்து அணி 50 ஓவரில் 8 விக்கெட்டுக்கு 298 ஓட்டங்கள் எடுத்து தோல்வி அடைந்தது.
இதன்மூலம் பாகிஸ்தான் அணி 16 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. ஆட்ட நாயகன் விருது பகர் சமானுக்கு அளிக்கப்பட்டது. (அ)




# சிம்பாப்வே தொடருக்கு கே.எல்.ராகுல் திரும்பியது மகிழ்ச்சி!

ஆசிய கிண்ணப் போட்டிக்கு முன்பாக கே.எல்.ராகுல் தன்னை தயார்படுத்திக் கொள்ள இந்த போட்டி உதவும் என தவான் கூறியுள்ளார்.

சிம்பாப்வேக்கு எதிரான முதலாவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டி இன்று தொடங்க உள்ள நிலையில் இந்திய அணியின் துணை கப்டன் 36 வயதான ஷிகர் தவான் பேட்டி அளித்தார்.
அப்போது அவர் கூறியதாவது:-

அணியில் உள்ள இளம் வீரர்களுடன் எனது அனுபவங்களை மகிழ்ச்சியுடன் பகிர்ந்து கொள்கிறேன். இளம் வீரர்கள் எப்போது என்னிடம் ஆலோசனை கேட்டாலும் அவர்களுக்கு உதவ தயாராக இருக்கிறேன்.

லோகேஷ் ராகுல் மீண்டும் அணிக்கு திரும்பியதுடன், இந்த தொடருக்கு கேப்டனாக செயல்படுவது மிகவும் நல்ல செய்தியாகும். இந்திய அணியில் அவர் முக்கியமான வீரர்களில் ஒருவர். ஆசிய கோப்பை போட்டிக்கு முன்பாக அவர் தன்னை தயார்படுத்திக் கொள்ள இந்த போட்டி உதவும். இந்த தொடரின் மூலம் நிச்சயம் அவர் நிறைய பலன் அடைவார் என்று நம்புகிறேன்.

காயத்தால் வொஷிங்டன் சுந்தர் விலகி இருப்பது வருத்தம் அளிக்கிறது. எங்கள் அணியில் அவர் முக்கியமான வீரர். ஒரு சுழற்பந்து வீச்சாளராக அவரை தவற விடுகிறோம். ஆனால் காயத்தில் சிக்குவது விளையாட்டின் ஒரு பகுதி. விரைவில் அவர் குணமடைந்து திரும்புவார் என்று நம்புகிறேன்-இவ்வாறு தவான் கூறினார். (அ)

# மகளிர் கிரிக்கெட் சுற்றுப்பயண திட்டத்தை வெளியிட்டது ஐ.சி.சி.

அதிக எண்ணிக்கையிலான நாடுகளின் பங்கேற்புடன் சர்வதேச கிரிக்கெட் போட்டிகள் கொண்ட வரலாற்று முக்கியம் வாய்ந்த மகளிர் எதிர்கால சுற்றுப்பயண திட்டம் ஒன்றை சர்வதேச கிரிக்கெட் பேரவை (ஐசிசி) முதல் தடவையாக வெளியிட்டுள்ளது.

சர்வதேச கிரிக்கெட் பேரவை போட்டிகள் மற்றும் இருதரப்பு சர்வதேச தொடர்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய சர்வதேச கிரிக்கெட் நாட்காட்டியை எதிர்கால சுற்றுப் பயண திட்டம் எடுத்துக்காட்டுகிறது.

இந்தியாவில் நடைபெறவுள்ள ஐசிசி மகளிர் உலகக் கிண்ண (50 ஓவர்) கிரிக்கெட் போட்டியை முன்னிட்டு 2025ஆம் ஆண்டு ஏப்ரல் மாத இறுதி வரை சகல அணிகளும் விளையாடவுள்ள கிரிக்கெட் தொடர்கள் மகளிர் எதிர்கால சுற்றுப்பயணத் திட்டத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கு அமைய இலங்கை மகளிர் அணி சொந்த மண்ணில் நான்கு நாடுகளுக்கு எதிரான தொடர்களிலும் அந்நிய மண்ணில் நான்கு நாடுகளுக்கு எதிரான தொடர்களிலும் விளையாடவுள்ளது.

2022 முதல் 2025 வரையான சுழற்சி கிரிக்கெட் பருவகாலத்தில் இந்தியா, நியூஸிலாந்து, பங்களாதேஷ், மேற்கிந்தியத் தீவுகள் ஆகிய அணிகளை தனது சொந்த மண்



ணில் இலங்கை எதிர்த்தாடவுள்ளது.

இதனைவிட இங்கிலாந்து, தென் ஆபிரிக்கா, பாகிஸ்தான், அயர்லாந்து ஆகிய நாடுளுடன் அந்நிய மண்ணில் இலங்கை விளையாடவுள்ளது.

இந்த சுழற்சி கிரிக்கெட் பருவகாலத்தில் மகளிர் கிரிக்கெட் அணிகள் மொத்தமாக 7 டெஸ்ட் போட்டிகள், 135 சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டிகள், 159 சர்வதேச இருபது கிரிக்கெட் போட்டிகள் ஆகியவற்றில் (மொத்தம் 301 போட்டிகள்) விளையாடவுள்ளன.

2022 - 2025 சுழற்சி கிரிக்கெட் பருவகாலத்தின் ஒரு பகுதியாக ஐசிசி மகளிர் சம்பியன்ஷிப்பில் ஒவ்வொரு அணியும் 3 போட்டிகள் கொண்ட இரு தரப்பு சர்வதேச கிரிக்கெட் தொடர்களில் விளையா டும். இத் தொடர்கள் இந்தியாவில் 2025இல் நடைபெறவுள்ள ஐசிசி மகளிர் 50 ஓவர் உலகக் கிண்ணப் போட்டிக்கான தகுதிகாண் சுற்றாக அமையும்.

இந்தத் தொடருடன் பெரும்பாலான நாடுகள் மகளிர் சர்வதேச இருபது கிரிக்கெட் தொடர்களிலும் விளையாடவுள்ளன.

## மரண அறிவித்தல்

தோற்றம்
19 - 02 - 1961



மறைவு
13 - 08 - 2022

### சின்னையா சந்திரசிறி (சிறி)

யாழ். சுதுமலையைப் பிறப்பிடமாகவும், கனடா Toronto ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா சந்திரசிறி அவர்கள் 13.08.2022 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சின்னையா, திரவியம் தம்பதிகளின் அன்பு மகனும்,காலஞ்சென்றவர்களான இராசையா, அன்னலட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும், நித்தியராணி (மாலா) அவர்களின் ஆருயிர்க் கணவரும், பிரவீன், தனுசன், அஞ்சனா ஆகியோரின் பாசமிகு தந்தையும், சந்திரராஜா, இராசமலர், இந்திரா, சந்திரமோகன், றஞ்சினி, றெஜீனா, றெஜீந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், இராஜகாந்தன், சிறிகாந்தன், புஸ்பகாந்தன், விஜயகாந்தன், ஜெயகாந்தன், மோகனகாந்தன், காலஞ்சென்ற செல்வகாந்தன், துரைசிங்கம், பரமேஸ்வரன், சிறிகாந்தன், தேவராஜா மற்றும் காலஞ்சென்ற லலிதா ரஞ்சனி, இந்துமதி, சுமதி, சுகிர்தினி, பரிபூரணநாயகி, லதாகாந்தி, கிருஸ்ணமலர், நிர்மலா ஆகியோரின் அன்பு மைத்துனரும், விஜியானந்தினி, ஜெகானந்தினி, துஷ்யந்தினி, நிந்துயா, நிவேதித்தா, உமாதாரணி, மதன சொருபி, துவாரகா, பவதாரணி, டஸ்மி, பவியா, நிறோஜா, சுகன்யா, சகிலா, றசீலா, மயூரி, சகானா, நிவேதா, மிசேல், சாண்டி, துஸ்யந்தன், காலஞ்சென்ற நிஷாந்தன், யுகேந்திரன், றசீகரன், ஆவிட், கெவின், பற்றிக், செபஸ்ரியன், லூக்கஸ், ஜெசன் ஆகியோரின் அன்பு மாமனாரும், அஸ்வின், அஜேஸ் ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும், வருணியா அவர்களின் அன்புச் சித்தப்பாவும், தாரிகா, துவனா, ஹறிஸ், டிரெஸ், ஹறிஸ்ணன், ஆராத்யா, அயான், ஆரவ், அகானா, அனைறா, ஹறிஸ், அகரன், அகரியா, டறிஸ், மற்றி, ரூபியாஸ், சோபியா, சில்கி ஆகியோரின் ஒன்றுவிட்டப் பேரனும் ஆவார்.

பார்வைக்கு :
Saturday, 20 Aug 2022 5:00 PM – 9:00 PM
Sunday, 21 Aug 2022 6:00 AM – 7:00 AM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada.

கிரியை :
Sunday, 21 Aug 2022 7:00 AM – 8:00 AM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada.

தகனம் :
Sunday, 21 Aug 2022 8:15 AM
Highland Hills Crematorium 12492 Woodbine Avenue, Gormley, Ontario, L0H 1G0, Canada.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
**றெஜீந்திரன் (சகோதரன்)**

தொடர்புகளுக்கு :
**நித்தியராணி (மாலா, மனைவி)** – 0016479060866
**அஞ்சனா (மகள்)** – 0014165762950
**புஸ்பகாந்தன் (மைத்துனர்)** – 0014168941187
**றெஜீந்திரன் (சகோதரன்)** – 0014167206511
**சிறிகாந்தன் (மைத்துனர்)** – 0014164502396
**தனுசன் (மகன்)** – 0014379719796
**பிரவீன் (மகன்)** – 0016475007606
**றஞ்சினி (சகோதரி)** – 0094774270734
**சந்திரராஜா (சகோதரன்)** – 0014166669880
**விஜயகாந்தன் (மைத்துனர்)** – 0016477609876
**சிறிகாந்தன் (மைத்துனர்)** – 0014164502396
**இந்திரா (சகோதரி)** – 0094774179018

# கோட்டாபயவின் புகைப்படத்தை அகற்றியது பொதுஜன பெரமுன!

*கொழும்பு, ஓக. 18*

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஊடக சந்திப்புகளின் போது பின்னணியில் காட்சிப்படுத்தப்படும் கட்சியின் உத்தியோகபூர்வ டிஜிற்றல் பதாகையில் இருந்து முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் புகைப்படம் நீக்கப்பட்டுள்ளது.

கடந்த 15 ஆம் திகதி நடைபெற்ற பொதுஜன பெரமுனவின் ஊடகவியலாளர் சந்திப்பில் டிஜிற்றல் பதாகையில் கோட்டாபயவின் புகைப்படம் இடம்பெறவில்லை.

இதற்கு முன்னர் அந்த டிஜிற்றல் பதாகையில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய, முன்னாள் பிரதமர் மகிந்த, முன்னாள் நிதியமைச்சரும் பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகருமான பஸில் ஆகியோரின் புகைப்படங்கள் இடம்பெற்றிருக்கும். இவர்களின் புகைப்படங்கள் மாறி, மாறி காட்சிப்படுத்தப்படுவதை காணக்கூடியதாக இருக்கும்.

எவ்வாறாயினும் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் புகைப்படம் டிஜிற்றல் பதாகையில் இருந்து நீக்கப்பட்டுள்ளமை பற்றி தனக்கு எதுவும் தெரியாது என பொதுஜன பெரமுனவின் செயலாளர் சாகர காரியவசம் கூறியுள்ளார்.

இவ்வாறான நிலையில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் காட்சிப்படுத்தப்பட்ட டிஜிற்றல் பதாகையில் கோட்டாபயவின் புகைப்படமும் இடம்பெற்றிருந்தது.

கடந்த ஜூலை மாதம் ஏற்பட்ட மாபெரும் மக்கள் போராட்டம் காரணமாக கோட்டாபய நாட்டில் இருந்து தப்பிச் சென்றதுடன் பின்னர் ஜனாதிபதி பதவியில் இருந்து விலகினார். கோட்டாபய தற்போது தாய்லாந்து நாட்டில் தங்கியுள்ளார்.

(அ)

# பிரம்பு தொழில் முயற்சியாளர்களுக்கு திருகோணமலையில் இலவச பயிற்சி

*திருமலை, ஓக. 18*

திருகோணமலை, தம்பலகாமம் பிரதேச செயலகத்துக்குட்பட்ட பத்தினிபுர கிராமத்தில் பனை பொருள் ஊடான உற்பத்தியில் ஈடுபடுபவர்களுக்கான பயிற்சிநெறி வழங்குவது தொடர்பான கலந்துரையாடல் இடம்பெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதியின் வழிகாட்டுதலுக்கிணங்க, குறித்த பயிற்சிநெறியை நடத்துவது தொடர்பான இந்த கலந்துரையாடல், பனம் பொருள் கைப்பணியாளர் சங்க அங்கத்தவர்களுக்காக பத்தினிபுரம் கிராம அபிவிருத்தி சங்க கட்டடத்தில் நடைபெற்றது.

தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலைமைக்கு மத்தியில் குடும்ப வருமானத்தை அதிகரிக்கும் பொருட்டு, பிரம்பு சார் உற்பத்தியில் ஈடுபடும் பெண் தொழில் முயற்சியாளர்களுக்காக இந்த இலவச பயிர்ச்சி நெறி வழங்குவது குறித்து ஆராயப்பட்டது.


அந்தப் பகுதியில் பனை உற்பத்திசார் கைப்பணி பொருட்கள் உள்ளிட்ட சந்தைப்படுத்தல் நிலையமும் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதில் தேசிய அருங்கலைப் பேரவையின் உதவி மாகாணப் பணிப்பாளர் பொன்கரன், கிராம சேவகர் நேசராஜ்குமார் மற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் தங்கரூபன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (அ)

## மரண அறிவித்தல்

### இரத்தினம் பத்மநாதன்

(முன்னாள் பிரித்தானியா சைவ முன்னேற்ற சங்கத் தலைவர், தற்போதைய உப போஷகர்)



**தோற்றம்**
**25 - 10 -1944**

**மறைவு**
**15 - 08 -2022**

யாழ். தெல்லிப்பழை பன்னாலையைப் பிறப்பிடமாகவும், பிரித்தானியா லண்டன் Bishop's Stortford Hertfordshire ஐ வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் பத்மநாதன் அவர்கள் 15.08.2022 திங்கட்கிழமை அன்று லண்டனில் இறைவனடி அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்ற சயம்புநாதர் வைரமுத்து இரத்தினம், செல்வநாயகி இரத்தினம் தம்பதிகளின் மூத்த மகனும், காலஞ்சென்ற வாசுகி அவர்களின் அன்புக் கணவரும், விஜயலட்சுமி (அவுஸ்திரேலியா), செந்தூரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், Dr.தேவக்குமார் (அவுஸ்திரேலியா), டிலானி ஆகியோரின் அன்பு மாமனாரும்,கிருஸ்னி, விசாலா (அவுஸ்திரேலியா), தணஞ்சை, பாலராம், சந்தானலட்சுமி, ஆராதனா ஆகியோரின் அன்புப் பாட்டனும்,இராமநாதன், லோகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும்,காலஞ்சென்ற சண்முகதாசன் (லண்டன்), பாரதி (இலங்கை), வசந்தி (ஐக்கிய அமெரிக்கா), விஜயலட்சுமி, தனலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

பார்வைக்கு :
Sunday, 21 Aug 2022 10:30 AM – 12:30 PM
Parndon Wood Cemetery & Crematorium Parndon Wood Rd> Harlow CM19 4SF, United Kingdom.

கிரியை :
Sunday, 21 Aug 2022 10:30 AM – 12:30 PM
Parndon Wood Cemetery & Crematorium Parndon Wood Rd, Harlow CM19 4SF, United Kingdom.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :
**செந்தூரன் (மகன்)** – 00447971561185
**இராமநாதன் (சகோதரன்)** – 00447956369557
**லோகநாதன் (சகோதரன்)** – 00447956377298

தகவல் :
**இராமநாதன் (சகோதரன்).**

## தமிழ்த் தேசத்தை...

ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கை அரசுக்கு இன்று இருக்கக் கூடிய வருமானத்தைவிட புலம்பெயர் தமிழ் மக்களின் வருமானம் அதிகமாக இருக்கக்கூடிய நிலையில் உலகில் மிகப் பலமான நாடுகளில் புலம்பெயர்ந்த தமிழர்கள் வாழ்ந்துகொண்டிருக்கின்றார்கள். ஒவ்வொரு நாட்டிலும் அந்த அரசுகளுக்கு சுமையாக இல்லாமல் மிகச் சிறந்த ஒரு சமூகமாக இருக்கின்றனர். அந்த மக்களின் உதவிகளை முதலீடுகளை பெற்றுக் கொள்ளமுடியும்.

இந்த கடன் இல்லாமல் நாடு இருக்கக் கூடிய சந்தர்ப்பம் இருக்கவும் தமிழ் மக்களின் உரிமையை கொடுக்கக்கூடாது என்கின்ற இனவாதப் போக்கை கடைப் பிடிக்கின்ற சித்தாந்தமே இருக்கின்றது. சர்வதேச ரீதியில் இருக்கக்கூடிய கடன் சுமைகளை மேற்கத்திய மற்றும் இந்திய நாடுகளுடன் இணைந்து ஏதோ ஒரு வகையில் பொருளாதாரத்தை நிலைக்கு கொண்டு வரலாம் என கனவு காண்கின்ற நிலையில் தான் இலங்கை இருக்கின்றது.

இதுவரை காலமும் தமிழரை அழிக்க சீனாவின் காலில் விழுந்த நிலையை விட்டு தற்போது மேற்கத்திய மற்றும் இந்தியாவின் காலில் விழுகின்ற போக்கை சீனா பார்த்துக் கொண்டிருக்கப் போவதில்லை என்று நிலையில் சீனா தான் கொடுத்த கடனில் இருந்து இலங்கையை தப்ப விடாது.

சீனாவின் கப்பல் வருவதற்கு முதல் நாள் உளவு பார்ப்பதற்கென இந்தியா தன்னுடைய விமானத்தை இலங்கைக்கு வழங்கி இலங்கைத் தீவிலுள்ள பூகோளப் போட்டியை இன்னும் தீவிரமடைகின்ற நிலைமை உருவாக்கி இருக்கிறதே தவிர இந்த நடவடிக்கைகள் எதுவுமே தமிழ் மக்களுக்கு நன்மையை கொடுக்கக்கூடிய விடயம் அல்ல. மாறாக இருக்கக்கூடிய மக்களுக்கும் கடும் பாதிப்புகளையும் சவால்களையும் கொடுக்கின்ற நிலைமை தான் உருவாக்கும்.

எங்களைப் பொறுத்தவரை நாங்கள் சிங்கள மக்களுக்கு சொல்வது, இந்த நிலைமையில் இருந்து மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக, 74 வருடங்களாக ஒற்றை ஆட்சி என்கிற அடிப்படையிலேயே நியாயமற்ற தோற்றுப்போன கொள்கையை தொடர்ந்து கடைப்பிடிக்கின்றதனால் வரக்கூடிய விளைவுகளை சிங்கள மக்கள் சிந்திக்கவேண்டும்.

தமிழ் சிங்கள முஸ்லீம் மக்களிடையே பிரிவுகள் ஒன்றும் இல்லாமல் உள்நாட்டிலே நாங்கள் எங்கள் ஒவ்வொருவரையும் மதிக்கக்கூடிய ஒவ்வொரு தேசங்களையும் ஏற்கக்கூடிய சந்தர்ப்பம் உருவாகினால் நாங்கள் இந்த பூகோளப்போட்டியில் எங்கள் நன்மைக்காகவும் பொது நன்மைக்காகவும் பயன்படுத்தக்கூடியதாக இருக்கும். அதை செய்யத் தவறினால் வெளி சக்திகள் தங்களுடைய தேவைகளை அடைவதற்கு எங்கள் பிரிவுகளை பயன்படுத்துகின்ற நிலைமையே தொடர்ந்து காணப்படும்.

தமிழ் மக்களுடைய உரிமைகளை வழங்கக்கூடாது. தமிழ் தேசம் இலங்கை தீவில் இருப்பதை அங்கீகரிக்கக்கூடாது என்ற காரணத்தினால் இன அழிப்புக்குரிய போரை நடத்தி, தமிழ் மக்களின் உரிமைக்காக போராடிய விடுதலை அமைப்பை அழிப்பதற்கு தமிழ் மக்களையும் சேர்த்து அழிக்கின்ற வேலைத்திட்டத்திற்கு இலங்கை அரசுக்கு உதவி தேவைப்பட்டது. அதில் முதலாவது ஆயுத தேவைக்கான நிதி, இரண்டாவது அரசியல் ரீதியான பாதுகாப்பு அதாவது சர்வதேச மட்டத்திலிருந்து வரக்கூடிய அழுத்தத்திலிருந்து தன்னை பாதுகாத்துக் கொள்வதற்கான உதவியும் தேவைப்பட்டது.

இலங்கையில் 2005ஆம் ஆண்டு மஹிந்த ஆட்சிக்கு வந்த பின்னர், சீனா தன்னுடைய முத்துமாலை வேலைத் திட்டத்தை முன்னெடுப்பதற்கும் பட்டுப் பாதை வேலைத்திட்டத்தை செய்வதற்கும் இலங்கை தீவில் விருப்பம் கொண்டிருந்தது.சீனா வழமையாக ஒரு நாட்டுக்குள் ஆதிக்கம் செலுத்துகின்றபோது அந்த நாட்டுக்குள் இருக்கும் மனித உரிமை மற்றும் ஜனநாயகம் சம்பந்தமாக கருத்து தெரிவிக்கமாட்டார்கள்.

சீனாவால் கிடைக்கின்ற உதவிகளைப் பெற்று இனவழிப்பு நடவடிக்கையை செய்வதற்கெடுத்த முடிவின் விளைவே இன்று சீனாவின் கப்பல் வருகையாகும்.

சீனாவின் செயற்பாடு இலங்கையை கடன் பொறிக்குள் தள்ளி விட்டுள்ளது. தனது பெயரை இலங்கைத் தீவில் தவிர்க்க முடியாதபடி கண்ணை மூடிக் கொண்டு கடன்களை வழங்கி, இலங்கை உண்மையில் கடனை கட்டலாமா என்பதை ஆய்வு செய்யாமலேயே அதற்கு மாறாக கடன்களை வழங்கினார்.

இலங்கையில் போர் முடிவுக்கு வந்து 13 வருடங்கள் தாண்டியும் போர்க்காலத்தில் இருந்த பொருளாதார நிலையை விட இலங்கையின் பொருளாதார நிலை மிக மோசமாகி உள்ளது. இந்தக் கடன் பொறிக்குள் விழுந்திருக்க கூடிய இலங்கை தன்னை பாதுகாத்துக் கொள்வதற்கு ஒரு வழி இருக்கின்றது. தமிழ் மக்களுடன் தமிழ் தேசத்தை அங்கீகரிக்கின்ற ஒரு தீர்வை எட்டவேண்டும்-என்றார். (அ)

## தமிழக...

ஆய்வுக் கப்பல் யுவான் வாங் நேற்று முன்தினம் அம்பாந்தோட்டை துறை முகத்தை வந்தடைந்தது.

இந்நிலையில்,

இந்திய கடற்படைக்கு சொந்தமான ஹெலிகொப்டர் இராமேஸ்வரம், தனுஷ்கோடி கடல் பகுதியில் தாழ்வாக பறந்து கண்காணிப்பதுடன் இந்திய கடற்படை வீரர்கள் ஹெலிகொப்டரில் இருந்து கயிறு மூலம் கடலில் இறங்கி பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர்.

இந்திய கடற்படை மற்றும் கடலோர காவல்படையினர் சர்வதேச கடல் எல்லையில் அந்நிய ஊடுருவல், சட்டவிரோத கடத்தல் சம்பவங்கள் மற்றும் இலங்கையில் இருந்து அகதிகளாக தமிழகம் நுழையும் அகதிகளின் நடமாட்டம் உள்ளிட்டவற்றை முழுமையாக கண்காணித்து வருகின்றனர்.

அந்நிய ஊடுருவலை கண்காணிப்பதற்காக சர்வதேச கடல் எல்லைப் பகுதிகள் ஹெலிகொப்டர்கள் மூலம் தீவிர கண்காணிப்பு வலயத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளன.

அதனடிப்படையில் நேற்று முன் தினம் காலை முதல் ஹெலிகொப்டர்கள் கடலில் தொடர்ந்து தாழ்வாக கண்காணித்து வருகின்றன.

மேலும் இந்திய கடலோர காவல் படைக்குச் சொந்தமான கப்பல்கள் மற்றும் இந்திய கடற்படைக்குச் சொந்தமான ரோந்து கப்பல்கள் சர்வதேச கடல் எல்லையில் நிறுத்தப்பட்டு தொடர்ந்து கண்காணிப்புப் பணிகள் முடுக்கிவிடப் பட்டுள்ளது என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

## வடக்கு மாகாண...

அதிகாரிகளிற்கே இடமாற்ற உத்தரவு நேற்று முன்தினம் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய தற்போதைய வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ம.பற்றிக் டிரஞ்சன் கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளராகவும் உள்ளூராட்சி அமைச்சின் பதில் செயலாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, வடக்கு மாகாணக் கூட்டுறவு ஆணையாளராக பதவி வகித்த எஸ்.நந்தகோபாலன் கல்வித் திணைக்களத்தின் மேலதிக மாகாணப் பணிப்பாளராகவும், கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளராக பதவி வகித்த திருமதி தேவநந்தினி பாபு கூட்டுறவு ஆணையாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்தின் ஆணையாளராக பிரணவநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு இடமாற்றப்பட்ட 4 அதிகாரிகளின் இடமாற்றமும் எதிர்வரும் 24ஆம திகதி முதல் அமுலாகும் வகையில் செயல்படுத்தப்படும் என ஆளுநர் எழுத்தில் வழங்கியுள்ளார். (அ)

# இலங்கையில் பெண்கள் மூவர் உட்பட மேலும் ஐவர் கொரோனாவுக்கு பலி!

கொழும்பு, ஒக. 18

இலங்கையில் மேலும் 5 பேர் கொரோனா தொற்று காரணமாக உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார சேவைகள் பணிப் பாளர் நாயகம் நேற்று உறுதிப் படுத்திய மரணங்களில் 3 பெண் கள் மற்றும் 2 ஆண்கள் அடங்குவர்.

அவர்களில் ஆண் ஒருவர் 30 முதல் 59 வயதுக்கு உட்பட்ட வராவார். மற்றைய ஆணும் மூன்று பெண்களும் 30 வயதுக்கு மேற்பட்டவர்களென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த 5 இறப்புகளுடன், இலங்கையில் மொத்த கொரோனா உயிரிழப்பு எண்ணிக்கை 16,335 ஆக உயர்ந்துள்ளது.

இதேவேளை, இலங்கையில் இதுவரை 668,336 பேர் கொரோனா தொற்றுக்கு உள் ளாகியதாகவும் அவர்களில் 1534 பேர் வைத்தியசாலையிலோ அல்லது வீட்டிலோ மருத்துவ கண்காணிப்பின் கீழ் தற்போது சிகிச்சை பெற்று வருகின்றனர். இதுவரை மொத்தமாக 650, 172 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளதாக தொற்று நோயியல் பிரிவு தெரிவிக்கிறது. (அ)

# கட்டைக்காடு ஆலயத்தில் ஐம்பொன் நகைகள் திருட்டு

யாழ்ப்பாணம், ஒக. 18

வடமராட்சி கிழக்கு கட் டைக்காடு கப்பலேந்தி மாதா ஆலயத்தில் கப்பலேந்தி மாதாவுக்கு அணி விக்கப்பட்ட ஐம்பொன்னாலான நகைகள் திருடப்பட்டுள்ளன.

குறித்த சம்பவம் நேற்றுமுன் தினம் இடம்பெற்றுள்ளதாக தெரியவருகிறது.

ஆலயத்தின் வருடாந்த பெருவிழா கடந்த 15ஆம் திகதி இடம்பெற்றது. எனவே இந்த பெருவிழாவுக்கு அதிகளவான பக்தர்கள் கூடியிருந்தனர்.

இந்த நிலையில் நேற்று முன் தினம் பிற்பகல் 1.30 மணியள வில் கப்பலேந்தி மாதாவை அவதானித்த பக்தர்கள் மற்றும் நிர்வாகிகள் நகைகள் திருட்டுப் போயுள்ளதை கண்டனர்.

இந்த திருட்டு சம்பவம் தொடர்பில் பங்குத் தந்தைக்கு அறிவிக்கப்பட்டு மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் முறைப் பாடு பதிவு செய்யப்பட்டது.

இது தொடர்பான விசரணைகளை மருதங்கேணி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

## சர்வகட்சி...

கட்சி வேலைத்திட்டம் ஊடாக ஒத்துழைப்பு வழங்கப்படும்.

கோப், கோபா மற்றும் அரச கணக்கு குழு ஆகியவற்றின் தலைமைப்பதவி எதிரணிக்கு வழங்கப்படவுள்ளது என அறியமுடிகின்றது. இது சிறந்த முடிவு. மேற்படி குழுக்களின் தலைமைப்பதவி மட்டும் அல்ல, பாராளுமன்றத்தில் உள்ள துறைசார் மேற்பார்வை குழுக்களின் தலைமைப்பதவியும் எதிரணிக்கு வழங்கப்படவேண்டும்." - என்றும் சஜித் குறிப்பிட்டார். (அ)

## தாய்லாந்தி...

போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

மக்கள் எழுச்சியை எதிர்கொள்ள முடியாமல் கோட்டாபய ராஜபக்ஷ நாட்டைவிட்டு வெளியேறி மாலைதீவு சென்று அங்கிருந்து சிங்கப்பூர் சென்று அங்கிருந்து வெளியேறி தற்போது தாய்லாந்தில் தங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## புலம்பெயர்...

யின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்றது.

இதன்போது சில புலம்பெயர் தமிழ் அமைப்புகள் மற்றும் நபர்கள் மீதான தடை நீக்கம் தொடர்பில் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே மொட்டுக் கட்சி எம்.பியான ஜகத் குமார இவ்வாறு குறிப்பிட்டார்.

"உரிய ஆய்வுகளின் பின்னரே, சில அமைப்புகள் மற்றும் நபர்களை தடைப் பட்டியலில் இருந்து நீக்கம் செய்வதற்கான பரிந்துரையை பாதுகாப்பு அமைச்சு முன்வைத்துள்ளது. இதில் எவ்வித தவறும் கிடையாது. நாம் உலகுடன் இணைந்து பயணிக்கவேண்டும்.

தடை நீக்கம் செய்யப்பட்டுள்ள நபர்கள் மற்றும் அமைப்புகள் நாட்டுக்கு நேசக்கரம் நீட்டலாம். குறைந்தபட்சம் வடக்கு, கிழக்கையாவது மேம்படுத்த உதவலாம். சிலவேளை, அவ்வமைப்புகள் எமது நாட்டுக்கு, சட்டத்துக்கு எதிராக செயற்பட்டால் மீண்டும் தடை செய்ய முடியும். அதற்கான ஏற்பாடுகள் உள்ளன." - எனவும் ஜகத் குமார எம்.பி. சுட்டிக்காட்டினார். (அ)

## மிகவிரைவில்...

எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு பின்னர் தேர்தலை நடத்தும் அதிகாரம், ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்பெறவுள்ளது. (அ)

## டிசெம்பர்...

துள்ளார்.

கோவிட் பரவலுக்கு மத்தியில் பாடசாலைகளை நடத்திச் செல்வது குறித்த எச்சரிக்கை எதனையும் சுகாதார அமைச்சு இதுவரை முன்வைக்கவில்லை.

அதற்கான வழிகாட்டிகள் மற்றும் அறிவுறுத்தல்களை சுகாதார அமைச்சு வழங்கினால் அதன்படி பாடசாலைகள் செயற்படுத்தப்படும் என்றும் அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த கூறினார். (அ)

## ஊசி மூலம்...

ணையில் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் அவரது சடலத்தில் மேற்கொள்ளப்பட்ட உடற்கூற்றுப் பரிசோதனையில் கையில் ஊசிமூலம் ஹெரோயின் போதைப்பொருளை ஏற்றியதால் உயிரிழப்பு ஏற்பட்டது என்று அறிக்கையிடப்பட்டுள்ளது.

குறித்த மரணத்துடன் யாழ்ப்பாணத்தில் ஊசி மூலம் போதைப்பொருள் செலுத்திக்கொண்டதால் உயிரிந்தோர் எண்ணிக்கை மூன்றாக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## நெருக்கடியில்...

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எமது அயல் நாடான இலங்கையில் நடப்பவை,இந்தியாவின் பாதுகாப்புக்கு பாதிப்பு ஏற்படும் எந்த வளர்ச்சியாக இருந்தாலும் நாங்கள் மிக மிக கவனமாக அவதானித்து வருகின்றோம்

எவ்வாறாயினும் இந்தியப் பெருங் கடல் இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையில் மற்றொரு முக்கிய புள்ளியாக மாறாது.

இந்தியா தனது தேசிய நலன்களைப் பாதுகாக்க வேண்டும். எனினும் பிராந்தியத்தில் ஏகபோக உரிமை கோர முடியாது.

தற்போதைய பொருளாதார நெருக்கடியில் சர்வதேச நாணய நிதியத்தை சமாளிப்பதற்கு இலங்கைக்கு உதவிய ஒரே அண்டை நாடு இந்தியா மட்டுமே- என்றார். (அ)

ஈழநாடு
Eelanadu

# மரண அறிவித்தல்



## பரமசிவன் சின்னத்தம்பி

மலர்வு 11 . 11 . 1951

உதிர்வு 13 . 08 . 2022

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனி Kirchheim unter Teck Stuttgart, கனடா Toronto ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட பரமசிவன் சின்னத்தம்பி அவர்கள் 13.08.2022 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் சின்னத்தம்பி செல்லாச்சி தம்பதிகளின் அன்பு மகனும், வவுனியாவைச் சேர்ந்த தவம், சரா தம்பதிகளின் அன்பு மருமகனும், கேமா அவர்களின் அன்புக் கணவரும், வர்ஜினி, லக்சி ஆகியோரின் அன்புத் தந்தையும், விக் அவர்களின் அன்பு மாமனாரும், யூலியன் அவர்களின் அன்புப் பேரனும், தியாகராஜா (இலங்கை), மணியம்(கனடா), சிவராசா(லண்டன்), ஆறுமுகநாதன் (நாதன்- கனடா) காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரி, நடராஜா ஆகியோரின் அன்புச் சகோதரரும், தேவி, இந்திரா, ராணி, ரஞ்சி, காலஞ்சென்றவர்களான துரைசிங்கம், பாக்கியலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும், பகீரதன்(பகீ- வவுனியா), காலஞ்சென்ற அகிலன் (அகி- உகண்டா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், ரெபேக்கா, சபிக்கா ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும், ராஜா, பிரதா, ஜனா, பிரபு ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், லிர்ஷிகா, ஷர்வினி, சினேகா, அனோஜன் ஆகியோரின் அன்பு மாமாவும், தியாகராஜா (இலங்கை), மணியம் (கனடா), சிவராசா (லண்டன்), ஆறுமுகநாதன் (நாதன்- கனடா) காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரி, நடராஜா ஆகியோரின் அன்புச் சகோதரரும், தேவி, இந்திரா, ராணி, ரஞ்சி, காலஞ்சென்றவர்களான துரைசிங்கம், பாக்கியலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும், பகீரதன் (பகீ- வவுனியா), காலஞ்சென்ற அகிலன் (அகி- உகண்டா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், ரெபேக்கா, சபிக்கா ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும், ராஜா, பிரதா, ஜனா, பிரபு ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், லிர்ஷிகா, ஷர்வினி, சினேகா, அனோஜன் ஆகியோரின் அன்பு மாமாவும் ஆவார்.

பார்வைக்கு :
Sunday, 21 Aug 2022 5:00 PM – 9:00 PM
Monday, 22 Aug 2022 12:30 PM – 1:30 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada.

கிரியை :
Monday, 22 Aug 2022 1:30 PM – 4:00 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
**நாதன் (சகோதரன்)**

தொடர்புகளுக்கு :
**கேமா - மனைவி** – (+16476576452)
**சிவா - சகோதரன்** – (+14167685757)
**நாதன் - சகோதரன்** –(+14162783343)

# அதிகரிக்கிறது கோவிட் தொற்று! ஒரு வாரத்தில் 42 உயிரிழப்புகள்!!

கொழும்பு, ஓக. 18

கோவிட் பெருந்தொற்றுகாரணமாக ஒரு வாரகால இடைவெளியில் சுமார் 42 மரணங்கள் இலங்கையில் பதிவாகியுள்ளதாக சுகாதார அமைச்சின் உயர் அதிகாரியொருவர் கருத்து தெரிவித்துள்ளார்.

கடந்த ஒரு வாரகாலப் பகுதியில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட கோவிட் தொற்று உறுதியாளர்கள் பதிவாகியுள்ளனர்.

கடந்த 15ஆம் திகதி மட்டும் 129 கோவிட் தொற்று உறுதியாளர்கள் பதிவாகியுள்ளனர்.

இதுவரையில் நாட்டில் மொத்தமாக 668012 கோவிட் தொற்று உறுதியாளர்கள் பதிவாகியுள்ளனர். இந்த ஒரு வார காலப் பகுதியில் 42 கோவிட் மரணங்கள் பதிவாகியுள்ளன.

20 வயதுக்கும் மேற்பட்ட சனத்தொகையில் கோவிட் முதல் தடுப்பூசியை இதுவரையில் 8 மில்லியன் பேர் பெற்றுக்கொண்டுள்ளனர் எனவும் அதிகாரி சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

# இலங்கையில் தனிநபரொருவருக்கு ஒரு மாதத்துக்கு 12444 ரூபா போதும்!

## கூறுகிறது தொகை மதிப்பு திணைக்களம்

கொழும்பு, ஓக. 18

இலங்கையில் தனிநபரொருவர், ஒரு மாதத்திற்கு வசிப்பதற்கு சராசரியாக 12,444 ரூபா போதுமானது என தொகை மதிப்பு மற்றும் புள்ளி விவரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த ஜூன் மாதத்திற்கான அறிக்கையின்படி, தனிநபர் ஒருவரின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய குறைந்தபட்ச மாதச் செலவு (தேசிய ரீதியிலான மதிப்பீடு) 12,444 ரூபா என்று தொகை மதிப்பு மற்றும் புள்ளி விவரத் திணைக்களம் கூறுகிறது.

அதற்கைமய, கொழும்பு மாவட்டத்தில் வசிப்பதற்காக ஒருவருக்கு அதிகபட்சமாக 13,421 ரூபா தேவைப்படுவதாகவும், இது இலங்கையின் மாவட்டமொன்றில் நபரொருவர் தமது அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக செலவிடும் அதிகூடிய தொகை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அதன்படி, கொழும்பு மாவட்டத்தின் வாழ்க்கைச் செலவு தேசிய மதிப்பீடாக 12,444 ரூபாவை விட 977 ரூபா அதிகமாகும்.

எனினும், இந்த அறிக்கையின் பிரகாரம், மொனராகலை மாவட்டத்தில் வசிக்கும் ஒருவருக்கு தனது அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்து கொண்டு அங்கு வசிப்பதற்கு 11,899 ரூபா போதுமானது என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல முற்பட்ட 10 பேர் மன்னார் கடற்பரப்பில் வைத்து கைது!

மன்னார், ஓக. 18

சட்டவிரோதமாக வெளிநாட்டுக்கு செல்ல முயன்ற 10 பேரை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

நேற்று முன் தினம் இரவு தலைமன்னார் - குருசபாடு கடற்பரப்பில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றி வளைப்பின்போது இவர்களை கடற்படையினர் கைது செய்தனர்.

நேற்று முன் தினம் குருசபாடு கடற்பகுதியில் சந்தேகத்திற்கிடமான மீன்பிடிப் படகு ஒன்றை இடைமறித்தபோது கடல் வழியாக வெளிநாடுகளுக்கு செல்ல முயற்சித்ததாக சந்தேகிக்கப்படும் 10 நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவர்களில், படகு ஓட்டுநர்களான இருவர் உட்பட 4 ஆண்கள், 2 பெண்கள் மற்றும்18 வயதுக்குட்பட்ட 04 பேரும் அடங்குவதாக தெரிவிக்கப்பட்டது.

சந்தேகநபர்கள் பேசாலை, உருமலை, கிளிநொச்சி மற்றும் கந்தளாய் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்கள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (அ)

# பௌத்த மயமாக்கலுக்கு எதிராக மட்டக்களப்பில் நேற்று போராட்டம்

மட்டக்களப்பு,ஓக.18

மட்டக்களப்பு மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டுவரும் பௌத்த மயமாக்கல் திட்டம் மற்றும் தமிழர்களின் பொருளாதாரத்தை அழிக்கும் நடவடிக்கைகளை நிறுத்துமாறு கோரி மட்டக்களப்பு, செங்கலடியில் நேற்று ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தமிழ் தேசிய மக்கள் முன்னணி, கால்நடை பண்ணையாளர்கள், பொது அமைப்புகள் இணைந்து இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தன.

மட்டக்களப்பு,செங்கலடி சந்தியில் ஒன்றுகூடிய மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன் பல்வேறு கோசங்களையும் எழுப்பினார்கள்.

ஆர்ப்பாட்டத்தில் 'அத்துமீறிய காணி அபகரிப்பை நிறுத்து,மயிலத்தமடு மாதவனையில் தமிழர்களின் கால்நடைகளை அழிக்காதே, பௌத்தமயமாக்கலை நிறுத்து, உலக வங்க மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி உட்பட பல்வேறு நிதி அமைப்புகள் ஊடாக பெறப்படும் கடன்களைக்கொண்டு தமிழர்களின் பொருளாதாரம் திட்டமிட்டு அழிக்கப்படுவதனால் கடன்களை நிறுத்து போன்ற வாசகங்களை ஏந்தியவாறு போராட்டத்தில் பங்குகொண்டனர்.

தமிழர்களின் போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பின்னர் உலக நாடுகளின் நிதியுடன் இனவாதக் கட்டமைப்பாக செயற்படும் மகாவலி அபிவிருத்தி சபை தமிழர் பகுதிகளில் சிங்களவர்களைக் கொண்டு வன்முறை வழியில் குடியேற்றுவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாக இங்கு குற்றஞ்சாட்டப்பட்டது.

மயிலத்தமடு,மாதவனையில் நூறு வருடங்களுக்கு மேல் கால்நடைகளை தமிழர்கள் மேய்த்து வரும் நிலையில் அப்பகுதியில் உள்ள தமிழ் கால்நடை பண்ணையாளர்களை அகற்றிஅ ங்கு பௌத்த மயமாக்கலை செய்யும் நடவடிக்கைகளை மகாவலி அபிவிருத்தி சபை முன்னெடுப்பதாகவும் இங்கு தெரிவிக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளரும் .மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான செல்வ ராஜா கஜேந்திரன், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் த. சுரேஸ் உட்பட பண்ணையாளர்கள்,பொதுமக்கள் கலந்து கொண்டனர். இதன்போது ஐக்கிய நாடுகள் சபைக்கு அனுப்புவதற்காக தயாரிக்கப்பட்ட மகஜரும் வாசிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 18.08.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.05 மணி : உளவியல் கருத்து -
வழங்குபவர் உளவள துணையாளர்
யாழ் பாவாணன்
07.10 மணி: இயற்கைவழி - எஸ்.உதயசீலன்-
சமுர்த்தி உத்தியோகஸ்தர்



7.15 மணி : கதைவழி அறமொழி
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ - மறுஒளிபரப்பு
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க - நேரலை
**பகல்**
1.00 மணி : நலம்தானா - மறுஒளிபரப்பு
1.30 மணி : சுப்பர் சீன்ஸ் -
ராஜதந்திரம்,பாலக்காட்டு மாதவன்
திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார் - சிறுவர்களுக்கான
நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : வெள்ளித்திரை - மஹறா




**இரவு**
7.00 மணி : சமையல் சமையல்
7.30 மணி : வெள்ளிடை நுட்பம் -
தொழில்நுட்பம் பயன்பாடுபற்றிய நிகழ்ச்சி
8.00 மணி : இரவுச் செய்திகள்



9.00 மணி : கச்சேரி ஆரம்பம் - இசை நிகழ்ச்சி



10.00 மணி : நேருக்கு நேர் - அரசியல் நிகழ்ச்சி

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு
**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா
**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)
**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே
**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்
**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்
**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்
**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்
**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள்
(மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை
(சனி மறு ஒளிபரப்பு)
**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை
(திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம்
(மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்
**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு